வாரப் பதிப்பு விலை சதம் 25

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

குடும்ப சிக்கனத்திற்கு
சிறந்தது!
மில்க்வைற்
நீல பார் சோப்
மில்க்வைற்
வெள்ளை பார் சோப்


புத்தகம் 19 | திருவள்ளுவர் ஆண்டு 1997 வைகாசி திங்கள் 28-ம் நாள் (18-5-1966) புதன்கிழமை [illegible] 25 | இதழ் 51

# உள்ளூராட்சி ஊழியருக்குச் சலுகை

## இழந்த சம்பளத்தை மீண்டும் பெறுவர்


உள்ளூராட்சிமன்றசேவையில் 1-1-6 க்குமுன்னர் சேர்ந்த சகல ஊழியர்களும் பழைய சேவையாளர்களாகக் கணிக்கப்படவிருக்கிறார்கள். இதற்கான மாற்றங்களை உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் செய்து வருகிறார். அமைச்சரின் முடிவை உள்ளூராட்சிமன்ற சேவை ஆணைக்குழுவும் (L. G. S. C.) ஏற்றிருக்கிறதென்று நம்பகமாக அறியப்படுகிறது.

சிங்களம் மட்டும்சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து 26-9-1956க்கு முன்னர் அரசாங்க சேவையில் சேர்ந்தவர்கள் பழைய சேவையார்களெனவும், அதற்குப் பின்னர் அரசசேவையில் சேர்ந்தவர்கள்புதிய சேவையாளர்களெனவும் கணிக்கப்பட்டு வருகிறார்கள்.



பழைய சேவையாளர்களை சிங்களம் மட்டும் சட்டம் எந்தவகையிலும் கட்டுப்படுத்த மாட்டாது என்றும் அவர்களின் சம்பள உயர்வுகளையும், பதவி உயர்வுகளையும் சிங்கள மொழித் தேர்ச்சிபெறவில்லையென்ற காரணத்தினால் தடுத்து நிறுத்துவது தவறு என்றும் கடந்த ஆண்டில் அமைச்சரவை தீர்மானித்திருந்தது வாசகர்கள் அறிந்ததே. கோடீசுவரன் வழக்குத் தீர்ப்பும் இதையே வலியுறுத்தி நிற்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

(9-ம் பக்கம் பார்க்க)



இலங்கை வந்திருந்த இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே வே செல்வநாயகம் அவர்களின் இல்லத்துக்குச் சென்று தமிழரசுத் தந்தைக்கு தமது வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டார் தமிழ்மேல் தணியாத பற்றுக்கொண்ட இலட்சிய நடிகர், தமிழ் காக்கும்தலைவனை அணைத்தபடி இங்கு காணப்படுகிறார்.

படம்: ராஜப்பன்.

# உணவுப் பொருட்கள் கலப்படம் அதிகரிப்பு

## மாநகரசபை நிர்வாகம் மீது பொது மக்கள் அதிருப்தி

யாழ்ப்பாணத்தில் விற்பனையாகும் இறைச்சி, பால் முதலிய உணவுப்பொருட்களில் கலப்படம் அதிகரித்திருப்பதன் காரணமாக யாழ்ப்பாண மக்கள் மாநகரசபை நிர்வாகத்தின்மேல் அதிருப்தி அடைந்துள்ளார்கள்.

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குள்ளிருக்கும் சில இறைச்சிக் கடைகளில் இப்பொழுது சுத்தமான நல்ல இறைச்சி கிடைப்பதில்லை யென்று இறைச்சி பாவனையாளர்கள் நமது நிருபரிடம் கூறியுள்ளார்கள். சில இறைச்சிக் கடைகளில், மக்கள் சாப்பிடாத சில மிருகங்களின் இறைச்சிகளும் கலப்படம்செய்துவிற்கப்படுவதாகவும் இதுபற்றி மாநகர சபை எந்தவித நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லையென்றும் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக நமது நிருபர் மேலும் எழுதியிருப்பதாவது:- சில மாதங்களுக்கு முன்னர் இப்படியான குறைபாடுகள் எதுவும் இல்லையென்றும், காரணம் உணவு சோதனைக்கு பொறுப்பாக இருந்த அதிகாரியின் உசார் நடவடிக்கையே என்றும்

(9-ம் பக்கம் பார்க்க)

# திரு. ஜீ. ஜீ. திட்டத்திற்கு திரு. ஆர். ஜீ. ஆதரவு

யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் திட்டங்களுக்கு இப்பொழுது சில வட்டாரங்களில் ஆதரவு பெருகி வருகிறதெனத் தெரிகிறது. குறிப்பாக அவரின் இந்துப் பல்கலைக் கழகத் திட்டத்திற்கும், அரசாங்கத்திலிருந்து வெளியேறுவேன் என்ற திட்டத்திற்கும் நல்ல ஆதரவு இருக்கிறது.

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் இந்துப் பல்கலைக் கழகத் திட்டத்தை ஆதரித்து தம்பதேனியாப் பிரதிநிதி திரு. ஆர். ஜீ. சேனநாயக்கா பாராளுமன்ற வட்டத்தில் பிரச்சாரம் செய்யத் தொடங்கியிருக்கிறார்.

கடந்த பாராளுமன்றக் கூட்டத்தின் போது பாராளுமன்றத்திற்கு வெளியில் எம். பி. களிடையே நடந்த உரையாடலில் திரு. ஆர். ஜீ. சேனநாயக்கா 'பொன்னம்பலம் கேட்பது தமிழ்ப் பல்கலைக் கழகமல்ல இந்துப் பல்கலைக்கழகமே, நாம் அந்தத் திட்டத்தை ஆதரிக்க வேண்டும். மேலை நாட்டு கிறிஸ்தவ ஆதிக்கத்திலிருந்து இலங்கையின் கல்வித் துறையை விடுவிக்க வேண்டும் தமிழரசுக் கட்சிக்கெதிராக பொன்னு இந்துக் கோரிக்கையை எழுப்பியிருப்பது நல்லது" என்று கூறியிருக்கிறார்.

இந்த உரையாடலை 'ஒப்சேவர்' (11-5-66) பத்திரிகையும் பிரசுரித்திருக்கிறது.

திரு. ஜீ. ஜீ. யின் மற்றொரு திட்டத்திற்கு அரசாங்கக்கட்சிப் பின் வரிசை உறுப்பினரிடையே ஆதரவு பெருகிவருகிறது.

அரசாங்கக் கட்சிப் பின்வரிசைப் பா. உறுப்பினர்கள் சிலர் திரு. ஜீ. ஜீ. கடந்த மே நாள் அன்று யாழ்ப்பாணத்தில் வெளியிட்ட கருத்துக்கு ஆதரவான முறையில் கலந்துரையாடினார்கள்.

'பொன்னு தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறப் போகிறாராமே. அதனை உடனடியாகச் செய்யும்படி அவரிடம் கூற வேண்டும்' என்

(9-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

அடுத்த இதழ் வெளியூரில் 25-5-66 திகதி காலை தலை நகரில் 24-5-66 திகதி மாலை கிடைக்கும்




**எஸ்.பொன்னுத்துரை.**

இராசவள்ளிக் கிழங்குக் களியிலே விரலை வைத்ததும் பொசுக்குவது போலச்சுட்டது.

'என்ரை நாக்கைப் பொசுக்கி அனுப்ப வேணுமெண்டு நினைச்சிருக்கிறீரோ?'

'நீங்கள்எதிலும் ஒரு சுறுக்கர்தான். ஆறுதலாகச் சாப்பிடுங்கோவன் சுடச்சுடஎண்டாத்தான் ருசியா இருக்கும்...' என்று கூறியபடி கரண்டியாக உபயோகிப்பதற்கு 'நுங்குப் பனுவில்' ஒன்று கொண்டு வந்து கொடுத்தாள்.

அதைப்பெற்றுக்கொண்டு 'எங்கை பறக்கிறாய்?' என்று அவள்கையை இழுத்துத்தன் பக்கத்தில் இருக்கச் செய்தார்.

'எனக்குத்தெரிஞ்சுதானே தோய்ஞ்சனான். பயணமும் வைச்சிட்டு, நானும் பின் விறுந்தையிலை குந்தியிருந்தால் நீங்கள் 'சள்சள்' எண்டுதான் எரிஞ்சு விழுந்திருப்பியள்...' என்று கூறியபடி அமர்ந்தாள்.

களியைத்தானும் புசித்து, அவளுக்கும் ஊட்டினார். 'இதென்னகுழந்தைப்பிள்ளை மாதிரி... ஆரேன் கண்டாலும்...போதுமப்பாபோதும்...' என்று நாணிக் கோணியவாறே உண்டாள். கொழும்பில் தனிக் குடித்தனம் நடத்திய காலத்தில், ஒரே கோப்பையிலே சோறைக் குழைத்து, அவர் அவளுக்கும், அவள் அவருக்குமாக ஊட்டிய காட்சிகள் அவளுடைய மனத்திரையில் விரிகின்றன. ஒரு தடவை 'என்ரை ராசாத்திக் குஞ்சு' என்று அவள் கன்னத்தையும் தடவி, கூந்தலையுங் கோதிவிட்டார். ஏமாற்றத்தின் வெங்காங்கை பெருமூச்சாக அவள் மீதுபட்டது. அவளுக்கும் ஏமாற்றமே...உணர்ச்சி மேலிட, கழிவு ஸ்கலிதம் அருவருப்பைஊட்டுகின்றது. இருப்பினும், 'பாவம், இன்டைக்குப் பயணம்' என்னும் பட்ச உணர்வு அருவருப்பை விழுங்கிவிட்டது.

உரசல் இன்பத்திற்குக் குறுக்கே நிற்பது போல, பாடசாலைக்குச்சென்றிருந்த பிள்ளைகள் மீண்டார்கள். மிகுதியிருந்த களியைப் பிள்ளைகளுக்கும்ஊட்டித் திருப்திகண்டார் செந்தில்நாதன். இதற்கிடையில் சிவலிங்கதாரும் மற்றவர்களும் அனுப்பி வைத்த பார்சல்களும் வந்து சேர்ந்தன.

வேட்டியை மாற்றி மடித்து வைத்துவிட்டு, காற்சட்டையை அணிந்துகொண்டார்.

'இண்டைக்கு மெயிலிலை சரியான கூட்டமாத்தான் இருக்கும். எல்லாரும் அள்ளுப்பட்டு வருவினம்... வாறன் ரீலை வந்திருந்தாலும் இவ்வளவு நாளைக்கு ஒரு 'பேத்' புக் பண்ணியிருக்கலாம்...என்ன செய்யிறது?'

'அண்டைக்கு ஒரு சுதந்திரன் பேப்பர் அவனிட்டை அடிச்சுக் கொண்டந்து உங்கை போட்டனான். அதையும் எடுத்து வையும். விரிச்சுப்போட்டு எங்கையெண்டாலும் படுக்கலாம்...'

'எடி, புள்ளை...ஆறு மணிக்கல்லே பஸ் ஒரு ஐந்து பத்து நிமிஷம் முந்திப்போய் நிக்க வேண்டாமே?...நான் சாமிக்குக் கப்பூரமும் கொளுத்திட்டுவந்துட்டன்...நீ சோத்தைக்கட்டு...வாழைஇலையை வாட்டித்தான் கட்ட வேணும்... அடுப்புக்கை தணல்இருக்கு...'

'அந்தப் பேப்பரிலை ஒரு துண்டு எடுத்தா... ஓ, ஓ, கறிக்கு மேலாலையும் ஒரு அகப்பை சோறு போடு... வடிவாக் கட்டு... பேந்து பிஞ்சுபோகும்...'

இத்தகைய ஆர்ப்பாட்டங்களுடன் கட்டப்பட்ட சாப்பாட்டுப் பார்சல் வந்துசேருகின்றது.

'மேசையிலை வையும் அந்தக் கடைசியாத்தான் 'கிற்பாக்'குக்குள்ளை எடுத்து வைக்கவேணும்...'

நேரம் நெருங்க நெருங்க மறந்து போய்விட்ட சாமான்கள் பலவென்ற பிரமை நீள்கின்றது.

அன்னலட்சுமியும், செல்லப்பாக்கிய ஆச்சியும் பறந்து பறந்து எல்லாச் சாமான்களையுங் கட்டுகிறார்கள். ஊராரின் சாமான்கள் கொண்ட ஹோர்லிக்ஸ் பெட்டி அவற்றின் மேல் சின்னப் பார்சல்கள் எல்லாவற்றிற்கும் மேலாக முருங்கைக்காய்க் கட்டு, எல்லாம்விழுந்திடாமலிருப்பதற்குப் பக்குவமாகக் கட்டப்பட்டன. சாப்பாட்டுப் பார்சலை எடுத்துக் 'கிற்பாக்'கிற்குள் திணித்து மூடினார். பயணச் சாமான்கள் தயாராகக் காத்திருந்தன.

'நேரமிருக்கப்பா... ...பனைக்கு அங்காலைதானே சாப்பாட்டை அவிழ்த்துச் சாப்பிடுவியள். இந்தக் கோப்பியைக் குடியுங்கோ...' என்று கோப்பியைக்கொண்டுவந்து கொடுத்தாள் அன்னலட்சுமி.

'நல்லெண்ணெய்ப் போத்தலை பாக்குக்குள்ளை எடுத்து வைச்சனியே புள்ளை?'

'ஓம்.'

'உடம்பிலை நல்ல சூடு இருக்கு...முழுக்கை ஒழுங்காக் கவனிக்கச் சொல்லு புள்ளை...' என்று சொல்லியபடி தன் முந்தானை முடிச்சிலிருந்த காசைஅவிழ்த்து அன்னலட்சுமியிடங் கொடுத்தாள் அதிலே ஒரு பத்து ரூபாய்த்தாளும் மிகுதி சில்லறைகளும் இருந்தன. 'தட்டுப்' படாமல் கொழும்பு போய்ச்சேர அவருக்கு எவ்வளவுபிடிக்கும்' என்பது செல்லப்பாக்கிய ஆச்சிக்குக் கணக்காத் தெரியும். காசை எண்ணுமலே தன் 'பக்கெட்'டில் பத்திரமாக வைத்தார்.

பிள்ளைகள் பயணக்காசு வாங்க நிற்கிறார்கள். மாலினிக்கு இருபத்தைந்து சதமும், மற்றும் மூவருக்கும் பத்துப் பத்துச் சதயாகவும் ஐம்பத்தைந்து சதம் துண்டுவிழுகின்றது. 'கவனமாப் படிக்க வேணும்' என்று புத்தி சொல்லி உச்சிமோந்து விடுகிறார்.

'அடுத்த வாட்டி இவனும் பயணக்காசுக்கு நிப்பான்' என்று கூறியபடி ஜெயகாந்தனை ஒக்கலையில் தூக்கிவைத்தாள் அன்னலட்சுமி.

'பொழுது படேல்லை. நீ தோய்ஞ்சனிதானே..பறவாயில்லை...நீதான் படலையில்லை போய் முழுவியளத்துக்கு நில்...' என்று அன்னலட்சுமியிடம் செல்லப்பாக்கிய ஆச்சி கூறினள்.



தூக்க இயலாத சுமையுடன் புறப்பட்ட செந்தில்நாதன் அன்னலட்சுமியில் 'முழி'த்து' படலையைத் தாண்டி, ரோட்டிற்கு இறங்கினார்.

'இவன் உங்கடை முகத்தைப் பார்த்துச் சிரிக்கிறான்...'

சாமான்களைக் கீழே வைத்துவிட்டு, இங்கை வாடா வடுவா' என்று செல்லஞ்சொல்லி, ஜெயகாந்தனைக் கையில் ஏந்தினார். ஒரு தடவை அவனைத் தலைக்கு மேலே எறிந்து பிடித்துக் கொண்டார் 'வயிறு தொங்கிப் போமல்லே?' என்று அன்னலட்சுமி விளக்கத் தன்னுடைய விளையாட்டைநிறுத்தி, மகனுக்கு முகத மழை பொழிந்தார். திருப்பிக் கொடுக்கும்பொழுது அன்னலட்சுமி 'கடைக் குட்டி'யை ஒரு கன்னத்தில் முத்தமிட, அவர் மறுகன்னத்தில் முத்தமிட, இரண்டு இலட்சியக் காதலர்களின் ஈடேறாக் கலவியின் முத்தப் பாலமாக ஜெயகாந்தன் திகழ்ந்தான். அப்பொழுது அவருடைய கையொன்று அவளுடைய தனபாரத்தை இலேசாகத் தழுவியது. மகனை முத்தமிடும் இந்நிலையில் இருவரும் சில கண நேரம் லயித்தனர். பிரயாண நிலைவுஊர பிரிவு ஏற்பட்டது.

'இனி, எப்ப திரும்ப வாரது?' என்று அன்னலட்சுமி கேட்டாள்.

'வாறனேயப்பா...' என்று மேலாகச் சொல்லிக்கொண்டே சாமான்களைத் தூக்கினார்.

'உன்னுனையப்பாஉடம்பை வடிவாப் பாருங்கோ...மிச்சம் பிடிக்கிறன் எண்டு சாப்பாட்டைக் கவனிக்காமல் விடாதேயுங்கோ... அடுத்த முறை குறைஞ்சது ஒரு கிழமை லீவிலை வரவேணும்...' என்று அன்னலட்சுமி சொல்லிக்கொண்டிருக்க, முகத்தை மந்தகாசத்தில் அலர்த்தி அவளைப்பார்த்து, 'அப்ப நான் வாறன்' என்று கூறி பஸ் நிலையத்தை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

பிரிவின் மெல்லிய கரும் ரேகையொன்று அவர் உள்ளத்திற் கவிந்தது அதை மறைப்பதற்காக 'சாமத்திய'ச் சடங்கு வீட்டிலிருந்து 'லவுட் ஸ்பீக்கர்' பரபபும் பாட்டிலே மனதை ஒன்றவிட்டார்.

'வென்றிலன் என்ற போதும்...'

பருத்தித்துறையில் சடங்கு நடைபெறுகின்றது...செந்தில் நாதன் கொழும்புநோக்கிப் பயணச்சடங்கை மேற்கொள்ளுகின்றார்.

(முற்றும்)

## நமது குறிப்பு

பொங்கல் மலரிலே ஆரம்பமான சடங்கு என்னுந் தொடர் கதை இவ்விதழுடன் முற்றுபெறுகிறது. இதனைப் பிரசுரிக்க திரு. எஸ். பொன்னுத்துரை அவர்கள் நமது பத்திரிகையைத் தேர்ந்தெடுத்தமையை மகிழ்ச்சிக்குரிய எதிர்பாராத நிகழ்ச்சியென்றே நாம் கருதுகின்றோம். தமிழ் இனத்தின் மத்தியதர வகுப்பின் கீழ்த்தட்டிலே ஆதிக்கஞ் செலுத்தும் சாதாரண மக்கள் சிலரைப் பற்றிய நெருங்கிய — ஆழமான நோக்கின் பலிதமாகவே இக்கதை அமைந்துள்ளது. வாழ்க்கையை நேர்மையாகவும், உண்மையாகவும் சித்திரிக்குங் கதைகளே ஈற்றில் வாழ்வுபெற்று நிலைக்கின்றன. இக்காரணங்கள் பற்றியே சுய அனுபவத்தின் சித்திரிப்போ என்ற மயக்கத்தை ஊட்டவல்லதாகச் சடங்கு அமைந்துள்ளது. இக்கதை யாழ்ப்பாணவாழ்க்கையின் சில நிகழ்ச்சிகளைச் சமத்காரமாகச் சித்திரிக்கின்றது என்பதுடன், பிரய்ட் போன்றோர் மனோதத்துவம், மனித இயல்புகள் சம்பந்தமாகக்கூறியுள்ள சில கோட்பாடுகளையும் புனர்விசாரணை செய்கின்றது.

'மனிதனை ஊக்குவிக்கின்ற உட்கோள்கள் எவை?' என்ற வினவுடனேயே சடங்கு தொடங்கிற்று. 'அடைபட்ட உணர்ச்சிகளை வெளியேற்றுதலும், புலால் நுகர்ச்சியும் மனிதனை இயக்கும் உட்கோள்கள்' என்ற பிராய்ட் கூற்றையும் 'மனித இயற்கை', 'இயல்புணர்ச்சி' என அவை குறிப்பிடுபவை உண்மையிற் சில பண்பாடுகளினுல் உருவாக்கப்பட்ட தன்மை என்பதை அவதானிக்கத் தவறிவிட்டனர்' என்று பிரய்டை மறுத்துரைக்கும் இயன்சட்டியின் கூற்றையும் மனதிற் பதித்துக்கொண்டு சடங்கை வாசிக்கும்படி ஆசிரியர் ஆற்றுப்படுத்தினார்.' பூமாலை நாரிலே தொடுக்கப்படுகின்றது. இருப்பினும் மாலையிலுள்ள நார் கண்களுக்குத் தெரிவதில்லை. அதேபோன்றுதான் சடங்கிலே, யாழ்ப்பாணத்தில் வாழும் சில கதாபாத்திரங்களுடைய வாழ்க்கையின் ஐந்து நாட்கள் நடைபெறும் வாழ்க்கையின் நிகழ்ச்சிகளென்ற பூக்களைத் தரிசிக்கின்றோம் இந்தமலர்களை மாலையாகத் தொடுக்கும் நாரை ஆசிரியர் கலை நுட்பத்துடன் மறைத்து வைத்துள்ளார்.

இத்தொடர் கதைக்குப் பரந்த ஆதரவும், சில பிரதிகூல அபிப்பிராயங்களும் நிலவின. 'பொன்னுத்துரை அவர்களுடைய நேர்மையான படைப்புக்கள் எவை தாம் வாதப் பிரதிவாதங்களுக்கு உட்படுத்தப்படாது இருந்தவை!" என நாம் கேட்க விரும்புகின்றோம். உண்மை எப்பொழுதும் சம்பந்தப்பட்டோரைச் சுடும். உண்மையாகவும் நேர்மையாகவும் ஓர் எழுத்தாளனுடைய வாழ்க்கையைச் சித்திரிக்கும்பொழுது, பலவினங்கள் பற்றிய மூட்கள், குருட்டுத்தனமான வர்க்கப்

(14-ம் பக்கம் பார்க்க)

**ஆடவர்களுக்கு மட்டும்....**

கல்யாணப்! கட்டப் போகும் ஆடவர்களே! ஆண்மைக் குறைவை நிவர்த்தி செய்து நீடிய இன்பம் அனுபவிக்க இதோ ஓர் 'இரகசிய மருந்து'. விபரங்கட்கு எழுதுங்கள்.

வைத்தியாச்சாரி

**பி. எம். திசாநாயக்க,**

தபால் பெட்டி : 1281,

கொழும்பு.




'சித்தார்நாதன்',
சித்தன் கேணி.

கே: அண்மையில் இடதுசாரிக் கட்சிகளிலிருந்து பொ. கட்சிக்குள் நுழைந்தவர்கள் பற்றி தங்கள் கருத்து என்ன?

ப: விரைவில் கட்சியை இரண்டுபடுத்தி பொ. வின் ஆதரவாளர்களையும் தட்டிக்கொண்டு வெளியேறி விடுவர்.

ஃ

எ. எம். ஹனிபா,
நிந்தவூர்-3.

கே: குயுக்தியாரே இன்று லெனின், இட்லர் உயிருடன் இருந்தால்...?

ப: இட்லர் உயிருடன் இருந்தால் ரஷியாவை விழுங்கியிருப்பார். லெனின் உயிருடன் இருந்தால் ஜெர்மனியை விழுங்கியிருப்பார்.

ஃ

'தமிழ் செல்வி',
சுதுமலை.

கே: மலாயாத் தமிழ் மாநாட்டில் பெரும்பாலோர் தமது சொற்பொழிவை ஆங்கிலத்தில் நிகழ்த்தினார்கள், இதற்கு ஏன் தமிழ்மாநாடுஎன்று பெயர் சூட்டினார்கள்?

ப: எல்லா உரைகளும் தமிழ்மொழி ஆராய்ச்சியைப் பற்றியதாக இருந்ததால்.

ஃ

ஆர் குருநாதன்,
வட்டகொட.

கே: திருமதி இந்திராகாந்தி திருமணம் செய்திருக்கிறாரா?

ப: அவரது மகனுக்கே திருமணம்செய்யும் பருவம் வந்துவிட்டதே.

ஃ

சி. சு பொன்னுத்துரை,
சி. பொ. சோமசுந்தரம்,
கொழும்பு-14.

கே: தேசிய அரசாங்கத்தை வெறுத்த கே எம். பி. இராசரத்தினா தம்பதிகள் மீண்டும் தேசிய அரசாங்கத்தில் நுழைவதன் காரணம் என்ன?

ப: எதிர்க்கட்சியிலிருந்து என்னசெய்யமுடியும்? தேசிய அரசாங்கத்தில் சேர்ந்தாலாவது மக்களுக்கு ஏதேனும் நன்மை செய்யலாமே.

ஃ

செல்வி......
உடப்பு.

கே: தேர்தல் சந்திரம்என்று கூறிக்கொண்டு நேர்மையற்ற முறையில் வாக்குகளைப் பெறுவோர் பற்றி உங்கள் கருத்து?

ப: ஜனநாயகம் வளர்ச்சி பெருத நாடுகளில் அத்தகைய நேர்மையற்ற முறையில் வாக்குகளைப் பெற இடமளித்துவிட்டு, பின்னர் நீதிமன்றத்தில் அவற்றை ஆட்சேபிப்பதற்கும் ஜனநாயகம் இடமளிக்கிறதே! இதற்கு அவர்களைக் குறைகூறிப் பயனென்ன? ஜனநாயகத்தையல்லவா நொந்துகொள்ள வேண்டும்?

கே: பெண்கள் மனம் விட்டு பழகினால் ஏன் அதை ஆண்கள் தவறாகபுரிந்துகொள்கின்றனர்?

ப: கொக்குக்கு ஒரே புத்திதான்-அம்மாதிரிதான் ஆண்களும்.

ஃ

கே. எம். சிங்காரம்,
பதுளை.

கே: 'புனர்வாழ்வு, புனர்வாழ்வு' என்று திரு. தொண்டமான் கூச்சலிடுவதுபற்றி என்ன சொல்கிறீர்கள்?

ப: 'தொண்டமானை நம்பி அந்தமானுக்கு போங்கள்!' என்ற புதிய கோஷம் தோட்டங்களில் இன்றுஎதிரொலிப்பதற்குக் காரணம் இந்த புனர்வாழ்வுக் கூச்சல்தான்.

இ. மகேந்திரன்,
அல்வாய்தெற்கு.

கே: திரு. பொன்னம்பலம், தமிழ்மக்களின் ஆயுட்காலத் தலைவராக மாற, அவர் தன்னை எவ்வெவ் வழிகளில் மாற்றிக் கொள்ளவேண்டும்.

ப: எப்படிமாற்றிக்கொண்டாலும் 'ஆயுட்காலத் தலைவராக' முடியாது.

ஃ

செல்வி. ஜெயா சபா,
மல்லாகம்.

கே: தற்பொழுது சிறிமா அம்மையாருடைய கூட்டாளிகளின் அடுத்த திட்டம் என்ன?

ப: தேசிய அரசாங்கத்திலுள்ளவர்கள்தான் வகுப்புவாதிகள் என்று கூச்சலிடுவது அவர்களின் அடுத்ததிட்டம்.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
த. பெ. இல. 1181
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

'அபலை',
எவிஸ்டன்.

கே: நான் என் அத்தை மகளைக் காதலித்தேன். அவர் என்னைத் திருமணம் செய்வதாக சொல்லிவிட்டு இப்போ வேறொரு பெண்ணைத் திருமணம் செய்யத் தயாராகிறார் நான் என்செய்வது?

ப: எழுத்துமூலம் உங்களுக்கு அவர் வாக்குறுதி அளித்திருந்தால், நீதிமன்றம் மூலம் அவரிடம் நஷ்டயீடு கோருங்கள். அதனால்வழிக்கு வந்தாலும் வரக்கூடும்!

ஃ

ச. பாலச்சந்திரன்,
வியாபாரிமூலை.

கே: பொ. கட்சியை ஐக்கியத்திற்காகவும், சோசலிசத்திற்காகவும் பாடுபடுவதென்று கண்டுபிடிக்க தோழர்களுக்கு இவ்வளவு காலம்சென்றதேன்?

ப: இது ஒரு மார்க்சிய உபாயம். இடதுசாரிகளின் வகுப்புவாதப் போக்கின் காரணமாக அவர்களைவிட்டு விட்டுப் பிரிந்த தொழிலாளர்களைத் தமிழரசு முகாமுக்குச் செல்லாமல் தடுப்பதற்காகவே இந்தத் தந்திரம். அவர்களை பொ. கட்சியினூடாக மீண்டும் தங்களின் வலைக்குள் இழுத்துப் போட்டுக்கொள்வதே திட்டம்.

ஃ

மணிமாறன்,
சென்வியோனுட்ஸ்.

கே: மலையகத்தில் இ. தொ. காங்கிரஸ் சரிவதின் காரணமென்ன?

ப: இ. தொ. கா. தலைவரின் 'புனர்வாழ்வு' கோஷம் தான் அதற்குக் காரணம். ஒப்பந்தப்படி ஐந்தரை லட்சம் தோட்ட மக்கள் வெளியேறிவிட்டால், இ. தொ. கா. வில் அதன் தலைவர் மட்டுமே எஞ்சியிருப்பார்.

கே: தமிழகத்தில் எதிர்வரும் தேர்தலில் தி மு கழகம் மந்திரிசபை அமைக்கும் என்று பலர் கூறுகிறார்களே?

ப: ஆம், அண்மையில் இங்கு வந்திருந்த எஸ். எஸ். ஆரும் அதையே கூறினார்.

ஃ

நீதியரசன்,
பலாங்கொடை.

கே: நானும் என் நண்பன் ஒருவரும் ஒரு பெண்ணை காதலிக்கிறோம், காதலியும் இரண்டு பேரிடமும் நேசமாகப் பழகிவருகிறாள். என் நண்பனை எப்படியாவது அகற்றிவிடவேண்டும் என்பது என் நோக்கம். அதற்கு என்ன செய்யலாம்?

ப: நண்பனை அகற்றிவிட்டால் அப்பெண்ணும் உங்களைவிட்டு அகன்றுவிட மாட்டாள் என்பது என்ன நிச்சயம்! அவள் இருவரையும் காதலிக்கவில்லையோ, என்னவோ? அவள் நண்பனைக் காதலிப்பதாக இருந்தால் நீங்களே உங்களை அகற்றிக் கொள்வதுதான் நன்று.

ஃ

இ. திருஞானசம்பந்தன்,
ஸ்பிரிங்வெல்லி.

கே: கிரிமினல் சட்டதிருத்த மசோதாமீது மார்க்கசியவாதிகளுக்கு திடீரென விருப்பம் ஏற்பட்டுள்ளதே; அதன் மர்மம் என்ன?

ப: இல்லை, இம்மசோதாவை அவர்கள் எதிர்க்கிறார்கள். வகுப்புவாதப் பிரசாரத்தைத் தடுக்கும் மசோதாவை மட்டும் தாங்கள் ஆதரிப்பதாக கம்யூனிஸ்ட் தலைவர் சவடால் அடித்துள்ளார்.

கே: இந்தோனேஷிய ஜனாதிபதி டாக்டர் சுகார்னோ ஆயுட்கால ஜனாதிபதியாக இருக்கக்கூடாது என இந்தோனேஷியத் தலைவர் ஒருவர் கூறியுள்ளாரே. காரணம் என்ன?

ப: இந்தோனேஷியாவில் கம்யூனிஸ்டுகளும், அவர்களின் ஆதரவாளர்களும் மிகத் திறமையான ஒரு திட்டத்தின் கீழ் படிப்படியாக ஒழிக்கப்படுகிறார்கள், கடைசிப் பலிதான் சுகார்னோ. அதுவும் இப்பொழுது ஆரம்பமாகியுள்ளது.



சரியான கணக்கு

அடுத்த தேர்தலில் தி. மு. க. வுக்கு 50 ஸ்தானங்களே கிடைக்கும்.

— காமராசர்.

— காமராசர் கணக்குப் பொய்த்ததில்லை. சென்ற தேர்தலின்போது தி. மு. க. வுக்கு 15 தான் கிடைக்கும் என்றார். 50 ஸ்தானம் கிடைத்தது. இப்பொழுது 50 கிடைக்கும் என்கிறார். 150ஸ்தானங்கள் நிச்சயம் கிடைக்கும் என்கிறார் ஒரு தி மு. க. தோழர் கணக்கு சரிதானே!

ஒருநாள்
வேலை நிறுத்தம்

வாயாடி மனைவியின் நாக்கை அவள் கணவன் துண்டித்தான்.

— செய்தி.

— மனைவிகளின் உரிமைகளைப் பறித்த ஆண் வர்க்கத்தின் அநீதியை எதிர்த்து 'சமையல் செய்வதில்லை' என்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்துக்கு 'வாயாடி மனைவிமார் சங்கம்' ஒழுங்குகள் செய்து வருவதாகக் கேள்வி.

விஷம் தேனாகிறது

ராஜாஜி ஒரு 'விஷ' வெற்றி.

— அனந்தநாயகி.

— 'காங்கிரசாருக்கு விஷமாகப் படும் அந்த வெற்றியை மற்றவர்களுக்குத் தேனாகிவிடுகிறது என்கிறார் ஒரு ராஜாஜி ஆதரவாளர்.

துள்ளிய மாடு

மீன் பிடித் தொழில் அபிவிருத்தி மாநாட்டு அழைப்பிதழை தமிழிலும் திரு. கே. எம். பி. இராசரத்தினா அனுப்பினார்.

— செய்தி.

— துள்ளிய மாடு பொதி சுமக்கும் என்பது தமிழ்ப் பழமொழி.

அவரும்
வெளியேறுவாரா?

தனித் தமிழ் நாட்டில் தமிழர்களைத் தவிர வேறு யாரும் இருக்கக் கூடாது.

— பெரியார் ஈ. வெ. ரா.

— அப்படியானால் அதில் கன்னடரான ஈ. வே. ரா.வும் தமிழ் நாட்டைக் காலி செய்யவேண்டி வருமே என்கிறார் தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழரல்லாத ஒருவர்.


இளவட்டம் கவலை

பஸ்களில் பெண்களுக்கு பிரத்தியேக இடம் ஒதுக்கப்படும்.

— செய்தி.

— பெண்களின் சமஉரிமை பறி போகிறதே என்று கண்ணீர் வடிக்கிறார் ஓர் இளவட்டம்.

சிறந்தது! சிக்கனமானது! சிந்தனையூட்டுவது!




காரம், மணம், குணம் நிறைந்த யானை பீடி ஸ்பெஷல் புகைப்போருக்கு புத்துணர்ச்சியையும், உற்சாகத்தையும் கொடுக்கவல்லது. தொழிலாளிகளும், திறமைசாலிகளும் தங்கள் ஊதியத்திற்கேற்ப, சிறந்த புகை பிடிக்க யானை பீடியையே புகைக்கிறார்கள். பூரண திருப்திக்கு யானை பீடி ஸ்பெஷலே புகையுங்கள்.

யானை பீடி ஸ்பெஷல்

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்:

யானை பீடி கம்பெனி,

62, மெசெஞ்சர் வீதி, கொழும்பு-12.
தொலைபேசி : 7651

# இ. தொ. காங்கிரசிற்குள் கருத்து வேறுபாடு

## தோட்டப் பாடசாலைகள் தேசியமயமாக்குவதில் இரண்டுபட்ட அபிப்பிராயம்

தோட்டப் பாடசாலைகளை அரசாங்க உடமையாக்க வேண்டும் என்ற பிரசினையில் இலங்கை தொழிலாளர் காங்கிரசுக்குள் பலத்த கருத்து வேறுபாடு இருப்பதாகத் தெரிகிறது. கடந்த வாரம் நடை பெற்ற அரசாங்கக்கட்சிப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தின் போது இந்த உண்மை தெரியவந்திருப்பதாக அறியப் படுகிறது.

தோட்டப் பாடசாலைகளை அரசாங்க உடமையாக்க வேண்டும் என்று இ. தொ. காங்கிரஸ் தலைவர்கள் நீண்ட காலமாகக் கூறிவந்திருக்கிறார்கள். இது பற்றிய தீர்மானங்களையும் அவ்வப்போது நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பது வாசகர்கள் அறிந்ததே.

தோட்டப் பாடசாலைகளைத் தேசியமயமாக்க வேண்டுமென்று இ. தொ. காங்கிரசின் மூதவை உறுப்பினரான திரு. யேசுதாசன் மீண்டும் 15ம் திகதி வலியுறுத்தியிருக்கிறார்.

இதற்கிடையில், கடந்த வாரம் நடைபெற்ற அரசாங்கக் கட்சிப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் தோட்டப் பாடசாலைகளை அரசாங்கஉடமையாக்க வேண்டும் என்று கல்வி வெள்ளை அறிக்கை மீது வாதிக்கையில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினாராம். அப்பொழுது பிரதமர் டட்லி சேனநாயக்கா எழுந்து அரசாங்கத்திடம் அதற்கான பண வசதி இப்பொழுதில்லையென்றும் தனியார் பாடசாலைகளை ஒழுங்கான முறையில் சகல வசதிகளுடனும் நடாத்துவதற்கான முறையில் சில ஒழுங்குகளைச் செய்யலாம் என்றும் கூறினாராம்.

பிரதமரின் கருத்தை நியமன உறுப்பினர் திரு. வி. அண்ணாமலை மறுத்தபொழுது பிரதமர் 'இந்த முடிவிற்கு திரு. தொண்டமானும் சம்மதம் தெரிவித்திருக்கிறார்' என்று சொன்னதாகத் தெரிகிறது. இதைத் தொடர்ந்து இ. தொ. காங்கிரசுக்குள் பலத்த கருத்து வேற்றுமை ஏற்பட்டிருப்பதாகவும், வெளிநாடு சென்றிருக்கும் திரு. தொண்டமான் நாடு திரும்பியவுடன் இதையிட்டு விரிவான விளக்கம் கொடுக்க வேண்டியேற்படுமென்றும் தெரிகிறது.

மலைநாட்டுப் பாடசாலைகளைப் பற்றி அரசாங்கக்கட்சிப் பாராளுமன்றக் குழு விவாதித்துக் கொண்டிருந்தபொழுது ஒரு வடபகுதி எம். பி. எழுந்து பேசமுற்பட்டாராம். அப்பொழுது அவரின் தலைவர் 'இரு. இது எங்கடை பிரச்சினையில்லை அவங்கள் பார்க்கட்டும்' என்று கூறினாராம்.

## உலக தமிழ் மன்றம்

உலகத் தமிழ் மன்றத்தின் செயற்குழுக்கூட்டம் மன்றத் தலைவரும் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினருமான திரு கா. பொ. இரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மன்றச் செயலாளரும் தமிழ் நேசன் ஏட்டின் ஆசிரியருமான முருகு சுப்பிரமணியம் மன்றம் சென்ற சில மாதங்களிற் செய்த பணிகளைக் குறிப்பிட்டார். 'தமிழ் உலகு' எனும் மன்றத்தின ஏட்டை இலங்கையிலே அச்சிட்டு வெளியிடும் பொறுப்பைத் தலைவருக்குச் செயற்குழு நல்கிற்று.

மன்றத்தின் சார்பில் வங்கியில் கணக்குத் திறப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. சங்கப் பதிவாளர் அனுப்பிய புதிய சங்கப் பிரமாணங்களுக்கு அமைய மன்ற அமைப்பு விதிகளில் திருத்தம் செய்யப்பட்டது. மன்றத்தின் எதிர்காலப் பணித்திட்டம் ஆராயப்பட்டது.

தலைவர் திரு. இரத்தினம் அவர்கள் இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றமைக்கு மன்றச் செயற்குழு உறுப்பினர்கள் தங்கள் பாராட்டைத் தெரிவித்தனர்.

## திருக்குறள் மாநாடு கொழும்பில் நடைபெறும்

தமிழ் மறைக் கழகத்தின் திருக்குறள் மாநாடு இம்முறை கொழும்பில் நடைபெற விருக்கிறது. யூன் 1, 2ம் திகதிகளில் நடைபெறும் இம் மாநாட்டில் இலங்கையில் உள்ள பல தமிழறிஞர்களுடன் தமிழ் நாட்டைச் சேர்ந்த திரு. வெள்ளைவாரணரும் கலந்து கொள்வார்என்று நம்பப்படுகிறது.

கொழும்பு விவேகானந்த சபையினதும் வேறு சில தமிழ் மன்றங்களினதும் ஆதரவில தமிழ் மறைக் கழகத்தின் 12வது திருக்குறள் மாநாடு யூன் முதல் இரண்டாம் திகதிகளில் கொழும்பில் நடை பெறும். யூன் முதலாம் திகதி பிற்பகல் மன்றத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். முதல் நாள் நிகழ்ச்சியில் சிறப்புரைகளும், கவியரங்கமும் இடம் பெறும் கவியரங்கத்தையடுத்து கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி வியாழக்கிழமை காலை கருத்தரங்கத்துடன் ஆரம்பமாகும். அன்று பிற்பகல் பல தமிழறிஞர்கள் உரை நிகழ்த்துவார்கள். அன்று இரவு பல கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெறும். திரு. வெள்ளைவாரணரும் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் கலந்து கொள்வார்.

கந்த முருகேசனார் சொற்பயிற்சி மன்றத்தின் ஆதரவில் இம்மாநாட்டையொட்டி ஒரு திருக்குறள் ஏட்டுச் சுவடி ஊர்வலமும் நடை பெறும். முதல் நாள் நிகழ்ச்சி கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்திலும், இரண்டாம் நாள் நிகழ்ச்சி வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்திலும் நடைபெறலாமென மாநாட்டுக்குழு உறுப்பினர் ஒருவர் அறிவித்திருக்கிறார்.

## இந்துப் பல்கலைக்கழகம் ஏமாற்று வித்தை

### கதிரைவேற்பிள்ளை விழாவில் கண்டனத் தீர்மானம்

'சமய அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் இந்துப்பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டுமெனக் கூறுபவர்கள் தமிழ் பேசும் இனத்தின் ஒற்றுமையை குலைக்கவே இந்துபபல்கலைக் கழகக் கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்கள். இந்த மாய்மாலக் கோரிக்கையில் தமிழ் பேசும் மக்கள் ஏமாந்து விடக் கூடாது தமிழ் பேசும் மக்களின் இன்றியமையாத் தேவையான ஒரு முழுமையுள்ள தமிழ்ப்பல்கலைக் கழகத்தை திருமலையில் உடனடியாக அரசாங்கம் நிறுவித்தர முன்வர வேண்டும்'' இவ்வாறு மேலைப் புலோலியூர் சதாவதானி நா. கதிரவேற்பிள்ளை நிறைவுவிழாவில்ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

கதிரவேற்பிள்ளை நிறைவு விழா அண்மையில் மேலைப் புலோலி பண்டார அம்மன் கோவில் முன்றிலில், கதிரவேற்பிள்ளை கலாமன்றத்தின் ஆதரவில் திரு. மு. பொன்னையா தலைமையில் நடைபெற்றது. விழாவுக்கு பெருந்திரளான மக்கள் சமூகமளித்திருந்தனர். விழாவில் திரு சு த பசுபதி, பண்டிதர் வி. பரந்தாமன், திரு அ சண்முகநாதன் ஆகியோர் பேசினர்;

இந்துப் பல்கலைக் கழகம் வேண்டும் என்று கூறுவோர் வீணாக தமிழினத்தைப் பிரிக்காது, உண்மையில் சைவசமயத்துக்கு தொண்டாற்ற விரும்பினால், திருக்கேதீஸ்வரத்தில் சேர். கந்தையா வைத்தியநாதன் துவக்கி வைத்த குருகுலத்துக்கு பல்கலைக்கழக அந்தஸ்தைத் தேடிக் கொடுக்கலாமென்றும், மத்திய வங்கியில் தொடர்ந்து தமிழ் ஒழிப்பு நடப்பதைக் கண்டிப்பதும், அரச கருமமொழித்திணைக்களத்தில் 'தமிழ்த் தணை ஆணையாளரின் கீழ் தனிப்பிரிவு நிறுவப்பட வேண்டுமென்றும், மொழித்திணைக்களத்தில் நடைபெற்றுவரும் தமிழ்மொழிபெயர்ப்பு நாசவேலைகள் நடத்துவோரைத் தண்டிக்க அரசினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## வாக்குறுதியை நிறைவேற்றுக

''தமிழரசுக் கட்சிக்குக் கொடுத்த நிபந்தனையை உடனே நிறைவேற்றுக'' என்ற மகுடமிட்டு சிங்களே (12-5-66) எழுதியுள்ள ஒரு குறிப்பில், தமிழரசுக் கட்சியை ஏழு கட்சிக் கூட்டரசாங்கத்தில் சேர்த்துக்கொள்ளும்பொருட்டு 1965 மார்ச் 22-ந் திகதி யாழ்ப்பாணத்துக்குச் சென்ற மிக்வும் பிரபலமான முதலாளித்துவப் பத்திரிகை நிறுவனத்தின் பிரமுகர் ஒருவர், அரசாங்கம் அமைப்பதற்கு யு.என் பி.க்கு ஆதரவு கொடுத்தால் சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் ''திருமலைத் துறைமுகத்தைச் சீனர்களுக்குக் கையளிக்கும் ஒப்பந்தத்தை'' இரத்துச் செய்வதாகவாக்குறுதியளித்தாரென்று கூறுகிறது.

அத்தகைய ஒப்பந்தம் எதுவும் கிடையாதென்று தெரிந்தும், ஒப்பந்தப்பற்றி யு. என். பி. செய்த தேர்தல் பொய்ப் பிரசாரத்தைக் கேட்டு இந்திய தலைவர்களே அச்சம் கொண்டனரென்றும், ''முன்னள் அரசாங்கம் அப்படி ஓர் ஒப்பந்தம் செய்துள்ளதா?'' என்று திரு. பீலிக்ஸ் பாராளுமன்றத்தில் கேட்ட கேள்விக்குக் கிடைத்த பதிலிலிருந்தே இந்தப் பொய்ப் பிரசாரத்திற்குத் தாங்களும் ஏமாந்துவிட்டோமென்பதைத் தமிழரசுத் தலைவர்கள் உணரமுடிந்தது என்றும் அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இ. தொ. க. முயற்சியால் மூன்ருண்டுப் பிரச்னை தீர்ந்தது

## தோட்ட நிர்வாகம் பணிந்தது தொழிலாளி வேலை பெற்ருர்

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் தோட்ட நிர்வாகத்தால் வேலை நீக்கஞ் செய்யப்பட்ட ஒருவர் இ. தொ. கழகத்தில் இந்த ஆண்டு ஆரம்பத்தில் உறுப்பினராகச் சேர்ந்து தமது உரிமையை வெற்றியுடன் நிலைநாட்டியுள்ளார். இவர் இ. தொ. கழகத்தில் சேருவதற்கு முன்னர் இ. தொ. காங்கிரஸ், ல. தே. தோ. தொழிலாளர் யூனியன் ஆகியவற்றின் மூலமும் தமது இழந்த வேலையைத் திரும்பப் பெற முயன்று தோல்வி கண்டிருக்கிருர்.

மடுவக்கொல்லை வட்டக்கலை (ஸ்காடு) தோட்டத்தைச் சேர்ந்த ஆ. ராசு என்பவர் கடந்த மூன்ருண்டுகளாக தோட்ட நிர்வாகத்தால் வேலை நீக்கஞ் செய்யப்பட்டிருந்தார். இது சம்பந்தமாக அவர் முதலில் சார்ந்திருந்த இ. தொ. காங்கிரஸ் மூலமும் பின்னர் ஐ. தே. கட்சி சார்புடைய லங்கா தேசிய தோட்டத் தொழிலாளர் யூனியன் மூலமும் பல நடவடிக்கைகள் எடுத்து வந்தார். முயற்சிகள் பலனளிக்காமையால் முடிவில் இ. தொ. கழகத்தில் சேர்ந்து தமது உரிமைக்காகப் போராடினுர்.

இ. தொ. கழகம் இவர் பிரச்சினையையிட்டு பல நடவடிக்கைகள் எடுத்துவந்தது. கடந்த 9-ம் திகதி இவ்வழக்கு விசாரணைக்கு வந்தபொழுது கழகத்தின் சார்பில் இ. மு. கேந்திரமும், சு. முத்தையாவும் ஆஜராயினர். வழக்கு முடிவில் திரு. ராசு அவர்களுக்கு தோட்ட நிர்வாகம் மீண்டும் வேலை கொடுக்க வேண்டுமென தீர்க்கப்பட்டது.

''கழகத்தின் விடாமுயற்சியாலேயே மூன்ருண்டுகளின் பின்னர் எனக்கு வேலை கிடைத்துள்ளது. இதுவரை பல சங்கங்களால் வஞ்சிக்கப்பட்ட எனக்கு வாழ்வளித்த கழகத்துக்கு அதன் இலட்சியப் போராட்டங்களின் முன்னணியில் நிற்பதன்மூலம் எனது நன்றிக்கடனைத் தீர்ப்பேன். கழகத்தின் வளர்ச்சி மலையகப் பாட்டாளி வர்க்கத்தினரின் விடுதலைப் போராட்டத்துக்கு அத்தியாவசியம் என்பதை நன்கு உணருகிறேன்'' என அவர் கழகத்தின் முயற்சிக்குப் பாராட்டுத் தெரிவிக்கையில் கூறினுர்.

## கொழும்பு தமிழ்ச் சங்க நூல் நிலையம்

கொழும்புத் தமிழ்ச் சங்க நூல் நிலையத்திற் பயனுள்ள தமிழ் நூல்கள் பலவும் வடமொழி ஆங்கில நூல்கள் சிலவுமுள. வெளியே எடுத்துச் சென்று படிப்பதற்கான நூற்பகுதியும் உள்ளே இருந்து பார்ப்பதற்கான நூற்பகுதியுமென இரு பகுதிகள் இந்நூல் நிலையத்திலுண்டு. வெளியே எடுத்துச் சென்று படிப்பதற்கான நூல்கள் சங்க உறுப்பினர்களுக்கு மட்டுமே கொடுக்கப்படும். அவர்களும் வைப்புப் பணமாக ஐந்து ரூபா கட்டுதல் வேண்டும். ஏனையோர் நிலையத்தில் வைத்து நூல்களைப் பயன்படுத்தலாம். நூல் நிலையத்தின் ஒருபகுதியாக வாசிகசாலையொன்றுமுளது. விடுமுறை நாட்களில் முழுநேரமும் ஏனையநாட்களில் பிற்பகலிலும் நூல் நிலையமும் வாசிகசாலையும் திறந்திருக்கும்.

இவ்வாறு கொழும்புத் தமிழ்ச்சங்கம் சுதந்திரனுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# சீனாவுக்கு அமெரிக்கா விடுக்கும் சவால்

## உலக யுத்தம் ஏற்படுமா?

அமெரிக்கச் சண்டை விமானங்கள் சீனாவுக்குள் நுழைந்து சீன விமானமொன்றைச் சுட்டு வீழ்த்தியது சீனாவை போருக்கு அழைப்பதாகு மென்றும், வடக்கு வியட்நாம் மீது அமெரிக்கா நடத்தும் தாக்குதல் விஸ்தரிக்கப்பட்டிருப்பதால் ஓர் உலக யுத்தம் வியட்நாம் மண்ணிலிருந்து ஏற்படக்கூடியநிலை உருவாகிறதென்றும் அவதானிகள் நம்புகின்றனர்.

இதிலொன்றும் வியப்பில்லை. வியட்நாம் போர் உலக யுத்தமாகமாறும் நிலை என்றும் இருந்து வருகிறது. அந்த நிலை இல்லாவிட்டாற்றான் வியப்படைய வேண்டும். ஏனெனில், தென்வியட்நாமுக்கெதிரான போர் வட வியட்நாமுக்கெதிரான போராகும். வட வியட்நாமுக்கு எதிரான போர் சீனாவுக்கும், ரஷியாவுக்கும் ஏனைய கம்யூனிஸ்ட் நாடுகளுக்குமே எதிரான போராகும். சீனாவுக்கும் ரஷியாவுக்கும் எதிரான போர் உலகக் கம்யூனிஸத்துக்கெதிரான போராகும். அது தான் உலக யுத்தம்.

### மறைமுக உலக யுத்தம்

ஆகவே வியட்நாம் மண்ணிலிருந்து தோன்றி மறைமுகமாக இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் உலகக் கம்யூனிஸ எதிர்ப்பு - உலக யுத்தம், வல்லரசுகள் நேரடித் தாக்குதலில் இறங்கினால் பகிரங்கமாக நடைபெறத் தொடங்கிவிடும்.

இத்தகைய உலகயுத்தமொன்றின் மூலம் உலக கம்யூனிஸத்தை ஒழிப்பது சாத்தியமன்று. உலகில் முதலாளித்துவ சமுதாய அமைப்பு முறை இருக்கும் வரை கம்யூனிஸம் இருந்தே தீரும். எனவே கம்யூனிஸத்தை ஒழிப்பதற்கான ஒரே வழி முதலாளித்துவ முறையை ஒழிப்பதேயன்றி யுத்தம் செய்வதன்று. இது கம்யூனிஸ சித்தாந்தங்களுக்கு மாறான ஒரு சித்தாந்தம்.

### உலகவலம்

வியட்நாம் போரில் ஆழந் தெரியாமல் காலை விட்டுக் கொண்டு திணறுகிறது அமெரிக்கா.

விமானத் தாக்குதலின் மூலம் வட வியட்நாமைப் பணியவைத்து சமரசத்துக்கு இணங்க வைக்க அமெரிக்கா முயன்று, அந்த முயற்சியில் ஏற்கனவே தோல்வி கண்டுவிட்டது. சோவியத் யூனியன் தலையிட்டு சமரசம் செய்து வைக்கும் என்று எதிர்பார்த்தும் அமெரிக்கா ஏமாந்து விட்டது.

வியட்நாம் போரில் வியட்காங்கியரை விட அதிகமான அமெரிக்கர்கள் கொல்லப்படுவது அமெரிக்காவில் ஒரு கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இலங்கைக்கு ஒரு சிறிய உதவியை அளிப்பதற்குக் கூட 'ஆயிரம் பேச்சு வார்த்தைகளை' நடத்தி நடத்தி காலத்தைக் கடத்தும் அமெரிக்கா கம்யூனிஸத்தை ஒழிப்பதற்கெனக் கூறிக்கொண்டு வியட்நாமில் கோடி கோடியாக டாலர்களைக் கொட்டி நாசமாக்குகிறது.

இந்நிலையில் வியட்நாமில் அமெரிக்கா நடத்தும் யுத்தம் ஓர் 'அந்தஸ்துபோர்' என்று கூறலாம். வியட்நாமிலிருந்து வெளியேறினால் தனது அந்தஸ்து பாதிக்கப்படுமென்றும் அமெரிக்கா கருதுகிறது.

கம்யூனிஸத்தை ஒழித்துக் கட்டும் முழுப் பொறுப்பையும் அமெரிக்கா மட்டும் ஏன் தன் தலையில் தூக்கிப் போட்டுக்கொள்ள வேண்டும்? ஆசியப் பிராந்தியத்தில் பிரமாண்டமான கடற்படையும், விமானப்படையும், சுமார் 600,000 தரைப்படைகளும் அமெரிக்கா ஆங்காங்கு நிறுத்தி வைத்திருக்கிறது. கம்யூனிஸம் பரவாமல் தடுப்பதற்கு இது போதாதா? வியட்நாம் போர் எதற்கு?

1954ம் ஆண்டு ஜினிவா உடன்படிக்கையின் படி வியட்நாம் பிரச்சனைக்குத் தீர்வு கண்டால் அமெரிக்காவின் 'அந்தஸ்தும்' பாதுகாக்கப்படும். இவைகளெல்லாம் பயன்படவில்லையேல் பிரச்சினையை தீர்ப்பதற்கு எஞ்சியுள்ள ஒரே வழி உலக யுத்தமே.

## இந்தியாவும் அணுகுண்டு உற்பத்தி செய்யும்?

சீனா தனது மூன்றுவது அணுகுண்டை வெடித்ததின் மூலம் உலகில் ஓர் அணுகுண்டுப்புரட்சியை ஏற்படுத்தியுளளது. இந்தியா, இந்தோனேஷியா, ஐக்கிய அரபுக் குடியரசு முதலிய நாடுகள் அணுகுண்டு உற்பத்தியில் இறங்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளது இந்தப் புரட்சி.

அணுகுண்டு வெடித்த அடுத்த நாள் இந்திய எல்லையில் சீனா பெரும் படையை நிறுத்தியுள்ளது என்ற செய்தியும் வந்தது. இந்த நிலையில் சீனாவின் அணுகுண்டிலிருந்து இந்தியாவைப் பாதுகாக்க அமெரிக்காவின் அணுகுண்டு வரும் என்று எதிர்பார்ப்பது மடமை. ஆகவே, அணுகுண்டு பலத்தை இந்தியாவும் பெறுவதால்தான், சீனாவுக்குச் சமமாகத் தலைநிமிர்ந்து நிற்கமுடியுமென்ற நிலை தோன்றியுள்ளது. இதனால் அணுகுண்டு உற்பத்தியில் இறங்குமாறு பலத்த நெருக்குதல் இந்திய அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. ஆக்கபூர்வமான வேலைகளுக்க அணுசக்தி என்பது பழங்கதையாகிவிட்டது.

### சமாதானத்துக்கு அணுகுண்டு

இந்தோனேஷியாவும் அணுகுண்டு செய்யத் தயார் என்று அறிவித்துள்ளது. அடுத்து ஐக்கிய அரபுக் குடியரசும் அந்த நிலைக்கு வந்து கொண்டிருக்கிறது.

மண்டலசார்பற்ற நாடுகள் என்று கூறப்படும் நாடுகளின் கையிலும் அணுகுண்டுகள் இருக்குமாயின் அவற்றின் செல்வாக்கு உலகில் உயர்ந்து நிற்கும் என்று கருதுவோரும் உண்டு.

எல்லாரிடமும் அணுகுண்டு இருக்குமாயின் உலக யுத்தமே ஏற்பட முடியாது என்றும், எனவே ஒவ்வொரு நாடும் கைவசம் அணுகுண்டு வைத்திருப்பது உலக சமாதானத்துக்கு அவசியமாகும் என்றும் சிலர் கூறுகின்றனர். எல்லாரிடமும் அணுகுண்டிருந்தால், ஓர் ஐக்கிய ஏற்பாட்டின் மூலம் அணுகுண்டுகளையெல்லாம் அழித்துவிட முடியுமென்றும், இக்குண்டுகள் வைத்திருத்தல் ஒரு சில

(9-ம் பக்கம் பார்க்க)

**விற்பனைக்கு வீடும் வளவும்**

யாழ்ப்பாணப் பட்டணத்தில் ஏறத்தாழ 16 பரப்பு (தி. ப.) காணியும் அதில் திடமாகக் கட்டப்பட்ட வீடும் விற்பனைக்கு உண்டு.

விண்ணப்பங்களுக்கு

42/2 ரீஜன்ட் பிளாட்ஸ்,
பார்சன்ஸ் வீதி,
கொழும்பு.



### ஜூன் 23ல் தமிழரசு மாநாடு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 10-வது தேசிய மாநாடு ஜூன் மாதம் 23-ம், 24-ம், 25-ம் திகதிகளில் கல்முனையில் நடைபெறும். இதற்கான ஏற்பாடுகள் விரிவான முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இத்தகவலை தமிழரசுக் கட்சித் தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் அறிவித்திருக்கிறார்:

### மூதூர்த் தொகுதிக்கு நீர்ப்பாசன வசதி

மூதூர்த் தொகுதியைச் சேர்ந்த பொன்னுவரத்திடல் சம்மாந்துறை ஆகிய இடங்களில் உள்ள விவசாயிகள் நீர்த் தட்டுப்பாட்டால் படும் கஷ்டங்களை மூதூர்த் தொகுதியின் முதல்வர் ஜனாப் முகம்மதலி விவசாய அமைச்சர் திரு. எம். டி. பண்டாவிடம் எடுத்துக்கூறியதைத் தொடர்ந்து அப்பகுதிக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க அமைச்சர் இசைந்துள்ளார்.

— மே - 8 - சனி.

### தமிழ் மொழிச் சட்டம் சரியாக அமுலாகவில்லை

தமிழ் மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு சில மாதங்கள் சென்றுவிட்டபோதிலும் இன்னும் சரிவர அது அமுல் நடத்தப்படவில்லையென்றும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும் தமிழ் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதாயும் சென்ற வாரம் நடைபெற்ற தமிழரசுப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இதுபற்றி பிரதமருக்கும் அரசாங்கத்துக்கும் கவனப்படுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

### மாவட்டசபை மசோதாவை விரைவில் சமர்ப்பிக்குக

"மாவட்டசபை மசோதாவை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஏற்ற நடவடிக்கைகளைத் துரிதமாக எடுங்கள். அத்துடன் உத்தேச மாவட்டசபை மசோதாவின் நகல் பிரதியை எதிர்வரும் தமிழரசு மாநாட்டுக்கு சமர்ப்பிக்க தயாராகவும் வைத்திருங்கள்." இவ்வாறு தமிழரசுப் பாராளுமன்றக் குழு உள்ளூராட்சி அமைச்சர் கனம் மு. திருச்செல்வத்தைக் கோரியுள்ளது.

— மே - 9 - திங்கள்.

### இராசரத்தினவின் தமிழ்க்கடிதம்

மீன்பிடித் தொழில்பற்றி ஆராய்வதற்கு நடைபெறும் மாநாட்டில் கலந்துகொள்ள வருமாறு கரையோரப் பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கடற்றொழில் கூட்டுத் தபனத் தலைவரும் ஜாதிக விமுக்தி பெரமுனையின் தலைவருமான திரு. கே. எம். பி. இராசரத்தின, தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் அழைப்புக் கடிதம் அனுப்பியுள்ளார்.

— மே - 12 - புதன்.

### தமிழியக்கத்தை ஊக்குவிக்க தொண்டர் படை

எல்லாம் தமிழியக்கத்தை ஊக்குவிக்கவும் தமிழ்ப் பகுதியில் உள்ள சகல அரசாங்க அலுவலகங்களிலும் தமிழிலேயே சகல அலுவல்களும் நடைபெறச்செய்யத் தூண்டுவதற்கும், ஒவ்வொரு தொகுதியிலும் ஒவ்வொரு தொண்டர் படையை நிறுவ தமிழரசுக் கட்சி ஆலோசித்து வருகிறது. இதன்மூலம் தமிழ்மொழிச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கத்தைத் தூண்ட முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### எஸ். ஜே. வி.யின் ஆட்சேபம்

அரசாங்கக் கூட்டுத் தாபனங்களிலும், மக்கள் வங்கி முதலிய நிறுவனங்களிலும் காலியான இடங்களுக்கு மக்களிடமிருந்து விண்ணப்பம் கோருகையில் சிங்கள மொழியறிவு அத்தியாவசியம் என்று கேட்பது தமிழ் மொழிச் சட்டத்திற்கு முரணானது என்றும், சிங்கள மொழியறிவு கோரும் நிபந்தனை நீக்கப்பட வேண்டும் என்றும் தமிழரசுத் தந்தை சா. ஜே. வே. செல்வநாயகம் பிரதமருக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

### சுபசிங்கா எம். பி. பதவியை இழந்தார்

கட்டுகம்பொலத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. டி. பி. சுபசிங்காவுக்கெதிரான தேர்தல் வழக்கில், திரு. சுபசிங்காவின் தேர்தல் செல்லாது என நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

### தமிழரசுத் தந்தையின் விளக்கம்

தமிழ் பேசும் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால் அரசாங்கத்திலிருந்து தமிழரசுக் கட்சி வெளியேறிவிடும் என்று நான் கூறியது முழுக்க முழுக்க உண்மை. ஏனெனில் தமிழ் பேசும் மக்களுக்கு எந்த அரசாங்கம் அநீதி இழைத்தாலும், அதைத் தமிழரசுக் கட்சி எதிர்க்கும் என்பது உலகறிந்த உண்மை.

"ஆனால் தமிழரசுக் கட்சிக்கும் ஐ. தே. கட்சிக்கும் இடையிலான ஒப்பந்தம் தற்காலிகமானதென்றோ எமது கட்சிக்கும் அரசாங்கத்துக்கும் பிளவு ஏற்படப்போகிறது என்றோ நான் கூறவில்லை" இவ்வாறு தமிழரசுத் தந்தை வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் விளக்கம் அளித்துள்ளார்.

— மே - 13 - வெள்ளி

### தமிழே போதனு மொழியாக வேண்டும்

சிங்களவர்களின் போதனு மொழியாக சிங்களமும், தமிழ் பேசும் மக்களின் போதனு மொழியாகத் தமிழும் இருக்க வேண்டுமென நேற்று நடந்த அரசாங்க பாராளுமன்றக் கூட்டத்தில் தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்களும், திரு. பொன்னம்பலமும் கல்வி வெள்ளையறிக்கைக்கு கூட்டாகக் கொண்டுவந்த திருத்தத் தீர்மானம் தோல்வியடைந்தது. போதனு மொழிபற்றிய இறுதி முடிவு அமைச்சரவைக் கூட்டத்திலேதான் எடுக்கப்படும் என இக்கூட்டத்தில் பிர. மர் டட்லி சேனநாயகா அறிவித்திருக்கிறார்.

— மே - 14 - வெள்ளி.

தெய்வீக பலத்தினுல்

ஆண், பெண் இருபாலாருக்கும் மனதிலுள்ள விஷயங்களை இரகசியமாய் நிறைவேற்றிக் கொள்ள ஒரு வழி உண்டு.

விபரம் எழுதிக் கேளுங்கள்.

கவர்மென்ட் ரெஜிஸ்டர்
**பி. எம். திசாநாயக்க,**
நான்கு கோயில்களின்
தர்மகர்த்தா
கம்பளை.
டெலிபோன் : 454
த. பெ. 1281,
கொழும்பு.



**ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம்**

இதனை தலைக்கு வைத்துவரின் தலைவலி, கண்வலி, காதுவலி, செவிடு, கண்பார்வை மட்டு, உச்சி, கண், கை, கால், தேக எரிச்சல், காதடைப்பு, பீனிசம் முதலியவைகளைக் குணப்படுத்தி தலைமயிரைக் கறுத்த நிறத்தோடு நீண்டு அடர்த்தியாக வளரச் செய்யும்.

புட்டில் 1க்கு ரூ. 3-50
தபால் செலவு 1-10 சதம்

**ஞானசுந்தர வைத்தியசாலை,**
187, செட்டியார் தெரு
கொழும்பு-11.

# மக்கள் குரல்

## கலைஞர்கள் விஜயம்

தேசிய அரசாங்கம் உருவாகிய பின்னர் தென்னிந்தியக்கலைஞர்களின் வருகை அதிகரித்துள்ளது. இரண்டு நாட்டுக்கு மிடையில் உள்ள நட்புறவை வளர்த்துக் கொள்ள இது பெரிதும் உதவியாக அமைந்திருக்கிறது. ஆனல் ஈழம் வரும் கலைஞர்கள், தங்களின் விஜயம் எப்படி ஒழுங்குபடுத்தப்படுகிறது என்பதையிட்டு கவனம் செலுத்த வேண்டியவர்களாகிறுர்கள்.

பொதுமக்கள் அனைவருக்கும் பயன்படக் கூடிய இயக்கங்களின் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவேண்டும். அல்லது கட்டணமின்றி பொது நிகழ்ச்சிகளில் தோன்றி இரசிகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்யவேண்டும். குறிப்பிட்ட சிலரின் தேவைக்காக தென்னிந்தியக் கலைஞர்கள் இங்கு வருவது விரும்பத்தக்கதல்ல.

க. செங்கதிர்செல்வன்
யாழ்ப்பாணம்

## தாமதித்தது ஏன்?

மன்ஞர்ப்பகுதி காலராப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஆனல் இந்த நடவடிக்கை எடுக்க இத்தனை கால தாமதம் ஏற்பட்டது கண்டிக்கப்படவேண்டிய தொன்ருகும். காலரா போன்ற கொடிய நோய்கள் பரவாது தடுக்க உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசினரின் கடமை. மன்ஞர் எம். பி. திரு. அழகக்கோனின் உடனடி நடவடிக்கையால் நிலைமை கட்டிக்குள் கொண்டு வரப்பட்டுவிட்டது.

அலோசியஸ்
மன்ஞர்


### ஜீ. சீ. ஈ.
(சா. த.)

ஆசிரியர் கலாசாலைப் பிரவேச பரீட்சை
புதுமுறை விஞ விடை

பயிற்சிக் கோவைகள்

| | |
|---|---|
| தமிழ் பாஷை | 5-00 |
| எண் கணிதம் | 5-00 |
| பூமி சாஸ்திரம் | 5-00 |
| சரித்திரம் | 5-00 |
| குடியியல் | 5-00 |
| உடனலவியல் | 5-00 |
| இஸ்லாம் | 5-00 |
| 101 கட்டுரைகள் | 7-50 |
| பொது அறிவும் பொது விவேகமும் | 5-00 |

சர்வகலாசாலை போதன கழகம்,
540, மருதானை வீதி,
த. பெ. 1079.
கொழும்பு-10.


## தண்ணீர் பிரச்சினை —ஒரு விளக்கம்

'யாழ்ப்பாணம் பாலைநிலமாகுமா' என்னும் தலைப்பில் சி. பி. வைரமுத்து அவர்கள் சுதந்திரனில்தொடர்ந்து எழுதிய புவியியல் கட்டுரை புவியியல் மாணவருக்குப் பயன்படக்கூடிய விடயமாகும். அவர் நெடுந்தீவுக் குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றிக் கூறிச் செல்லும் வேளையில், ஒரு வருடத்தின் பெரும் பகுதிக்குக் குடிக்கத்தகுந்த நீரை அளிக்கக்கூடிய சில கிணறுகள் நெடுந்தீவின் மத்திய பகுதியிற்தான் உண்டென்றும், நெடுந்தீவு வாசிகள் கிணற்றுநீரைக் குடிப்பதிலும் அங்குவளரும் தென்னை, பனையிலிருந்து 'கள்' குடிப்பதற்கு அதிகம் பழக்கப்பட்டுவிட்டனரென்றும் குறிப்பிட்டுள்ளது.

இக்கூற்றுக்கள் இரண்டும் நெடுந்தீவைப் பற்றிய அவரது புவியியல் அறியாமையைக் குறிக்கின்றது. நெடுந்தீவின் மத்திய பகுதியிலுள்ள தண்ணீரிலும் பார்க்க, குடிக்கத்தகுந்த நீர் நெடுந்தீவின் மேற்குப் பகுதியில்தான் உண்டு. இதனல்தான் மேற்குப்பகுதியிலிருந்து குழாய் மூலம் தீவின் ஏனைய பாகங்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகின்றது. இத்தண்ணீர் நெடுந்தீவின் தேவைக்குப் போதுமானதாகும். எனவே நெடுந்தீவு வாசிகள் தண்ணீருக்குப்பதிலாக கள்குடிக்க வேண்டிய அவசியமுமில்லை. அப்படிப் பழக்கப்படவுமில்லை. இலங்கையில் புவியியல் ஆசிரியர்களே குறைவு. இக்கட்டத்தில் புவியியலாசிரியர்கள் தவருன கருத்தைக் கொடுத்து புவியியல் மாணவர்களை ஏமாற்றுவது விரும்பத்தக்கதல்ல.

பே. அருளப்பு,
நெடுந்தீவு.

## நடவடிக்கை எடுங்கள்!

சமீபத்தில் திருகோணமலையில் வீசிய கடும் புயலினல் இப்பகுதி மக்கள் பலத்த கஷ்டம் அடைந்திருக்கிருர்கள். பலரது வீடுகள் புயற்காற்றினல் அள்ளுண்டு போய்விட்டன. இப்பகுதியில் வாழும் மீனவர்களின் வள்ளங்கள் சேதமடைந்ததுடன் அவர்கள் வீடுகளும் இழந்து தவிக்கின்றனர். திருமலை எம். பி. திரு. எஸ். எம். மாணிக்கராசா உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு கஷ்டப்படும் மக்களுக்கு உதவி புரியவேண்டியது அவசியமாகும்.

க. சுப்பிரமணியம்
திருகோணமலை

## தமிழாராய்ச்சி மாநாடு பற்றி யாழ் இலக்கிய வட்டம்

அகில உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு சிறப்பாக கோலாலம்பூரில் நடந்தேறியமை குறித்து யாழ் இலக்கிய வட்டம் மகிழ்ச்சி தெரிவிக்கின்றது. அதேசமயத்தில் ஆர்வமுள்ள எழுத்தாளர்கள் பலர் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்து ஒப்புக் கொள்ளப்பட்டபிலயும் மகாநாட்டில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்காததையிட்டும், ஈழத்துத் தமிழறிஞர்கள் பலர் புறக்கணிக்கப் பட்டதையிட்டும், மற்றும் பல சங்கங்கள் கலந்தாலோசிக்கப்படாததையிட்டும் யாழ் இலக்கிய வட்டம் அதிருப்தி தெரிவிக்கின்றது. எதிர் வரும் மகாநாடுகளில் இத்தவறு நீக்கப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட நிர்வாகிகளை இச்சபை கேட்டுக் கொள்ளுகின்றது'.

மேற்கண்ட தீர்மானம் கடந்த 29-4-66 வெள்ளிக்கிழமை இரசிகமணி கனக செந்திநாதன் தலைமையில் நகர மண்டபத்தில் நடைபெற்ற யாழ். இலக்கிய வட்டக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

'தமிழ் நாட்டில் குழந்தை இலக்கியம் சம்பந்தமாக எழுத்தாளர்கள் எடுத்து வரும் முயற்சியுடன் ஈழத்தை ஒப்பிடுகையில் ஈழம் மிகவும் பின்தங்கியிருக்கின்றது. ஈழத்திலுள்ள பழம்பெரும எழுத்தாளர்களும், கவிஞர்களும் இத்துறையில் பெரும் பங்கு எடுகதுச் செயலாற்ற முன்வர வேண்டுமென யாழ். இலக்கிய வட்டம் கேட்டுக் கொள்ளுகின்றது'. என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## புதிய சமாதான நீதவான்



தமிழரசுக் கட்சியின் உரும்பிராய் கிளையின் தலைவரும், தொழில் அதிபரும், பெரும் கமக்காரருமான திரு. வ. நடேசலிங்கம் சமீபத்தில் சமாதான நீதவானுகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சேவை மனப்பான்மை மிக்க திரு. நடேசலிங்கம் கிராம அலுவல்கள் யாவற்றிலும் தனது பங்கைச் செலுத்தி வந்ததனல் ஊரவர் யாவரது பிரியத்துக்கும் உரியவராகிருர். முன்னுள் கிராமச்சங்க (நீர்வேலி) உறுப்பினரான இவர் சிறுபான்மைத் தமிழர் கிராமச் சங்கத்தில் பிரதிநிதித்துவம் பெற வாய்ப்பளிக்கும் எண்ணத்தால் கிராமச்சங்க தேர்தல்களில் இருந்து விலகிக் கொண்டார்.

தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினரான இவர் அரசியலுடன் மட்டும் நில்லாது பொருளாதார அபிவிருத்தியிலும் கவனம் செலுத்தி வருகிருர்.

# சங்கப் பலகை

## இறுதி மூச்சு

ஆசிரியர்: த. சண்முகசுந்தரம்
விலை: ரூபா ஒன்று
வெளியீடு:
வித்துவான் கணேசையர் தமிழ்ச்சங்கம்,
மாவிட்டபுரம், இலங்கை.

முத்தமிழில் ஒன்ருன நாடகத்தின் வளர்ச்சியையும் தற்கால நிலைமையையும் அவதானிக்குமிடத்து, இது மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதை உணரக் கூடியதாக உள்ளது. ஆயினும் தற்காலத்திலோ தமிழில் நல்ல நாடகம் என்பது 'அத்திப்பூ'வாகவே விளங்குகின்றது.

இன்று நாடகம் என்பது இருவகைப்பட்ட கோணங்களில் ஆக்கப்படுகிறது. ஒன்று படிப்பதற்காக மட்டும் எழுதப்படும் நாடகங்கள்; மற்றது நடிப்பதற்காக எழுதப்படும் நாடகம் ஆகும். இவ்விரு கிளைகள் நாடகத்தில் எழுந்துள்ளமை ஒரு இலக்கிய விபத்து என்றே தான் கூறல் வேண்டும். ஏனெனில் நாடகம் என்பது -'நடித்தல்'- என்ற பொருள்பட எழுந்ததாகலின், இதில் 'படித்தல்' என்ற ஒரு பிரிவு எழுவது புறநடையாகும். ஆயினும் சிறந்த மேடையேற்ற நாடகங்கள் நூலுருவிலமைகையில், படிக்கையில் இயல்பாகவே பல் வகை மெய்ப்பாடுகளைக் கிளர்த்தும் தன்மையனவாக மிளிரும். உதாரணமாக நமது பழந்தமிழ், நாடகங்களையும் இதிகாச புராண நாடகங்களையும் நாம் மேடையிலாயினும், நூலிலாயினும் அனுபவிக்கும் போது ஒரேவித இரசானுபவ உணர்ச்சிகளையே பெறுகின்ருேம். இதன் காரணம நாடகங்கள் கூறும் பண்பும், பொருளும் - நாடகமாந்தர் சித்திரிப்பு முறையுமேயாகும்.

இன்று தமிழ் - சிறப்பாக ஈழத்தில வெளியாகும் மேடைநாடகங்களும், நூல் நாடகங்களும் தமக்கென ஒவ்வொரு பண்பையே பிரதானமாக உணர்த்தி நிற்கின்றன. எங்ஙனமாயின் மேடை நாடகங்கள் மிகுதியாக நகை உணர்ச்சியை தோற்றும் 'இளிவரல்' பண்பையும், நூலமைவு நாடகங்கள் பழந்தமிழ் இலக்கிய வரலாற்றுப் பொருள கூறும் பண்பையும் பெற்று மிளிர்கின்றனவாயினும், இளிவரல் உணர்ச்சியில் இராசாபாசமும், வரலாற்றுப்பண்பில் தான்தோன்றித்தனமும் மிகுதியாகக் காணப்படுவது நாடக வளர்ச்சிக்கும். தமிழுயர்ச்சிக்கும் பங்கம் விளைவிப்பனவாகும்.

அத்துடன் ஒரு நாடகத்தின் தரத்தை எடைபோடும் வண்ணம் அதிக நாடகங்கள் இன்று தமிழில் வருவதில்லை. இதற்குக் காரணம் நாடக முயற்சிகளை மேற் கொள்ள எந்தவித எழுத்தாளனும் தயாராகவில்லை என்றே கூறல் வேண்டும். ஏனெனில் ஏனைய துறைகளைப் போல் நாடகத்தைச் சுலபமாக இயற்றிவிட முடியாது. கதாபாத்திரங்களிடையேயோ, அல்லது பாத்திரமாகவோமாறி தன்து எண்ணக் கருத்தைப் புலப்படுத்த ஏனைய துறைகளில் முடிவதுபோல - நாடகத்தில் நாடக ஆசிரியன் உள்ளே புகமுடியாது. ஆகவே ஆசிரியனின் எண்ணக் கருத்துக்கள் ஒவ்வொன்றும் நாடக மாந்தரின் குணதிசயங்கள் மூலமும் அவற்றின் தொழிற்பாட்டின் மூலமுமே வெளியாக வேண்டும். மனிதரின் குணதிசயங்களை குறிப்பிட்ட எல்லைக்குள் காட்சிகள் மூலம் காட்டும் ஆற்றல் எல்லா எழுத்தாளர்களுக்கு மிருப்பதில்லை. இவ்வளவு சிரமத்துடன் படைக்கப்படும் நாடகம் மேடையிலாயினும், நூலமைவிலாயினும் வெளிவர இன்னெருவர் தயவு தேவையாகவுள்ளது. இந்நிலை கீழை நாடுகளில் மட்டுமல்லாது மேலை நாடுகளிலும் காணப்படுகின்றதாயினும், அங்கு நாடகத்தின் 'பெறுமதி' உணர்ந்தவர்கள் அநேகர்.

பதிப்பகங்கள் நிறைந்த தமிழ் நாட்டில் கூட, நாடகங்களை அச்சேறுவது மிகக் கடினமான செயலாகக் காணப்படுகிறது.

ஆனல் - ஈழத்தைப் பொறுத்தவரையில் - நாடக வளர்ச்சியானது - 'முளை அரும்பின' நிலையில் கூட இல்லை எனலாம். அந்த முளை அரும்பில் கூட பொறுப்பின்மையாலும், பட்சபாதஉணர்வாலும் பிறந்த அலங்கோலப் புழுவரிப்பே காணப்படுகிறது.

தமிழில் பல நாடகங்கள் தோன்ற வேண்டும் என்ற எண்ண ஆர்வமிக்க கணேசையர் தமிழ்ச்சங்கம் இறுதி மூச்சு' என்ற நாடகத்தை வெளியிட்டுள்ளமை பாராட்டிற் குரியது. ஆசிரியரோ சாஹித்தியமண்டல நாடகப் பரிசு பெற்றவர். அவரதும், தமிழ்சங்கத்தினதும் மூன்ருவது வெளியீட்டு நூல் இது எனத் தெரிகிறது.

'இறுதிமூச்சு' - போர்த்துக்கேயர் வசம் சிக்கிய யாழ்ப்பாணத்தரசை மீட்க பரராசசேகரன் காடுகளில் கரந்துறைந்து எடுத்த போர் வரலாற்றைக் கூறுகிறது. ஆயினும் நாடக முழுமையிலும் நம்நெஞ்சினுள் நிறைபவர்கள் வரோதயசிங்கனும், வள்ளியம்மையுமாகும். நாடகவார்ப்பிலும் நாடகமாந்தரின் குணதிசயப் பண்பிலும் பல காட்சிகளில் முரண்பாடுகள் தொனிக்கின்றன. அரசனின் அன்பைப்பெற வரோதயசிங்கன் அரசனின் முத்திரை மோதிரத்தையும், உடைவாளையும் திருடுவதும், பிடிபட்டதும் அதற்குக் கூறும் காரணமும் நாடக வளர்ப்பையும், குணப்பண்பையும் சிதைக்கிறது.

நாடகத்திற்கேற்ற நிலைக்களனை ஆசிரியர் தேர்ந்தெடுத்த போதும், அதற்கேற்ற சம்பவக்காட்சி அமைப்புகள் அமையாததால் நாடகம் வலுவிழந்து காணப்படுகிறதாயினும் - நல்லதமிழிலே எழுதப்பட்டிருப்பதன் காரணத்தால் சிறப்படைகிறது.

— செம்பியன் செல்வன்

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஊரபிவிருத்திச் சங்கம் விளையாட்டுக் கழகங்கள் போன்ற சங்கங்கள் யாவற்றிலும் தலைவர் பதவியில் இருந்து செயலாளர் பதவிவரை பல விதத்திலும் சேவை செய்து வருகிருர்.


## அவசியமுள்ளவர்கள் யார்?

★ உத்தியோகத்தில் உங்களுக்கு நல்ல வெற்றி வேண்டுமா?
★ எதிரிகளை வெற்றிகொள்ள வேண்டுமா?
★ ஆண், பெண் விருப்பப்படி மணம் புரிய உதவி வேண்டுமா?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எங்களுக்கு கடிதமெழுதுங்கள்.

விலாசம்:-
பண்டார மந்திராச்சாரியார்
அன் கம்பெனி,
தலாவ (வழி) அநுராதபுரம்.

# தாய்க் குலமே தமிழைக் காக்க வேண்டும்

—0—

## உலக தமிழ் மன்றக் கூட்டத்தில் தமிழ் அறிஞர் வேண்டுகோள்

“தாய்மார்கள் தமிழில் பற்றுள்ள காலம் வரை தமிழ் அழியாது” என்று சாத்தான்குளம் ராகவன் உலகத் தமிழ் மன்றத்தின் ஆதரவில் நடைபெற்ற ‘எழுத்தாளர் கல்கி’ வெளியீட்டு விழாவில் உரைநிகழ்த்துகையில் கூறினார். கிளிநொச்சித் தொகுதிப் பா. உறுப்பினரும் உலகத் தமிழ் மன்றத் தலைவருமான பண்டிதா கா. பொ. இரத்தினம் இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். தலைவர் தனது உரையில் பேராசிரியர் கல்கி தமிழ் நாவற் துறையில் புதிய ஒரு எழுச்சியை ஏற்படுத்தியவர் என்று குறிப்பிட்டார்.

உலகத் தமிழ் மன்றத்தின் சிறப்புப் பொதுக்கூட்டம் கோலாலம்பூர் விவேகானந்தா தமிழ் இடைநிலைப் பள்ளியின் ‘அப்புதுரை’ மண்டபத்தில் நிகழ்ந்தது.

அவையரையும் வரவேற்று உரை நிகழ்த்திய மன்றத் தலைமைச் செயலாளர் திரு முருகு சுப்பிரமணியன், இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்துமாறு மன்றத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினத்தைக் கேட்டுக் கொண்டார்.

பண்டிதர் தமது தலைமை உரையில், ‘எழுத்தாளர் கல்கி’ என்னும் நூல் வெளிவந்த வரலாற்றை விளக்கினார். 1963ம் ஆண்டில் மலாயா பல்கலைக் கழகத் தமிழ்த் துறையும், மலாயா தமிழ் எழுத்தாளர் சங்கமும் சேர்ந்து நடத்திய கல்கியின் நூல்கள் பற்றிய கருத்தரங்கில் பங்கு பற்றி தமிழ் அறிஞர்கள் வழங்கிய கட்டுரைகள் ‘எழுத்தாளர் கல்கி’ என்னும் நூல் வடிவில் வெளியாக்கப்பட்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டினர்.

நூலை வெளியிட்டுப் பேசிய புவான் சிறி சம்மந்தன், இது போன்ற தமிழ்ப்பணி நெஞ்சை ஈர்க்கிறது என்று தெரிவித்தார். இத்தகைய பணிகளில் ஈடுபடுவதற்கு மனம் நாடி அலைவதுமுண்டு என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்ப்பணிகளில் பண்டிதர் இரத்தினம், திரு முருகு சுப்பிரமணியன் போன்றோர் அயராது ஈடுபடுவதுபோல் எல்லோராலும் இயலாது என்று கூறிய புவான் சிறி சம்பந்தன், இத்தகைய நூலை ஆதரிப்பது அனைவரது கடமையாகும் என்று கேட்டுக் கொண்டார்.

‘எழுத்தாளர் கல்கி’ நூலைப்பற்றிப் பேசிய உலகத் தமிழ் மன்றத்தின் துணைச் செயலாளரும், தமிழ் எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்தவருமான திரு. எம். துரைராஜ், இத்தகைய நூல் வெளியீட்டுவிழா, இந்நாட்டு எழுத்தாளர்களுக்குப் பெருமை தருவதாகும் என்று தெரிவித்தார்.

### பெண்கள் பணி

சாத்தான் குளம் திரு ராகவன் ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற தத்துவத்தை உலகிற்கு முதற்கண் கூறியவர் தமிழரே என்று தெரிவித்தார்.

‘சைவம் தழைத்ததற்குப் பெண்களே அடிப்படைக் காரணம். அப்பரை அவரது தமக்கை திலகவதியே சைவத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தார்.

‘தாய்மார்கள் தமிழில் பற்றுள்ள காலம் வரை தமிழ் அழியாது.

‘இஸ்லாமிய மதத்தில் கூட முதலில் சேர்ந்தவர் ஒரு பெண்தான். இறைவனின் தூதராக அவதரித்த முஹம்மது நபியின் திருவாக்கை, போதனையை அவரது மனைவி கதீஜாவே முதன் முதலில் ஏற்றுப் பின்பற்றினர் என்று கூறுவார்கள் என்றார்.

‘கடல் கொள்வதற்கு முன் இலங்கை, இந்தியா, மலாயா யாவும் ஒரே பெருநிலமாகப் பல தொடர்புகளுடன் இருந்தது என்று வரலாற்று வல்லுநர் கூறுவர். சுதந்திரத்திற்காக இந்தியாவில் அதன் தலைவர்கள் போராடிக் கொண்டிருந்தபோது, நேதாஜி இந்த நாட்டில் தான் முதல் சுதந்திரக் கொடியை ஏற்றியிருக்கிறார்.

ராஜ ராஜ சோழன் இங்கு தான் வந்து ‘கடாரம்’ என்னும் தங்களது நாணயத்தை வெளியிட்டிருக்கின்றான்.

கம்போடியாவில் சிகானுக் இளவரசர் கூடகாஞ்சிபுரத் தமிழர் வழி வந்த பரம்பரை என்று கூறியிருக்கிறார்.

### ஈழத்து உறவு

மலேசியாவுக்கும், இந்தியாவுக்கும், இலங்கைக்குமிடையே நம்மை அறியாமலேயே ஒருவித ஒற்றுமையும், உணர்ச்சிகளும் அக்காலந் தொட்டு வளர்ந்து வந்திருக்கின்றன என்றார்.

தமக்கும் ஈழத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக்கூறிய திரு. ராகவன், தமது பாட்டனார், 100 ஆண்டுகளுக்கு முன் இலங்கையிலேயே தங்கி வாழ்ந்து, ‘கோவைப் பிரபந்தம்’ ஒன்றை வெளியிட்டு அரங்கேற்றியிருப்பதாகவும் தெரிவித்தார்.

அடுத்து மொரிஷியஸ் தீவைச்சார்ந்த திரு பு. அருணாசலம் பேசுகையில், உலகத் தமிழ்மன்றத்தின் கிளை ஒன்று மொரிஷியஸ் தீவில் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

தமிழ் மொழியை மறந்து தாங்கள் தமிழர்கள் என்பதையும் மறந்துவாழ்ந்த மொரிஷியஸ் தீவுத் தமிழ்ப் பரம்பரையினர், 1958-ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வரும் திருவள்ளுவர் விழா, பாரதிவிழா ஆகியவை வாயிலாகத் தட்டி எழுப்பப்பட்டு வந்திருக்கின்றனர் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

திருவள்ளுவர் திருநாளை மொரிஷியஸ்தீவில் கொண்டாடச் செய்யத் திட்டம் தீட்டி ஊக்குவித்தவர் பண்டிதர் இரத்தினமே என்றும் அவர் அறிவித்தார்.

‘250 ஆண்டுகட்கு முன் குடியேறிய மொரிஷியஸ் தமிழர்களுக்கு, 1958ல் ஊட்டப்பட்ட தமிழுணர்ச்சி வேரூன்றி வருகிறது. நாங்கள் ஒதுங்கி வாழ்ந்தாலும், பண்பாட்டாலும், கடவுள் வழிபாட்டாலும் தமிழர்களாகவே நாங்கள் வாழ்கிறோம்.

‘எங்கள் பணி கடினமானது. திருக்குறளைத் திரு சங்கிலி அவர்கள் பிரெஞ்சு மொழியில் ஆக்கியுள்ளார். ‘தலையணை நூலாக அதாவது படுக்கும்போது அதைப் படித்துப்படுக்க வேண்டும் என்று கூறிவருகிறோம்’ என்றார்.

### தமிழ் கற்கும் தாய்

மேலும் தமது இல்லத்தில் 32 மாணாக்கர்களுக்குத் தமிழ் கற்பித்து வருவதாகவும், அவர்களில் 52 வயதுடைய அம்மையாரும் ஒரு மாணவர் என்றும் திரு. அருணாசலம் தெரிவித்தார்.

மொரிஷிஸ் தீவுக்கு உலகத் தமிழ்மன்றத்தின் சார்பில் தூதுக்குழு அனுப்ப வேண்டும் என்று பண்டிதர் பின்னர் ஓர் ஆலோசனை கூறினார்.

அடுத்து உரையாற்றிய திரு. அப்துல்லா, உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு சென்னை முதல்வர் திரு பக்தவத்சலம் பெரிய குழுவுக்குத் தலைமை தாங்கி வந்து கலந்து கொண்டது சிறப்புக்குரியதாகும் என்று தெரிவித்தார்.

‘இந்த நாட்டுக்குப் பல ஆண்டுகளுக்குமுன்பே ‘மலை அய்யா’ என்னும் பெயர் சூட்டியவன் தமிழன்தான்.’

இறுதியில் நன்றி உரை கூறிய திரு முருகு. சுப்பிரமணியன், இன்றைய சிறப்புக் கூட்டத்திற்கு நான்கு பெரிய ‘தமிழர்கள்’ வந்து சிறப்பித்தது பெருமை தருவதாகும் என்றார். மொரிஷியஸிலிருந்து திரு. அருணாசலமும் தமிழகத்திலிருந்து திரு. ராகவனும், மலேசியாவின் சார்பில் திரு. அப்துல்லாவும் இலங்கையிலிருந்து பண்டிதரும் பங்கு பெற்றுச் சிறப்பித்ததை அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உலகத் தமிழ் மன்றத்தின் சார்பில் ‘தமிழ் உலகு’ என்னும் ஏடு ஒன்றை வெளியிட ஆவன செய்து வருவதாக குறிப்பிட்ட திரு முருகு சுப்பிரமணியன், அனைவரும் ஆதரவு நல்குமாறு கேட்டுக் கொண்டார்.

# உலக மகாகுரு ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி

— சக்தீ அ. பாலையா

‘தனக்குவமை இல்லாதான்’ என்று வள்ளுவப் பெருந்தகை குறள் வழிப் புலப்படுத்தியமைக்குச் சான்றாகவுள்ள ஒருவரே மகாகுரு ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி.

‘உனக்கு நீயே தலைவன்’ என்ற உள்ளுறுதியை அளித்து மனித இனத்திற்குப் புதுவாழ்வை பெருவாழ்வை புரட்சிகரமான எழுச்சியை விழிப்பை — ஊட்டும் இப்புனிதரின் பிறந்த நாள் கடந்த 11-5-1966 ஆகும்.

பழைமை, பழமை எனப் பாழ்பட்டுப்போன மூடக் கொள்கைகளிலே — கட்டுப்பாடுகளிலே, உண்மை எது என அறியாது உழன்ற சமுதாயத்தில் புதுமைக்கு இடமளியாமல் சென்றதையே எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணாகி நிலைகுலைந்து நலிந்து மெலிந்து நடைப்பிணமாக வாழும் மக்களினத்தை உயிர்பெற்ற புதிய சமுதாயமாக ஆக்குவதற்கு தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொண்டுள்ள இப்பெருந் தத்துவ ஞானியின் கருத்துக்கள் இவ் விருபதாம் நூற்றாண்டின் இருளைப்போக்கிக் கொண்டிருக்கும் ஒளிச்சுடர் என்பதில் ஐயமில்லை.

## தனிமனித சுதந்திரம்

சரித்திர காலத்திற்கு முன்னும் பின்னும், மனிதனை மனிதன் அடக்கி ஒடுக்கி அதிகாரம் செய்வதிலும், ஒருவனுக்கொருவன் பிறன்நலன் கருதாது இவ்வுலகப் பொது நலம் — சுதந்திரம் — உறவு என்பனவற்றில் சிந்தை செலுத்தாது தனிமனித சுதந்திரத்தைப் பேணாது வாழ்ந்த படியால் மனித உலகமே அச்சமும் — அறியாமையும் — பிற்போக்கும் நிறைந்ததாக வளர்ந்துள்ளது. ‘தனிமனித சுதந்திரமே உலக சுதந்திரம், தனிமனித பிரச்சினையே உலகப் பிரச்சினை’ என்ற தத்துவ சிந்தனையிலிருந்து நாம் விலகி வெகு தூரம் போய்விட்டோம். ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற தமிழ்ப் பெருங்குடியின் உண்மை உறவுப் போதனை நம்மிடையே இன்று காணப்படவில்லை. இதற்கெல்லாம் காரணமாக அமைந்தவை பண்டைய ஆக்கிரமிப்பாளர்களினதும் அதிகார வெறியர்களினதும் கொள்கைகளேயாகும்.

இந்தக் கொள்கைகளால் தனிமனித சுதந்திரம் கட்டுப்படலாயிற்று. அறிவுக்கு எல்லை கட்டிக்கொண்ட சமுதாயங்களில் சுதந்திரம் கற்பனையாகிவிட்டது. அச்சம் தலையெடுத்தது. சாதிகளும் மதங்களும் வழிபாடுகளும் பயங்கரத் தெய்வங்களும் கற்பிக்கப்பட்டன. காலவேகத்தில் மனிதன் தன்னறிவை இழந்தான். உண்மை எது என உணரும் வாய்ப்பும்அழிந்தொழிந்தது. பிரிவினைகளும் பேதங்களும் எளியோருக்கும் வலியோருக்கும் இடையில் ஏற்பட்டன.

வலியோரின் சுகபோகங்களுக்கு மதங்களும் அவர்கள் கற்பித்துக் கொண்ட தெய்வச்சிலைகளும் — கொள்கைகளும் உதவியாக நின்றன. ஏழைகள், எளியவர்கள் வலியோர்களால் அடக்கியாளப்பட்டனர்.

இந்த நிலையில் வளர்ந்த சமுதாயத்திலே தனிமனித சுதந்திரமும் சமுதாய உறவும் அச்சத்தால் அழிக்கப்பட்டு விட்டன எனக் கூறுதல் பொருந்தும்.

இன்றைய உலகில் போர், பகை பிரிவுபோட்டி அரசியல், மதங்கள், ஏற்பட்டு நிலவுவதற்குக் காரணமான பழைமைச் சிந்தனைகள் மனித மனத்திலிருந்து விலக்கப்படுமானல் அந்த மனம் சுதந்திரமானதாக — கட்டுப்பாடற்றதாக நிலவும் அத்தகைய மனத்திற்றான் உண்மையும் அழிவில்லாமையும் ஏற்படும். ஆதலின் தனிமனிதன் ஒவ்வொருவனும் தன்னறிவால — தன்னம்பிக்கையால் — தெளிவால் விழிப்படைந்து விடுவதே சமுதாயத்தை விழிப்படையச் செய்ய ஏற்றதாகும். இவ்வழியே சுதந்திரத்திற்கு வாழ்வளிப்பதாகும் தனிமனித விழிப்பு சமுதாய விழிப்பை ஏற்படுத்தும் என்பதில் ஐயமன்று. என்பன போன்ற உயர்ந்த தத்துவங்களை உலகெல்லாம் பரப்பிவரும் புதுஉலக சிற்பி ஞானி ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி.

‘ஆக்கப்பெற்ற மதங்களும், கொள்கைகளும் கட்டுப்பாடுற்ற எண்ணங்களும் பழக்க வழக்கங்களும் உண்மை எது எனக் காட்டுவனவன்று. நாம் உண்மை என அறிந்தவை எதுவும் உண்மையன்று. உண்மை முடிவற்றது. அது எது என அறிவதே வேண்டற்பாலது.

சத்தியத்தை அடைவதற்கு மதங்களும் மார்க்கங்களும் அவசியமன்று. கட்டுப்பாடற்ற மனத்தாற்றான் காணுதல் எளிது, என்ற பேருண்மையை நமக்குப் புகல்பவர் மகாகுரு ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி.

பரமஞான சபையாரில் சிறந்து விளங்கிய அன்னி பெஸண்ட், லீட்பேட்டர் முதலிய தத்துவ ஞானிகளால் கேள்வி ஞானத்தால் வளர்க்கப்பட்ட மகாகுரு ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி பரமஞான சபையைக் கலைத்து மனிதன் சுதந்திரமாக வாழ்வதற்குச் சுயஅறிவே அவசியமென்பதை வலியுறுத்தி வையத்தையே உண்மை அறிவொளியில் கலந்தின்புறச் செய்யும் மகாத்மாவாக விளங்குகிறார்.

இருபதாம் நூற்றாண்டில் இந்த வையத்தை வாழ்விக்கும் இரட்சகனாக விளங்கும் மகாகுரு ஜிட்டு கிருஷ்ண 11-5-1895ல் தமிழ்நாட்டில்

(14-ம் பக்கம் பார்க்க)

ஆண், பெண்
இருபாலாருக்கும்
தனிமைக் குணம், பேய் தோஷம், எலும்புருக்கி நோய், வயிறு நெஞ்சு எரிவு, நச்சுத்தன்மையான சாப்பாடு வயிற்றிலிருத்தல், மெலிவடைதல், உடல் அவலெட்சணம், ஆகியவற்றை மர்ம வழியில் காலக் கிரமத்தில் குணப்படுத்திப் பார்ப்போர் பரவசமடையும் விதத்தில் உடலை மாற்றி விடுவேன்.
விபரங்கள் இலவசமாக அனுப்பப்படும்.
வைத்தியாச்சாரி
பி. எம். சிசாநாயக்க
த. பெ. 1281,
கொழும்பு.

சுதந்திரன்
SUTANTIRAN

1966 மே மாதம் 18-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-13.
தொலை பேசி எண் - 3411   த. பெ. 1183

# தாய்மொழியே போதனைமொழி

கல்வி அமைச்சர் திரு. இரியகொல்லயின் வெள்ளை அறிக்கை மீது பலத்த கண்டனங்கள் தெரிவிக்கப்படுகின்றன. பிக்கு பல்கலைக்கழகம் அமைக்கும் அவரது திட்டத்தை மாநாயக்க தேரோக்கள் உட்பட பிரபல பிக்குகள் பெரும்பாலோர் கண்டிக்கின்றனர். இத் திட்டத்தால் பிரிவெனா பல்கலைக் கழகங்கள் பாதிக்கப்படுவதுடன், பிக்குகள் விஞ்ஞானம் பயில முடியாத நிலையும் ஏற்படுமென்று அவர்கள் அஞ்சுகின்றனர்.

தாய்மொழிமூலம் கல்வி போதிக்கவேண்டுமென்ற நியதியை வெள்ளை அறிக்கை தகர்த்துவிட்டது. பிள்ளையின் போதனாமொழி சிங்களமா, தமிழா என்பதை அப்பிள்ளையின் பெற்றோர் தீர்மானிக்கவேண்டும் என்று கூறுகிறது இந்த அறிக்கை.

தாய்மொழி மூலம் கல்விபயில ஒவ்வொரு பிள்ளைக்கும் உரிமை உண்டென்பது உலகமெங்கினும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சர்வதேச நியதி. இந்த நியதியைத்தான் தலைகீழாக மாற்றியுள்ளார் கல்வி அமைச்சர். சிங்களம், தமிழ் இரண்டிலொன்றைப் பெற்றோரே தெரிவு செய்யட்டும் என்று கூறுவதின் நோக்கமென்ன?

இத்தகைய ஒரு சட்டம் எப்படிச் செயற்படுமென்பதை ஆராய்ந்தால், இந்தநோக்கத்தைத் தெரிந்துகொள்ள முடியும்.

சிங்களம் உத்தியோக மொழியாக இருப்பதால், அந்த மொழிமூலம் தங்களின் பிள்ளைகள் படித்தால்அரசாங்க உத்தியோகங்களைப் பெற வாய்ப்பு அதிகமாக இருக்கும்என்று தமிழ் பேசும் மக்களிற் சிலர் கருதுவது சாத்தியமே. அவ்வாறு கருதும் படி அவர்களைத் தூண்டுவதும் சாத்தியமே இத்தகையதவறான கருத்தின் காரணமாகத் தங்களின் பிள்ளைகளுக்குச் சிங்களம் மூலம் கல்வி போதிக்க அவர்கள் இணங்கலாம். அதை அடிப்படையாகக்கொண்டு தமிழ்ப்பகுதிகளுக்குச் சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதற்கும் இடம் கிடைக்கலாம்.

தென்னிலங்கையில் போதனைமொழி மாற்றம் இன்னும் எளிதாகிவிடும். இங்கு பாடசாலைகளிலுள்ள தமிழ் வகுப்புகள் பல ஏற்கனவே மூடப்பட்டுள்ளன. போதிய தமிழ்பாடசாலைகளும் கிடையாது. அவர்கள் வசிப்பதும் சிங்களப் பிரதேசத்தில். அவர்கள் சிங்கள மக்களால் சூழப்பட்டுள்ளனர், இந்த நிலையில் தென்னிலங்கைத் தமிழ்பேசும் பெற்றோர் பலர் தங்கள் பிள்ளைகளின் போதனாமொழியாகச் சிங்களத்தைத் தெரிவுசெய்ய முன்வரக்கூடும்.

இப்பொழுதே தென்பகுதியில் பெற்றோர் அநேகர் தமிழ் பாடசாலைகள் இல்லாத காரணத்தால், வேறு வழியின்றி, தங்களின் பிள்ளைகளைச் சிங்களப் பாடசாலைகளுக்கு அனுப்பி வருகின்றனர்.

ஆதலின், சிங்களத்தைத் தமிழ்ப் பிள்ளைகளின் போதனாமொழியாக்கி, படிப்படியாகத் தமிழ்பேசும் இனத்தை அழிப்பதற்கு நேரடியாக உதவுகிறது திரு. இரியகொல்லையின் இத்திட்டம்.

சிங்களப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் போதனாமொழியாகத் தமிழைத் தெரிவுசெய்வதற்கும் இத்திட்டத்தில் இடமிருக்கிறதல்லவா, என்று கேட்கலாம்.

சிங்களம் அரசகருமமொழியாகவும், சிங்களவர் பெரும்பான்மை இனமாகவும் இருக்கும்போது, எந்தச் சிங்களப் பெற்றோரும் தங்களின் பிள்ளைகளுக்குத் தமிழ்மூலம் கல்வி போதிப்பதற்கு ஒருபோதும் சம்மதிக்கவே மாட்டார்கள். ஆகவே சிங்களமக்கள் தமிழைப் போதனாமொழியாக ஏற்றுக்கொள்ளும் பிரச்சினையே கிடையாது.

ஆதலின், கல்வி அறிக்கையில் காணப்படும் இத்திட்டம் தமிழ்பேசும் பெற்றோருக்காகவே ஆக்கப்பட்டதென்பது தெளிவாகிறது. இன ஒழிப்புக்கான நீண்டகாலத் திட்டங்களில் இதுவும் ஒன்று என்று கூறின் மிகையாகாது.

அத்துடன், தென்னிலங்கையில் பாடசாலைகளில் எஞ்சியுள்ள தமிழ் வகுப்புகளையும் மூடுவதற்கு இத்திட்டம் கல்வி அமைச்சுக்கு உதவியாக இருக்கமுடியும்.

மந்திரிசபை இவ்விடயத்தைப் புனராலோசனை செய்ய விருப்பதாக அறிகின்றோம். தேசிய ஐக்கியத்தைப் பலப்படுத்தவேண்டுமானால் தேசிய இனங்களையும் தேசியமொழிகளையும் வளர்க்கவேண்டுமென்பதை உணர்ந்து, அதற்கு உறுதுணையாக நிற்கும் 'தாய்மொழி மூலம் கல்விபயிலும்' உரிமையை ஒவ்வொரு பிள்ளைக்கும் பெற்றுக்கொடுக்க மந்திரிசபை தயங்காது என்று நம்புகின்றோம்.

புதிய தேசியக் கல்வி திட்டத்தின் மூலம் தோட்டப் பிள்ளைகளுக்கு விமோசனம் கிடைக்குமென்று எதிர்பார்த்தோம். மீண்டும் அஃது எட்டாக்கனியாகிவிட்டது.

'தோட்டப்பாடசாலைகளை அரசாங்கம் மேற்கொண்டு அபிவிருத்தி செய்யவேண்டுமானால், தோட்டப்பிள்ளைகளின் போதனாமொழி சிங்களமாயிருத்தல் வேண்டும். தமிழே போதனாமொழியாக இருக்கவேண்டுமானால், அந்தப் பாடசாலைகளை ஏற்று, அபிவிருத்திசெய்ய அரசாங்கத்தால் முடியாது.' —இது முன்னாள் அரசாங்கம் அன்று கொண்டிருந்த கொள்கை.

இதே கொள்கையைத் தேசிய அரசாங்கமும் கையாள முன்வந்திருப்பதைக் கண்டு வருந்துகின்றோம்.

'தாய்மொழியே போதனாமொழி' என்ற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமானால், தோட்டப் பாடசாலைகளை ஏற்று அவற்றின் தரத்தை உயர்த்துவது அரசாங்கத்துக்குக் கடினமன்று.

ஆகவே தேசிய அரசாங்கத்தின் கல்விக் கொள்கையை மந்திரிசபை மீண்டும் முற்றாகப் பரிசிலனை செய்யவேண்டுமென்பதே தமிழ்பேசும் மக்களின் கோரிக்கை.

# மார்ட்டின் அறிக்கையை ஜீ. ஜீ. ஏற்றுக் கொண்டாரா?

## கிளிநொச்சி விவகாரம் புதிய போர்க்களமாம்

யாழ் நகரசபை எல்லை விஸ்தரிப்புப் பற்றிய மார்ட்டின் அறிக்கைக்கு எதிராக எடுத்து வந்த நடவடிக்கைகளை திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் கைவிட்டு விட்டாரா என்பது இன்று அரசியல் வட்டாரங்களில் எழுந்திருக்கும் கேள்வியாகும். இரு வாரங்களுக்கு முன்னர் சுதந்திரன் வெளியிட்ட ஒரு செய்தி திரு ஜீ ஜீ. யின் நடவடிக்கைகளைப் பெரிதும் திசை திருப்பியுள்ளது.

மார்ட்டின் அறிக்கையை ஏற்றுக் கொள்ளப் போவதில்லையென்று முன்னாள் உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஏ. பி. ஜெயசூரியா தம்மிடம் நேரில் கூறியதாகவும், திரு. சி. எக்ஸ். மார்ட்டின் யாழ்ப்பாணத் தொகுதிக்கான தனது வேட்பாளர் மனுவை வெளியிட்ட பின்னரே அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தார் என்றும் திரு. ஜீ ஜீ பொன்னம்பலம் மேடை தோறும் கூறிவந்தார். இதே கருத்துப்பட இன்றைய அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் அவர்களுக்கும் அவர் ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

### ஜெயசூரியா விளக்கம்

உண்மையை அறிய விரும்பிய திரு. திருச்செல்வம் முன்னாளைய அமைச்சர் திரு. ஜெயசூரியாவிடம் விளக்கம் கோரினார். உண்மை வெளியானது. திரு. ஜீ. ஜீ. கூற்று அனைத்தும் பொய்யென நிரூபிக்கப்பட்டது. இக் கடிதப் பரிமாறல்களை நாம் இரு வாரங்களுக்கு முன்னர் வெளியிட்டோம்.

சுதந்திரன் இக்கடிதங்களை வெளியிட்டதைத் தொடர்ந்து திரு. ஜீ. ஜீ. மார்ட்டின் அறிக்கையைப் பற்றிப் பேசுவதை நிறுத்தி விட்டார்.

திரு. பொன்னம்பலத்தின் மௌனம் திரு. ஏ. பி. ஜெயசூரியாவின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தவை அனைத்தும் உண்மை என்பதையும் தான் இதுவரை கூறிவந்தது அனைத்தும் பொய் என்பதையும் பிரச்சினைக்கிடமின்றித் தெளிவுபடுத்திவிட்டது. இந்த கசப்பான உண்மையை திரு.ஜீ.ஜீ. யும் மறுக்கமாட்டார்.

மார்ட்டின் அறிக்கை மீது திரு ஜீ. ஜீ. மௌன விரதம் அனுஷ்டிப்பதற்கு முன்னர் கூறிய ஒரு கருத்து இச்சந்தர்ப்பத்தில் நிச்சயம் ஆராயப்படவேண்டிய ஒன்றாகும். மார்ட்டின் அறிக்கை அமுல் நடத்தப்பட்டால்தான் தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறுவேன் என்று திரு. ஜீ. ஜீ. யாழ்ப்பாணத்தில் கூறினார். இது தேசிய அரசாங்கத்தை மிரட்ட அவர் எடுத்திருக்கும் புதிய வழி என்பதை அவரே மறுக்க முடியாது. திரு. பொன்னம்பலத்தின் இந்த மிரட்டல் அவர் நிலையில் சாத்தியமானதா?

### நேரடி நடவடிக்கையா?

மார்ட்டின் அறிக்கை அமுலை எதிர்த்து தேசிய அரசாங்கத்திலிருந்து திரு பொன்னம்பலம், வெளியேறிய பின்னர் என்ன நடவடிக்கைகளை எடுக்கப் போகிறார் என்பதைத் தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கை அமுலாவதை அவர் எதிர்ப்பதாயின் தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதுடன் மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடாது. தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதிலேயே பிரச்சினை ஆரம்பமாக வேண்டும்.

மார்ட்டின் அறிக்கை அமுலை எதிர்த்து நேரடி நடவடிக்கைகளில் குதிக்க வேண்டும். அரசாங்கத்தை அடிபணிய வைக்க வேண்டும். இவற்றையெல்லாம் திரு. ஜீ ஜீ. செய்யத் தயாராகி விட்டாரா என்பது இன்று பலரது கேள்வியாகும்.

இத்தனைக்கும் மேலாக திரு. ஜீ ஜீ. அரசாங்கத்திலிருந்து வெளியேறியதும் எதிர்க்கட்சிக்கல்லவாசெல்ல வேண்டும்? இது அவரின்

சுதந்திரன் அரசியல் திடல்

அடிப்படை நோக்கத்திற்கே மாறுபட்டதாகும். எனவே தேசிய அரசாங்கத்திலிருந்து பொ. கட்சி வெளியேறும் என்பது அத்தனை சுலபமான ஒன்றல்ல என்பது தெளிவாகிறது.

### மிரட்டலை நிறுத்துக

அவர் தேசிய அரசாங்கத்தில் அழையா விருந்தினராகவே நுழைந்தார். ஏனைய தேசிய அரசாங்கக் கட்சிகளைப் போன்று பொ. கட்சி எந்த உத்தரவாதத்தின் பேரிலும் இணைந்த ஒன்றல்ல. எனவே திரு. ஜீ. ஜீ. அவர்களின் மிரட்டல் இங்கும் அர்த்தமற்றதாகி விட்டது என்பது தெளிவாகிறது.

கடந்த வாரம் நாம் இந்தப் பந்திகளில் குறிப்பிட்டது போன்று மார்ட்டின் அறிக்கைக்கு காட்டும் எதிர்ப்பை திரு. பொன்னம்பலம் கைவிடுவதே ஒரேவழி. அந்தநிலைக்கு அவர் வந்துவிட்டார் என்றே கூறவேண்டும். தேசிய அரசாங்கத்திலிருந்து அவர் வெளியேறினாலும் அதன் அமுலை அவரால் தடுத்து நிறுத்த முடியாது. எதிர்த்துப் போராடும் சக்தி அவரிடம் இல்லை. அவரின் அரசியல் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள இருக்கும் ஒரே வழி மார்ட்டின் அறிக்கையை ஏற்றுக் கொள்வதே!

### கிளிநொச்சி விவகாரம்

கிளிநொச்சிக் கிராமசபை விவகாரம் குறித்து யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். கிளிநொச்சியில் புதிதாக ஒரு பட்டினசபை அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் குறிப்பாக கரைச்சி கிராமசபை எல்லையிலிருந்து சில பகுதிகள் இப்பட்டினசபைக்குள் சேர்க்கப்படுவதை வன்மையாகக் கண்டித்துமிருக்கிறார் திரு. பொன்னம்பலம் அக்கடிதத்தில்.

இக்கடிதத்தை அவர் பிரதமருக்கு எழுதியதன் மூலம் இருந்துவரும் சம்பிரதாயத்தை மீறியிருக்கின்றார் என்றே முதலில் கூறவேண்டும். ஒரு தொகுதியின் விவகாரத்தில் மற்றொரு தொகுதியின் பிரதிநிதி தலையிடுவதில்லை என்பது இருந்துவரும் சம்பிரதாயம். கிளிநொச்சிப் பிரதிநிதி யாழ்ப்பாணப் பிரதிநிதி சார்ந்திருக்கும் கட்சியைச் சேர்ந்தவருமல்ல, அல்லது கிளிநொச்சிப் பகுதி யாழ்ப்பாணத்தொகுதியைச் சேர்ந்த பிரதேசமுமல்ல.

### தீர்மானத்தை ஆதரித்தார்

இந்த நிலையில் திரு. ஜீ. ஜீ. எதற்காக கிளிநொச்சிக் கிராமசபை விவகாரத்தில் தலையிட வேண்டும்? ஏற்கனவே கிளிநொச்சிக்கு ஒரு பட்டின சபை வேண்டுமென்று கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. கா. பொ. இரத்தினம் பாராளுமன்றத்தில் ஒரு தனிநபர் தீர்மானம் கொண்டுவந்திருந்தபொழுது அத்தீர்மானம் ஒருமனதாக ஏற்கப்பட்டிருக்கிறது. அத்தீர்மானத்தை பொ. கட்சியைச்சேர்ந்த பிரதிநிதிகளும் ஆதரித்திருக்கிறார்கள்.

இப்பொழுது கரைச்சிக் கிராம சபைத் தலைவர் திரு. பொ. கட்சியில் சேர்ந்துவிட்டார் என்பதற்காக திரு. பொன்னம்பலம் தனது முன்னைய முடிபுக்கு மாறாக பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

கிளிநொச்சிக்கு இன்றுபட்டினசபை அந்தஸ்து மிக அவசியமாகத் தேவைப்படுகிறது. இரண்டொரு அரசாங்க அலுவலகங்கள் இருந்த கிளிநொச்சிப் பட்டினத்தில் இன்று பல கிளை அலுவலகங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. அத்துடன் புதிதாக சில மாவட்டக்காரியாலயங்களும் நிறுவப்படவிருக்கின்றன. மூன்று இலட்ச ரூபா செலவில் புதிதாக ஒரு மத்திய மாவித்தியாலயம் கட்டுவதற்கும் அரசாங்கம் சம்மதம் கொடுத்திருக்கிறது.

### கேந்திர நிலையம்

இன்று கிளிநொச்சிப் பட்டினம் வடபிராந்தியத்தின் கேந்திர நிலையங்களில் ஒன்றாக மாறியிருக்கிறது. இந்த நிலையில் அங்கு ஒரு பட்டின சபை நிறுவப்படுவது அவசியம் என்பதை எவரும்மறுக்க முடியாது.

கிளிநொச்சிக் கிராமத்திற்கு பட்டின சபை அந்தஸ்த்து வழங்குவதன் மூலம் மேலும் அப்பகுதியை முன்னேற்ற முடியுமென பலரும் நம்புகிறார்கள். இந்தநிலையில் கிளிநொச்சிப் பா. உ. வின் முயற்சி தவறானது என்று எப்படிக் காரணம் கற்பிக்க முடியும்?

கரைச்சிக் கிராமசபைத் தலைவரின் செல்வாக்கைக் குறைக்கும் நோக்கத்துடனேயே இப்பட்டினசபைக் கோரிக்கையை திரு. இரத்தி

(9-ம் பக்கம் பார்க்க)

# ஏரிக்கரை ஏடுகள் ஏற்படுத்திய பிரச்சினே

## நிலைமையை தெளிவுபடுத்தினர் தமிழரசுத் தந்தை

"தமிழ் பேசும் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால் எனது கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறத் தயங்க மாட்டாது என்று நான் கூறியது உண்மையே. ஆனல் தமிழரசுக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையில் ஏற்பட்டுள்ள உடன் படிக்கை தற்காலிகமானது என்று நான் கூறவில்லை"யென தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அண்மையில் ஏரிக்கரைப் பத்திரிகைகளில் வெளியான செய்தி யொன்றுக்கு மறுப்புத் தெரிவித்து விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

நல்லூரில் நடைபெற்ற கூட்டமொன்றில் தமிழரசுத் தந்தை அவர்கள் ஐ. தே. க.-தமிழரசு உடன்படிக்கை தற்காலிகமானது என்று கூறினரென ஏரிக்கரைப் பத்திரிகைகள் ஒரு தவருன செய்தியை வெளியிட்டிருந்தன. இத்தவருன செய்தியை அப்பத்திரிகைகள் வெளியிட்டதன் மூலம் தடை நீக்கப்பட்ட இடதுசாரிப் பத்திரிகையான 'ஜனதின'வுக்கு ஜனவரி 8-ம் திகதிக்குப் பின்னர் முதற் தடவையாக இந்த உடன்படிக்கைபற்றி செய்தி வெளியிட ஒரு சந்தர்ப்பம் கிட்டியது.

தவருன செய்தியை ஏரிக்கரை ஏடுகள் வெளியிட்டு தேவையற்ற பிரச்சினையை ஏற்படுத்தியிருப்பதையிட்டு திரு. செல்வநாயகம் நிலைமையை விளக்க முற்பட்டு விடுத்த அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:

"தமிழரசுக் கட்சியினர் தமிழர்களுக்கு அநீதி விளைவிக்கும் ஒரு அரசாங்கத்தில் ஒட்டிக்கொண்டிருக்க மாட்டார்கள். இதை நான் கூறித்தான் தெரிய வேண்டியதில்லை என்பது தெரிந்ததே. எமது கட்சிக்கும் அரசாங்கத்திற்குமிடையில் எத்தகைய பிளவும் ஏற்படப்போவதாக நான் கூறவில்லை. அரசாங்கப் பிரதிநிதிகளைக் குழப்பமடையக்கூடிய முறையிலும் நான் எதுவும் கூறவில்லை.

"எனது நல்லூர்ப் பேச்சையிட்டு எந்த ஒரு அரசாங்க எம். பி.யாவது என்னிடம் கேட்கவில்லை. கடந்த பாராளுமன்றக் கூட்டங்களுக்கு சமுகங்கொடுத்திருந்த நேரத்தில் கூடக் கேட்கவில்லை. எனவே அவர்கள் நமது பேச்சையிட்டு அதிருப்தியடைந்திருப்பதாக எங்ஙனம் கூறுவது?" [இப்பகுதி தினசரி ஏடுகளில் பிரசுரமாகவில்லை.]

## பென்ஸ் கார்

—:—

## ஒரு திருத்தம்

மலேசியத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்குச் சென்றிருந்த வட பகுதித் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பென்ஸ் 229 காரை வாங்கியிருப்பதாக சென்ற வாரம் ஒரு அந்தரங்கச் செய்தியை வெளியிட்டிருந்தோம். குறித்த அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் வாங்கியுள்ள கார் பென்ஸ் 220 என்பதே சரியானதாகும்.

இந்தப் பாராளுமன்ற உறுப்பினர் மாநாட்டுப் பக்கமே தலை காட்டவில்லையென்ற செய்தியும் தவறு என்றும் ஒரே ஒரு நாள் மட்டும் மாநாட்டுக்குச் சென்றிருந்தார் என்றும் அறிகிறேம்.

இந்தத் தவறுகளினுல், குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கு ஏதாவது அவமரியாதை ஏற்பட்டிருப்பதாக அவர் கருதினுல் அதற்காக எமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

## உலக வலம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ருடைய ஏகபோக உரிமையாக மட்டும் இருந்தால் அணுகுண்டுகளை ஒழிக்க முடியாதென்பதும் படைக் குறைப்பு செய்ய முடியாதென்பதும் ஒரு கருத்து.

அணுகுண்டு செய்யாத நடுநிலைமை மாநாடொன்று விரைவில் நடைபெறவிருக்கிறதென்றும் அதற்கு முன்னேடியாக—நாசர்—டிட்டோ—இந்திரா உச்சி மாநாடு நடைபெறுமென்றும் கூறப்படுகிறது. இம்மாநாட்டின் முகிய நோக்கமும் படைக் குறைப்புத்தாணும்.

### கெய்ரோவின் பெருமை

கெய்ரோ உலக அரசியலில் முக்கிய கேந்திரஸ்தானமாக மாறியுள்ளது. டிட்டோ கெய்ரோவுக்கு வந்து நாசருடன் பேச்சுவார்த்தை நடத்திச் சென்றதும் சோவியத் பிரதமர் கொசிஜின் கெய்ரோவுக்கு வந்துள்ளார்.

அவரை அடுத்து சீனப் பிரதமர் சூஎன்லாயும் கெய்ரோவுக்கு வரவிருக்கிருர்.

இவர்களின் பேச்சுகள் பெரும்பாலும் வியட்நாம் பற்றியதாகும் என்று அவதானிகள் நம்புகின்றனர்.

மத்தியக் கிழக்கில் சோவியத் செல்வாக்கு பரவிவருகிறது. கொசிஜின் கெய்ரோ விஜயம் இச்செல்வாக்கை மேலும் பலப்படுத்தும் என்று கூறப்படுகிறது.

## உணவுப் ..

(-1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவந்துள்ளது. இந்த அதிகாரி உணவு பரிசோதனை பற்றி கொழும்புத் திட்டத்தின்கீழ் இங்கிலாந்து சென்று பயிற்சி பெற்றவர்.

சமீபத்தில் இந்த அதிகாரி ஒரு 'தவறு' செய்துவிட்டதால் அவர் இப்பொழுது வேறு வேலைக்கு மாற்றஞ் செய்யப்பட்டுவிட்டதாகவும், உணவு பரிசோதனை விஷயத்தில் அதிகம் பரிச்சயமில்லாத வேருெருவர் இவரது இடத்துக்குப் போடப்பட்டுள்ளதாயும், அதன் பின்புதான் இந்தக் கலப்படம் அதிகரித்துவிட்டதென்றும் சொல்லப்படுகிறது.

முன்பிருந்த அதிகாரி, யாழ். மேயரின் நெருங்கிய நண்பரான இன்னெரு எம். எம். சி.யின் ஆதரவாளர் ஒருவர் பாலில் செய்து வந்த கலப்படத்தை அம்பலத்துக்குக் கொண்டு வந்த 'தவறை'ப் புரிந்த காரணத்தாலேயே வேலை மாற்றஞ் செய்யப்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது.

## திரு. ஜீ. ஜீ.......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரர் ஒரு அரசாங்கக் கட்சி எம். பி.

இதற்கு பதிலாக மற்றெரு எம். பி. 'ஆமாம்! அவர் தனது திட்டத்தை எந்தளவு குறுகிய காலத்தில் செயல்படுத்துகிருரோ, அந்தளவுக்கு நல்லது. திட்டத்தை உடன் செயல் படுத்தும் வண்ணம் அவருக்கு நான் ஆலோசனை கூறவிருக்கிறேன்' என்று கூறினர்.

## உள்ளூராட்சி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரையிருந்து வந்த பழையசேவையாளர் புதிய சேவையாளர் என்ற வரையறையின் கால வரப்பு உள்ளூராட்சி மன்ற சேவையில் மாற்றப்பட்டிருக்கிறது. 1-1-61க்கு முன்னர் உள்ளூராட்சி மன்ற சேவையில் சேர்ந்த சகல ஊழியர்களும பழைய சேவையாளர்களாக கணிக்கப்படவிருக்கிருர்கள்.

இக்கால எல்லை மாற்றத்தால் பெருந்தொகையான உள்ளூராட்சி மன்ற எழுதுவினைஞர்களும், ஏனையசேவையாளர்களும் இதுவரை இழந்துவந்த சம்பள உயர்வை மிக அண்மையில் பெறவிருக்கிருர்கள். அத்துடன் ஆட்சி மொழியில் தேர்ச்சிபெறவில்லையென்ற காரணத்தினல் கட்டுப்படுத்தப்பட்ட பதவி உயர்வுகளும் அவர்களுக்கு முறைப்படி வழங்கப்படும்.

## மார்ட்டின்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

னம் முன்வைத்திருப்பதாக திரு. பொன்னம்பலம் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிருர். கரைச்சிக் கிராமசபைத் தலைவருக்கு உண்மையில் மக்கள் ஆதரவு இருந்தால்திரு. இரத்தினம் அவர்களால் அவரின் செல்வாக்கை எங்ஙனம் முறியடிக்கமுடியும்?

### அமைச்சர் யார்?

உள்ளூராட்சி மன்ற விவகாரத்தைக் கவனிப்பவர்பிரதமரல்ல. அதற்கென தனியாக ஒரு அமைச்சர் இருக்கிருர். திரு ஜீ. ஜீ. ஏன் அவருக்கு கடிதம் எழுதாது பிரதமருக்கு எழுதவேண்டும்?

யாழ். மாநகரசபை விவகாரத்தில் நல்லூர் பிரதிநிதி தலையிடுகிருர் என்ருல் அதற்குக் காரணம் உண்டு. யாழ். நகரசபையின் 7 வட்டாரங்கள் நல்லூர் தொகுதியைச் சேர்ந்தனவாக இருக்கின்றன. அத்துடன் வடமாகாணத்தவர்களின் முக்கிய நகரமாக யாழ்ப்பாணம் விளங்குகிறது. இதைக் காரணம் காட்டி திரு. ஜீ. ஜீ. கிளிநொச்சி விவகாரத்தில் தலையிட முடியாது.

பண்பு கருதியும், நியாயம் கருதியும் கிளிநொச்சி விவகாரத்தில் இனியாவது திரு. ஜீ. ஜீ. தலையிட மாட்டார் என நம்புகிறேம். தொடர்ந்தும் இவ் விவகாரத்தில் ஈடுபட்டு அவர் சாதிக்கப் போவதும் உருப்படியாக எதுவும் இல்லை.

## சிறு பிள்ளை விளையாட்டு

மே 4ந் திகதி "வீரகேசரி" பத்திரிகை "திவாகரன்" என்ற பெயரில் ஒரு போலிப் பதிப்பை வெளியிட்டு பத்திரிகை உலகைக் கேலிக் கூத்தாக்கிவிட்டது.

இதனை வாசித்தவர்கள் மற்றெரு தினசரியான "தினகரனை"க் கிண்டல் செய்வதற்காகவே இதனை வெளியிட்டுள்ளனர் என்று பேசிக் கொண்டனர். தினகரன் தனது விற்பனை இதனுல் பாதிக்கப்பட்டதென்று கூறி பெருந்தொகையான நஷ்ட ஈடு "வீரகேசரியிடம்"கோர முடிவுமென்றும், இரு தினசரிகளும் இப்பொழுது ஒரே நிர்வாகத்தின் கீழ் வந்துவிட்டதாகக் கூறப்படுவதால் அவ்வாறு நடைபெருதென்றும் ஒரு வழக்கறிஞர் கருத்துத் தெரிவித்தார்.

(தினகரன் திரு. விஜயவர்தன குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சொந்தமானது என்பது வாசகர்கள் அறிந்ததே!)

இரு பத்திரிகைகளும் ஒரே நிர்வாகத்தின் கீழிருந்தும் ஒரு பத்திரிகை மற்றெரு பத்திரிகையை இம்மாதிரி மறைமுகமாகத் தாக்குவதேன் என்று கேட்கப்படுகிறது. இதற்கு விளக்கம் கொடுக்கும் ஒரு "வீரகேசரி" வாசகர், 'வீரகேசரி' தமிழர்களுக்கு மட்டும் சொந்தமாயிருந்தபோது, இரண்டும் போட்டிப் பத்திரிகைகளாக இருந்ததென்றும், இப்போட்டியின் விளைவாகவே இரு பத்திரிகைகளும் வெவ்வேறு வாசகர்களைத் தேடிக் கொள்ள முடிந்ததென்றும், இப்பொழுது இரண்டும் ஒரே நிர்வாகத்தின் கீழ் இருப்பதால், இரண்டிலொன்று வாசகர்களால் கைவிடப்படலாமென்றும், அந்த நிலைமையைத் தவிர்க்க வேண்டுமானுல் பழைய் போட்டியை நிரந்தரமாகப் பாதுகாத்துக் கொள்ளவேண்டியது அவசியமென்றும் "இக் கிண்டல் சித்திரம்" வெளியிட்டதன் நோக்கம் அதுதான் என்றும் கூறினர்.

ஒரு பிரமுகர் இந்தப் போலிப் பதிப்பில் தன்னைப் பற்றி பிரசுரம் செய்யப்பட்ட செய்தியின் மீது பெருந்தொகையான நஷ்ட ஈடு கோரப்போவதாக அறியப்படுகிறது.

ஆனல் போலிப் பதிப்பு வெளியிடுவதுபோன்ற சிறுபிள்ளை விளையாட்டுகளில் பொறுப்புள்ள ஒரு பத்திரிகையின் ஆசிரியர் குழு ஈடுபடாமலிருப்பது பத்திரிகை உலகின் கௌரவத்தையும் அந்தஸ்தையும் பாதுகாத்துக்கொள்ள உதவுமென்று ஒரு பத்திரிகைத் தொழில் "ஜாம்பவான்" கருத்து தெரிவித்தார்.



# சுமை

## எமது சிறுகதை

## "ஈழத்துறைவன்"

சீறேவல் ஒழுங்கையில் அசை போட்டுச் செல்லும் ஒற்றை மாட்டு வண்டியின் சக்கரத்தைப் போல, அவர் உள்ளத்தில் நினைவுகள்... வருடி, உருண்டு, சவண்டு விழுந்தன.

கார்திக்கேசர் வான் கோழித் தூக்கத்தைக் கலைத்ததுபோல, இமைகளை விரித்தார்...அது சுட்ட மணலைப் போல் ஒட்டுப் படாத இமைகள். பருத்திக் கொட்டை வெடித்தது போல, மூப்பின் நுரை தள்ளிய நரைத்த புருவத்தின்மேல் மெதுவாகத் தடவி, வழுக்கைத் தலையில் வரம்பு கட்டிய குடுமியை இழுத்து முடிந்து கொண்டார்.

அவர் சிந்தனையில் நெறி கட்டிய வாடிக்கைக் காரர்களில் அரிய குட்டியை நினைத்தபோது அருவருப்புத் தட்டியது. தலையணையின் கீழ் புதைத்து வைத்திருந்த கணக்குப் புத்தகத்தை எடுத்து விரித்தார்...

அதில் அந்தக் கணக்கு... வட்டியும், முதலுமாக அறுபத்தைந்து ரூபாய், முழிபிதுக்கி அசுரகளையூட்டியது...

அவர், கடந்த ஐந்து மாதங்களில் சுளையாக வாங்கிய இரண்டு மாத வட்டிப் பணம் பத்து ரூபாய் போக அந்த அறுபத்தைந்து ரூபாய் அப்படியே இருந்தது. அவன் சொல்லிய மூன்றாவது தவணையும் நேற்றோடு முடிந்து போனதை நினைத்த போது, கோபம் கொப்பளித்த கண்கள், செட்டியார் பாணியில் பேரேட்டுப் புத்தகத்தில் குறிப்பு எடுத்துக் கொண்டு எழுந்தார்.

உலகின் பாதியை மறை பொருளாக்கும் இருட்கோலத்தின் மூலஸ்தானம்போல, இருந்த அந்தக் குடிசைக்குள் தகர விளக்கின் திரியை இழுத்துப் பற்ற வைத்தாள் கனகம்மாள்; வீட்டில் விழுந்தோடிக் கரைந்த வெளிச்சத்தில் பிள்ளையைப் பார்த்த போது, நெஞ்சக் குழியில் அக்கினி மூண்டது போல இருந்தது.

மெதுவாக அதன் தலை மாட்டில் குந்தி தைலத்தை நெஞ்சில் பூசிவிட்டாள். அது கொலலன் பட்டறைத் துருத்தியைப் போல காற்றூதி, ஊதி மூச்சு விட்ட நிலையைக் கண்டதும் அவள் விழிக்கூட்டில் நீர்கட்டி அது விளிம்பு உடைத்து வீழ்ந்தது.

அசையாமல் தூங்கும் அந்த ஜீவனைத் தூக்கி மடிமீது வைத்து அணைத்துக் கொண்டதும் அவள் நெஞ்சத்தில் ஒரு கசிவு... எத்தனை கனவுகள் கண்டிருந்தாள். அவள் முதற் பிள்ளை ஆண்குழந்தையாகப் பிறக்க வேண்டும் என்று வைத்த நேர்த்திக் கடன்கள்தான் எத்தனை...

மூக்கும், முழியுமாக அந்தக் குழந்தை மடியில் தவழ்ந்த போது எத்தகைய மகிழ்ச்சி? 'என்ரை ராசா, நீ படிச்சிப் பாஸ் பண்ணி உத்தியோகம் பார்த்த பின்பு தானடா நான் சாவன்...என்ர துரை...'என்று அவள் கொடுத்த முத்தங்கள்... அந்தப்பிஞ்சுக் கன்னத்தை வருடி, தலைமுடியைக் கோதிவிட்ட பொழுது... எத்தனை மனக்கோட்டைகளைக் கட்டிவிட்டாள்! அத்தனையும் உறைந்து கல்லாகிப் போன அந்த இரவு...

அந்தக்குழந்தை துடித்த துடிப்பு! நேற்று நடந்தது போல நினைவுகள் பின்னிக், கொழுவி அறுந்து விழுந்தது, 'அடி புள்ள... இனிப் பார்த்துப் பயனில்லடி, ஆசுப்பத்திரிக்குக் கொண்டு ஓடு, இது இளம் புள்ள வாதம் போல...' என்ற அன்னம்மாவின் பேச்சு சரியாகவே போய் விட்டது. அன்று முதல் அவன் இடது கையும், காலும் சூம்பிக் கூம்பி வேப்பஞ் சுள்ளியைப் போல படுத்த படுக்கை... அவள் நினைவில் இருந்து விழித்தது போல குழந்தையைத் தடவி விட்டாள், உயிரைப் பிணைத்த அந்த எலும்புக் கூடு அனுங்கிக் கொண்டது அது ஜுர வேகப் பிதற்றல்.

'உங்க யார்...வீட்டில..?' என்ற காத்திகேசரின் குரல் கனகடூரமாக, அவள் காதுக்குள் திமிறியது

அவள் குழந்தையைப் பாயில் கிடத்திவிட்டு வெளியே வந்தாள், அங்கே காத்திகேசரின் முகம். சாங்கை படர்ந்ததுபோல கொதிப் போடு நின்றார்.

'எங்க...அவன் அரிய குட்டி...வடுவாப் பயல்... என்னை ஏமாத்திக்கொண்டு வாரான் சுளை, சுளையாய் அம்பது ரூபாய் கொடுத்து அஞ்சு மாசமாவுது, என்னெண்டு நெனச்சியள்...? உங்கட கொப்பண்ட பணமோ? வட்டியோட அறுவத்தஞ்சு ரூவாவைக் கோனும்...எங்க...ஆள்...?' என்று உறுமினார் அவர், அது நாதஸ்வர வித்துவானையும் மிஞ்சும் பாவம், குரல் உச்சஸ் தாதியைப் பிடித்து அறந்தது.

'இப்பதானவர்... கடப் பக்கம் போனவர், கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்க, நான்;உங்கட வட்டியோட தந்திடுவன்...' என்று தாழ்ந்த குரலில் பேசினாள், அது ஒத்தூதுபவனின் குழலோசை போல அமுங்கி வந்த ஊதல் சத்தம்;

'இஞ்ச பார்... கனகம்மா, உங்கட சங்கதியள் எனக்கும தெரியும், அவன் குடிச்சுப் போட்டு சுத்தேக்க, என்ட கடனைக் கொடுக்கத்தான் உங்களுக்கு வக்கில்லப்போல.. இண்டைக்கு பணத்த வைக்காட்டி நான் போகன்...' என்று மீண்டும் உருமினார் காத்திக் கேசர்.

அவள் சேலை முந்தாணியால் கண்ணைத் துடைத்துக் கொண்டாள், மூக்கைச் சிறியசத்தம் அவர் காதில் சூழ் கொட்டியது.

'நான் எண்ட காப்பவித்தாவது உங்கட காசத் தந்திடுறன் இந்தத் தவணை மட்டும் பொறுத்துக் கொங்க...இன்னும் ரண்டு நாளைக்குள்ள கொடுத்திடுவன்...இது கந்தசாமியாரானை உண்ம...'என்று அவள் கெஞ்சியதைக் கண்டதும் அவருக்குநம்பிக்கை என்ற ஆதாரத்தண்டு ஊதிப், பருத்தது போன்ற உணர்வு...

'இஞ்சபார்...கனகம்மா, கடசியா இன்னும் ஒரு தவண தாரன், சனிக்கிழம வருவன், அப்ப ஏதும் தவண சொன்னியலோ... நான் கெட்ட மனிசன், என்னைக் கோவிக்காதியள்...' என்று கூறிவிட்டு நடந்தார். அவர் சாத்திய படலையின் சத்தம் இரவை அதிரவைத்து ஓய்ந்தது.

பூவரச மரத்தின் கூனல் முதுகுப் பக்கம் ஒழிந்திருந்த அரியகுட்டி தலையை நீட்டி சாரைப் பாம்பு பார்வை பார்த்துவிட்டு வெளியே வந்தான். அவள் லாந்தர் விளக்கின் திரியைக் குறைத்து விட்டு உள்ளே போனாள், அவன் மௌனமாக பின் தொடர்ந்தான். அரிக்கன் சட்டியால் மூடிவைத்த உலைப்பானை போல் கொதித்துக் கொண்டிருந்த உள்ளங்கள்;

'இவ்வளவு நேரமும் உங்கதான் நின்றியளோ?'

'ஓம்;' என்ற அவன் குரல் தபசிகளின் ஞான அஞ்சலி போல ஒலித்தது. 'நாகலிங்கத்தைப் பாத்தியளோ... அவர் என்ன சொன்னார்...?'

'கொழும்புக்குப் போகினமாம் அடுத்த மாசம் பாப்பம் என்றினம்' என்ற அரியகுட்டியின் குரலில் இளையோடிய சோகத்தை மொண்டுகொண்ட அவன்; மெதுவாகக் குழந்தையிடம் போனான். அந்த நொஞ்சான் உடம்பில் ஓமாகினி மூண்டது போன்ற காங்கையைக் கண்டதும்—

'ஐயோ...அன்னம்மாவைக் கூப்பிடுங்க' கூப்பிடுங்க'என்று பெரும் கூப்பாடு போட்டு விட்டாள்; அந்தக்குடிசைக்குள் ஊழிக்கூத்தின் பிரவாகம் ஒன்று மூண்டது போல அவள் கதறல்; அந்தப் பிரளயம் அரியகுட்டியின் உயிர்க்கொடியைத் திருகியது போல,வெளியே ஓடினான். அவன் காலில் இடறப்பட்ட 'குவளை' உருண்டு போனது.

யாழ்ப்பாண டவுனுக்குப் போய் காணி வழக்கை முடித்துக் கொண்டு வந்த காத்திகேசர் உடையை மாற்றிக் கொண்டிருந்தார். அங்கு போட்டது இன்னும் சரியாகத் தெளியவில்லை, நெஞ்சுக்குள் ஏதோ குமட்டிக் கொண்டு வந்தது...

'கொஞ்சம் ஓவராகத் தான் போட்டுட்டன்,மனுசன் விட்டால் தானே... ...நல்ல புளைப்பு, கோட்டுக்கும், புரக்குராசி விட்டுக்கும் அலைஞ்சதில உசிர் போச்சு...பணத்தையும் கொடுத்து 'வழக்காட வேணும் என்ற தலைவிதி; அவனட கெப்பர்...அவர் பெரிய கொம்பர் மாதிரி வந்திட்டார்' என்று ஆயாசம் தீர்த்துவிட்டு, கிணற்றடிக்குப் போனார்.

முகம், கை, கால் அலம்பி வந்த பின்பு, முருகன் படத்திற்கு முன் நின்று கண்ணை மூடிக் கொண்டார். அவர் உதடுகள் முணு, முணுத்த ஏதோ ஒரு தேவாரத்தின் ஒலி தூரத்தில்போகும் கட்டை வண்டியின் கடையாணி போல தேய்ந்து, திமிறி, அடங்கி விட்டது.

'விடிந்தால்... கனகம்மா பணம் தாரதவணை...அவ? ரோசக்காரி ... வெள்ளணையோட போவம்' என்று உள்மனதின் சமாதானத்தோடு சாப்பிடப் போனார்

உதய கதிர்கள் முற்றி வரும் நேரம். வட்டிக்கார காத்திக்கேசர் வடலியைத் தாண்டி நடந்தார், அந்தக் கருக்கு மட்டை காலில் சற்றுக் கீறிவிட்டதும்'சீ...சனியன் இண்டைக்கு யாரிட முழிவிகழமோ...? காத்தாலேயே ரத்தக்காயம்'என்று முணு முணுத்துக் கொண்டு காயத்திற்கு எச்சிலைத் தொட்டுப் போட்டு நடந்தார்.

கனகம்மாவின் வீட்டு வளவிற்குள் கால் வைத்த போது நாலைந்து பேர் வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார்கள் அந்த நிலைமையால் எழுந்த விசாரமான சோக முகங்களைப் பார்க்காத பாவனையில்,என்ன. கனகம்மா...?' என்று குரல் கொடுத்தார். 'கொஞ்சம் இருங்க.. எடுத்துக் கொண்டு வாரன்' என்று எழுந்து உள்ளே போனாள்;

அவர் விழியின் மேச்சலில் படலையடியில் தென்னோலைத் துண்டுகளும், பச்சை வாழை மடல்களும், கலர் கடதாசி வெட்டிய கழிவுகளுமாக குப்பை குவிந்துகிடந்தது. அரியகுட்டி சிங்கப்பூர் பென்சன் காரரோடு கதைத்துக் கொண்டிருந்தான். அவன் பார்த்தும் பார்க்காத தோரணையில் இருந்தது என்னமோ... போல இருந்தது பணத்தை கொண்டு வந்து கொடுத்த கனகம்மா 'சரியாகப் பார்த்துக் கொள்ளுங்க... என்றாள்;

'ஓமோம்;......அதுக்கென்ன...?' என்று பணத்தை மடியில் திணித்துக் கொண்டவர் ஏதோ நினைத்துக் கொண்டவரைப் போல...என்ன கனகம்மா...ஒரு மாதிரியாக இருக்கிறியள்...?' என்றார்.

'என்ர மோன் முந்தா ளாள் செத்துப்போனான்.. இண்டைக்கு மூண்டு...' என்று கதறிக் கொண்டு ஓடிப்போனாள்.

'அட...பாவி... இந்தப் பணம். இருந்ததெண்டா அண்டைக்கு டாக்குத்தரிட்ட கொண்டு போய் இருக்கலாமே...?' என்றாள் அன்னம்மா.

காத்தி கேசரும் துக்கத்தை வரவழைத்துக் கொண்டார். அவர் விரல்கள் மடியில் வைத்திருந்த பணத்தை எண்ணிக் கொண்ட போது அது கனத்த மாதிரியான ஒரு பிரமை.

**அவளின் ஒரே பிள்ளை; இளம் பிள்ளை வாத நோயல் துடிக்கிறது.**

**காத்திகேசரின் கடன் வட்டியும் முதலுமாக பல தவணைகளையும் தாண்டிவிட்டது.**

**-'என்ரமோன் முந்தநாள் செத்துப் போனான் இண்டைக்கு மூண்டு' என்கிறாள் அவள். கர்த்திகேசரின் விரல்கள் மடியில் உள்ள பணத்தை எண்ணத் தவிறவில்லை.**

**-எளிய நடையில் கதையைச் சுவைப்படக் கூறுகிறார் புதிய எழுத்தாளரான 'ஈழத்துறைவன்'**


# ஆனந்தா லேகியம்

**இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.**

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல், மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

# கலைஞர்கள் வேடத்தில் இலங்கைக்கு வரும் அரசியல் தரகர்கள்?

## "லங்கா தீப்ப" எச்சரிக்கை

நடிக, நடிகையர், கலைஞர்கள் வேடந் தாங்கி தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரும் அரசியல் தரகர்களைப்பற்றி தேசிய அரசாங்கத்தை எச்சரிக்கும் காலம் வந்துவிட்டதென்று லங்கா தீப்ப (10-5-66) எழுதியுள்ள அரசியல் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்குறிப்பு மேலும் கூறுவதாவது:—

தி. மு. க. என்னும் தென்னிந்திய வகுப்புவாத ஸ்தாபனம் இலங்கைக்கு அனுப்பி வைக்கும இந்தப் பொம்மைகளைப்பற்றி பல முக்கிய விடயங்கள் தெரியவந்துள்ளது.

சில நாட்களுக்கு முன்பு எம். ஜி. இராமச்சந்திரன் என்னும் நடிகர் இங்கு வந்தார், இவர் தி. மு. க.வை வளர்ப்பதற்காக பதினையிரக் கணக்கில் செலவிட்டவர்.

முன்னுள் அரசாங்கம் ஆட்சியில் இருந்தபோது இராமச்சந்திரன இலங்கை வர பல முறை முயன்ருர். ஆயினும் அவரை இலங்கைக்கு வர அனுமதிக்க வேண்டாமென்று இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதராலயத்துக்கு உத்தரவிடப்பட்டிருந்தது தேசிய அரசாங்கம் வந்த பிறகு இவர் எப்படியோ இலங்கைக்குள் நுழைய வழி கிடைத்துவிட்டது. இதனைப் பிரதமர் கவனித்தல் வேண்டும்.

இலங்கைக்கு வந்தபின்னர் தான் ஒரு தி. மு. க. உறுப்பினரென்று அவர் பகிரங்கமாசக் கூறினர். இந்தியப் பத்திரிகைகள் "அவர் இலங்கையில் திக்விஜயம் செய்தாரென்றும், இலங்கையைக் கைப்பற்றிவிட்டாரென்றும், இலங்கைப்பிரதமரே அவரை வரவேற்ருரென்றும், இலங்கையை அவர் வெற்றிகொண்டுவிட்டாரென்றும் எழுதிபிருந்தன.

இங்கு எழுந்துள்ள முக்கிய பிரச்சினை என்னவெனில் இராமச்சந்திரனை நமது பிரதமர் முன்னிலையில் கொண்டு போய் நிறுத்துவதற்கான இரகசிய ஏற்பாடுகளைச் செய்தவர் யார் என்பதுதான்.

இராமச்சந்திரனுடன் இப்பிரச்சினை நின்றுவிடவில்லை. எஸ். எஸ். இராசேந்திரன் என்னும் மற்ருெரு நடிகரும் இங்கு வந்துள்ளார். இந்திய தி. மு. க. விடமிருந்து இலங்கை — இந்தியருக்கு ஒரு செய்தி கொண்டுவந்திருப்பதாக அவர் பகிரங்கமாசக் கூறியுள்ளார்."



## சிங்கள இதழ்களில்...

# இரகசிய ஒப்பந்தம் உண்டென்பது ஊர்ஜிதம்

## தமிழரசுத் தலைவரின் பேச்சை திசை திருப்புகிறது 'ஜனதின'

ஜனதின (13-5-66) "தொழிலாளர்களைப் பிளவுபடுத்தாதீர்' என்ற தலைப்பில் எழுதியிருப்பதாவது.

'யு. என். பியும் ஏனைய அரசாங்கக் கட்சிகளும் நடத்திய மேதின ஊர்வலத்திலும் பொதுக் கூட்டத்திலும் தமிழரசுக் கட்சி கலந்து கொள்ளாத காரணமென்ன? தமிழ்க்காங்கிரசும் கலந்து கொள்ளவில்லை. இக்கூட்டம்பற்றிய பிரசுரங்களிலும் சுவரொட்டிகளிலும் தமிழரசுத் தலைவர் திரு. செல்வநாயகமும், தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலமும் கலந்து கொள்வதாக வெளியிடப்பட்டிருந்தது. ஆனல் இருவரும் கலந்து கொள்ளவில்லை. இதற்கான காரணம் கேட்டு, அவர்களுக்குத் தகுந்த தண்டனை விதிப்பதற்கான திராணி யு. என். பி. தலைவர்களுக்குக்கிடையாது.

தமிழரசாரின் முயற்சி மொழி பேதத்தின் அடிப்படையில் நாட்டைப் பிளவுப்படுத்துவதுதான். அதே காரணத்தின் மீது தொழிலாளர் வர்க்கத்தையும் பிளவு படுத்த அவர்கள் சகல முயற்சிகளுஞ் செய்கின்றனர். ஆகையாற்ருன் சிங்களம் பேசும் தொழிலாளர்கள் பெரும் பாலோர் நடத்திய மேதினக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சி கலந்து கொள்ளவில்லை.

இதற்கிடையே தமிழரசு—த. காங்கிரஸ் மோதுதலால் குறிப்பாக 'மிரர்' பத்திரிகை பெரிதும் கலக்கமடைந்துள்ளது.

யு. என். பியுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின் மீதே மோதுதல் ஏற்பட்டுள்ளது. 1948ல் திரு. பொன்னம்பலம் திரு. டி. எஸ். சேனநாயக்காவுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் போலன்றி 1965ல் திரு. செல்வநாயகம் திரு. டட்லியுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் தமிழர்களுக்குப் பயனளிக்கும் என்று கூறியதே இம்மோதுதல் ஏற்படக் காரணமாகும். இக்கூற்று உண்மையாக இருக்கலாம்.

ஆனல் இதைவிட மிக முக்கியமான விஷயமென்னவெனில் திரு. டட்லிக்கும் திரு. செல்வநாயகத்துக்குமிடையே ஓர் இரகசிய ஒப்பந்தம் உண்டென்பதை திரு. செல்வநாயகம் ஏற்றுக் கொண்டிருப்பதுதான்.

மற்ருேர் இரகசியமும் வெளியாகியுள்ளது அதுதான் 'டைம்ஸ்' பத்திரிகை நிறுவனத்தால் வெளியிடப்படும் 'மிரர்' பத்திரிகை தமிழர்களின் குரலாகியிருப்பதை அவர்களே ஏற்றுக் கொண்டிருப்பது. 'எங்களின் கவலை முழுத் தமிழ் இனத்தைப் பற்றியதே தவிர கட்சியைப் பற்றியதன்று' என்று டெயிலிமிரர் (10-5-66) தலையங்கம் எழுதியுள்ளது. வகுப்புவாதத்தை பரப்புகிறவர்கள் யாரென்பது இப்பொழுது அனைவருக்கும் வெட்ட வெளிச்சமாகியுள்ளது'

## வட பகுதியில் சிங்களவருக்கு நிலமில்லை

"கண்டியில் வைகாசி தான சங்கிரக சங்கத்தின் 42-வது ஆண்டு விழாவில் மல்வத்த மகாநாயக்க தேரோ பேசுகையில் கூறியதாவது!—

(12-ம் பக்கம் பார்க்க)


# டிஸ்பிரின்

## வலியிலிருந்தும் காய்ச்சற் குணத்திலிருந்தும் நம்பிக்கையான துரித நிவாரணமளிக்கிறது.

டிஸ்பிரினை நம்பிக்கையுடன் உட்கொள்ளுங்கள். அது உங்களுக்கு உடனடி நிவாரணம் தரும்.




விரிவான ஆராய்ச்சிகள் செய்து விசேஷ சேர்வம்சங்கள் கொண்டதாக தனி முறையில் தயாரிக்கப்பட்டது - டிஸ்பிரின். இதனுல் தான் டிஸ்பிரின் விரைவாய் இரத்தோட்டத்தில் சேர்ந்து உடன் நிவாரணமளிக்கிறது.

தலைவலி, காய்ச்சற் குணம், உடல் வலி, பல்வலி, மாதவிடாய் முதலியன தரும் வேதனையிலிருந்து விடுபட, டிஸ்பிரின் உட்கொள்ளுங்கள்.

உலகெங்குமுள்ள டாக்டர்கள் நம்பிக்கையுடன் சிபார்சு செய்வது டிஸ்பிரின்.




டிஸ்பிரினை உட்கொள்ளுதல் சுலபம். அதைத் தண்ணீரிற் கரைத்துக் குடிக்கலாம்; அல்லது வில்லையாகவே விழுங்கி விடலாம்.

றெக்கிற் அன் கோல்மன் தயாரிப்பு.

J.W.T.R.C.91

# தமிழ்ப்பட இறக்குமதிக்குத் தடை?

## இந்திய நடிகர்களை வைத்து இங்கு படங்கள் தயாரிக்கப்படும்

### முன்னணி நட்சத்திரங்கள் படையெடுப்பின் காரணம்

இலங்கையில் தமிழ்ப்படங்களின் இறக்குமதி பெருமளவில் தடைசெய்யப்படலாம் என்று தெரிகிறது. அதற்குப் பதிலாக இந்தியாவிலிருந்து நட்சத்திர நடிகர்களை இங்கு வரவழைத்து தமிழ்ப்படங்களை இலங்கையில் உருவாக்கும் திட்டம் ஒன்றை இலங்கையிலுள்ள திரைப்படத் தயாரிப்பாளர்கள் உருவாக்கி வருவதாக அறியப்படுகிறது.

இந்தியாவிலிருந்து திரைப் படங்கள் இறக்குமதி செய்வதை பெருமளவு கட்டுப் படுத்த அரசாங்கம் முடிவு செய்திருந்த போதிலும் சிறந்த தரமுள்ள படங்களை இலங்கையில் இறக்குமதி செய்ய அனுமதியளிக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியப் படங்கள் இலங்கையில் தடை செய்யப்படும் பட்சத்தில் ஒரு மாற்றுத் திட்டம் ஒன்றினை இலங்கையிலுள்ள படத்தயாரிப்பாளர்கள் உருவாக்கியுள்ளதாக நம்பகமாக அறியப்படுகிறது. அதாவது இந்தியாவிலிருந்து முன்னணி நடிகர்களையும் நடிகைகளையும் வரவழைத்து, இலங்கையில் படங்கள் தயாரிப்பது என்றும், இந்தப் படங்களில் இலங்கை நடிகர்களுக்கும் வாய்ப்பு அளிக்கவும் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இந்தத் திட்டத்தின் மூலம், இலங்கையில் சினிமாத் தொழில் வளரவும், பலருக்கு வேலை வாய்ப்புக்கள் ஏற்படவும் முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் காரணமாகவே, தற்போது இந்தியாவிலிருந்து பல பிரபல நடிகர், நடிகைகள் இலங்கைக்கு வந்து செல்கின்றனரென்றும் சொல்லப்படுகிறது. நடிகர் திலகம் சிவாஜி கணேசனும்' படத் தயாரிப்பாளர் திரு. ஏ. பி. நாகராசனும் வெகு சீக்கிரம் இலங்கை வரவிருக்கிறார்கள். இந்தியத் தமிழ் சினிமா படத்தயாரிப்பாளர் கோஷ்டியொன்றும் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்ய இருக்கிறது.

இலங்கையில் தயாரிக்கப் படும் தமிழ்ப்படங்களில் நடிக்க விருக்கும் நட்சத்திர நடிகர்களுக்கே, இந்தப்படங்களை இந்தியாவில் இறக்குமதி செய்யும் உரிமை அளிக்கப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.



என் இதயத்தில் இடம் பிடிக்க வேண்டுமா? சடையைப் பிடித்து சுருக்கிட நினைத்தால் காதல் நிறைவேறுமா? இதற்கு தனி தந்திரம் வேண்டும் என நாகேஷுக்கு சொல்லிக் கொடுக்கிறாரோ மாதவி (சிலோன் எண்டடெயின்மண்ட்ஸ் ஸ்தாபனத்தாரின் திரைகளில் தற்பொழுது திரையிடப்பட்டிருக்கும் "எங்க வீட்டுப் பெண்" படத்தில் நகைச்சுவை தரும்பும் ஒரு காட்சி.

## வட பகுதியில்..

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

"வட பகுதியில் ஓர் அங்குலம் நிலம்கூட சிங்களவர்களுக்குச் சொந்தமாக இல்லை. அங்கே சிங்களவர்கள் வசிக்கும் வீடுகள் கூட அவர்களுக்குச் சொந்தமில்லை. அவ்வீடுகள் தமிழர்களுக்குத்தான் சொந்தம். சிங்களவர்கள் கூலி வேலை செய்பவர்களே தவிர அதற்கு அதிகமான உரிமைகள் சிங்களவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் கிடையாது.

1958 வகுப்புக் கலவரத்தின்போது வட பகுதியில் தமிழ் மக்கள் சிங்களவர்களுக்கு மிக மோசமாகத் தொல்லைகள் கொடுத்தனர். சிங்களவர்களுக்குச் சொந்தமான சாமான்களுக்குத் தீ வைக்கும்போதுகூட தமிழர்களுக்குச் சொந்தமான வீடுகளுக்குத் தீங்கு ஏற்படாத முறையில், சாமான்களை வெளியே இழுத்துப் போட்டு தீ மூட்டினர். அவர்களின் இந்த சிக்கனத்திலிருந்தும் தமக்குச் சொந்தமானவற்றின் மீதுள்ள பற்றுதலிலிருந்தும் சிங்களவர் படிப்பினை கற்றுக்கொள்ள வேண்டும்."

— ஜனதின (10-5-66)

## நல்ல நகைச்சுவைக் கருத்துக்களை அள்ளித் தருபவர் தங்கவேலு

### அவரது இலங்கை விஜயம் சிறந்து விளங்கட்டும்

தமிழ்த் திரைப்படங்களில் தரமான, கருத்துள்ள நகைச்சுவையை அள்ளித்தந்து மக்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் ஒரேயொரு நகைச்சுவை நடிகரான திரு. கே. ஏ. தங்கவேலு தமது குழுவுடன் இம்மாதம் 25-ந் திகதி இலங்கைக்கு விஜயம் செய்கிறார். அவருடன், அவருடைய நரை ஜோடியான எம். சரோஜா, எல். விஜயலட்சுமி ஆகியோருட்பட மொத்தம் 20 பேர் வருகிறார்கள்.



### கலைவாணர் வழியில்...

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் மறைவுக்குப் பின்னர் அவரது வழியிலே பீடு நடை போட்டுவரும் கே ஏ. தங்கவேலு மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்றுவிட்ட ஒருவர் என்பது யாவரும் அறிந்ததே. உடம்பை ஆட்டி அலைத்து, முகத்தை கோணங்கித்தனமாகச்செய்வதுதான் நகைச்சுவை நடிப்பு என்ற நிலை தமிழ்த்திரையுலகை இன்று பற்றிக்கொண்டுவிட்டநேரத்தில், தங்கவேல் ஒருவர்தான் தரமான நகைச்சுவையை அதுவும் நல்ல கருத்துக்களுடன் அள்ளித் தந்துகொண்டிருக்கிறார் என்று கூறலாம்.

### நீங்கா இடம்பெற்றவர்


சர்க்கரையுடன் சேர்த்து குழந்தைகளுக்கு கசப்பு மருந்தை ஊட்டுவதுபோல நல்ல கருத்துக்களை நகைச்சுவையுடன் சேர்த்து மக்களுக்கு ஊட்டி வருகிறார் திரு. தங்கவேலு. பல ஆண்டுகளுக்கு முன்வந்த 'கல்யாண பரிசு நகைச்சுவைப்பகுதியை இன்றும் வானொலியில் கேட்டவுடன், மக்கள் ஆங்காங்கே தம் வேலையை மறந்து அதை ரசித்துக் கேட்டுக்கொண்டிருப்பதைச் சாதாரணமாகக் காணமுடியும். அதே போலவே. திரு. தங்கவேலுவின் 'அடுத்தவீட்டுப் பெண்' நகைச்சுவையையும் மற்றும் பலவற்றையும் பல்லாண்டுகள் சென்றும் மக்கள் புதுமையுடன் விரும்பிக் கேட்கிறார்கள். இதிலிருந்தே திரு தங்கவேலு அவர்களின் கருத்துக்கள் நிறைந்த நகைச்சுவை மக்களை எந்தளவு தூரம் கவர்ந்து விட்டிருக்கிறதுஎனதெரிந்துகொள்ளலாம்.

### வருக வருக

திரு. தங்கவேலு. அவர்கள் நகைச்சுவை என்று கூறி வீணாக உடம்பை அலைக்கழித்துக்கொள்ளாமல் தமது வாய்ப்பேச்சினாலேயே மக்களை விழுந்து விழுந்து சிரிக்க வைக்கும் கருத்துக்களை உதிர்த்து விடுகிறார். திரு. தங்கவேலு தோன்றும் நகைச்சுவைக் கட்டங்களும், கூறும் நகைச்சுவைக் கருத்துக்களும் பல காலங்களுக்குப் பின்பு கூட அதன் தன்மை மாறுது, மக்களுக்கு சலிப்பு அலுப்புத் தட்டாது சிரிப்பை ஏற்படுத்துவதுடன் சிந்திக்கத் தூண்டச் செய்யும் வலிவுள்ளது.

திரு தங்கவேலுவும், அவரது குழுவினரும் சுமார் இரு வாரங்கள் இலங்கையில் தங்கி கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொள்கிறார்கள். அவர்களது கலை நிகழ்ச்சிகள் கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, கண்டி, இரத்தினபுரி ஆகிய இடங்களில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

திரு. தங்கவேலுவினதும் அவரது குழுவினரதும் இலங்கை விஜயம் சிறப்புற அமைய வாழ்த்துகிறோம்.



இலங்கைக்கு விஜயம் செய்திருந்த திரு. எஸ். எஸ். இராசேந்திரன் எம். எல். ஏ. தமிழரசுத் தந்தை திரு. சா ஜே வே. செல்வநாயகம் அவர்களின் இல்லத்திற்கு வருகை புரிந்த போது எடுத்த படம். படத்தில் இலட்சியத் தம்பதிகளுடன், டி. வி. நாராயணசாமி, திரு. சா. ஜே வே. செல்வநாயகம், திருமதி. செல்வநாயகம், ஜனப் மசூர்மவுலானு ஆகியோர் காணப்படுகின்றனர்.

—படப்பிடிப்பு ராஜப்பன்

## யாழ் ஸ்டேடியம் கணக்கு விபரம் எங்கே?

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஸ்டேடியத்தினுடைய வரவு செலவுகள் இதுவரை தணிக்கை செய்யப் படாததையிட்டு யாழ் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர் என்று தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவிருக்கும் ஸ்டேடியத்திற்கு என பெருமளவில் பணம் திரட்டப்பட்டது. சமீபத்தில் எம். ஜி. ஆர். இலங்கைக்கு வந்திருந்தபோதும் அவரைக்கொண்டு கலைநிகழ்ச்சி நடாத்தி பணம் சேர்க்கப்பட்டது. ஆனால் இதுவரை காலமும் எதுவித கணக்கும் காட்டப்படவில்லை.

ஸ்டேடியத்தை நிர்மாணிக்கும் பொறுப்பை யாழ் மாநகரசபையின் புதியநிர்வாகம் ஏற்றுக்கொண்ட பின்னராவது ஸ்டேடிய வரவு செலவுக் கணக்கு தணிக்கை செய்யப்படலாம் என எதிர்பார்த்த மக்கள் இதுவரை அப்படி எதுவும் நடைபெறாததால், ஆத்திரமும் கவலையுமடைந்திருக்கிறார்கள். இந்தப் பணத்தில் பெரும் தொகையை 'பெருச்சாளிகள்" ஒதுக்கிவிட்டதாகவும் மக்கள் மத்தியில் சந்தேகம் நிலவி வருகிறது,

# எம். ஜி. ஆர். செய்யவிருக்கும் புதிய புரட்சி

## 'புதிய உலகம்' உலகமெங்கும் ஒரே நாளில் திரையிடப்படும்

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்கள் சர்வதேச மார்க்கட்டுக்காக தாம் தயாரிக்க விருக்கும் 'புதிய உலகம்' என்ற படத்தை எல்லா நாடுகளிலும், ஒரேநாளில் சுமார் 150க்கு குறையாத தியேட்டர்களில் திரையிட முடிவு செய்துள்ளாரென்று சென்னையிலிருந்து கிடைத்த செய்தியொன்று கூறுகிறது. இது இந்தியத் திரையுலகில் இதுவரை யாருமே செய்யாத ஒரு புதிய சாதனையாக விளங்கும்.

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்கள் சர்வதேச மார்க்கட்டுக்காக 'புதிய உலகம்' என்ற படத்தை தயாரிக்க இருப்பது வாசகர்கள் அறிந்ததே. தற்பொழுது ஒப்பந்தமான படங்களை எல்லாம் முடித்துக் கொடுத்துவிட்டு அவர் 'புதிய உலகம்' படப்பிடிப்பில் இறங்கவிருக்கிறார். இப்படத்திற்கான காட்சிகள் இலங்கையுட்பட பல நாடுகளில் சுடப்படவிருக்கிறது.

இந்தப்படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்ததும் உலகமெங்கும் ஒரே நாளில் இப்படத்தைத் திரையிட மக்கள் திலகம் முடிவு செய்துள்ளார். உலகமெங்கும் உள்ள சுமார் 150க்கு குறையாத தியேட்டர்களில் திரையிடுவதற்கு புரட்சி நடிகர் திட்டமிட்டிருக்கிறாரென்றும் தெரிகிறது. புரட்சி நடிகரின் திட்டம் அமுலானால் இந்தியத் திரையுலகிலே அதுஒரு புதிய சாதனையாகவிளங்கும் என்று சொல்லலாம்.

எம். ஜி. எம். தயாரிப்பான 'கிங் ஆப் கிங்ஸ்' என்ற ஆங்கிலப்படம்தான் இதுவரை உலகெங்கும் ஒரே நாளில் திரையிடப்பட்ட ஒரே படம் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

## 'சவுண்ட் ஆப் மியூசிக்' ஆஸ்கார் பரிசு பெறுகிறது

சென்ற ஆண்டு ஹாலிவுட்டில் வெளிவந்த படங்களில் 'சவுண்ட் ஆப் மியூசிக்' என்ற படம், 'ஆஸ்கார்' பரிசுக்குரியதாக தெரிவு செய்யப்பட்டுளளது. லீ மாரின் சிறந்தநடிகராகவும் ஜூலி கிறிஸ்ரி சிறந்த நடிகையாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆண்டுதோறும் சினிமாத் துறையில் சிறந்து விளங்குபவர்களுக்கு 'ஆஸ்கார்பரிசு' வழங்கப்பட்டுவருவது தெரிந்ததே. 'சவுண்ட் ஆப் மியூசிக்' படம்ஐந்துபரிசுகளைப்பெற்று வெற்றியீட்டியுள்ளது. சிறந்த படம், சிறந்த டைரக்ஷன், சிறந்த எடிட்டிங், சிறந்தஇசையமைப்பு சிறந்த ஒலிப்பதிவு ஆகிய ஐந்திலும் இப்படம் சிறந்ததென தீர்மானிக்கப்பட்டு பரிசு வழங்கப்பட்டது.

சென்ற ஆண்டின் சிறந்த நடிகராக காற் பலோவ் (Cat Ballou) படத்தில் நடித்த லீ மார்வினும், சிறந்த நடிகையாக 'டார்லிங்' என்ற படத்தில் நடித்த ஜூலி கிறிஸ்ரியும் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்.

---

சித்ரா புரொடக்ஷன்ஸாரின் 'சின்னஞ் சிறு உலகம்' படத்திற்காக,

'மல்லிகைப்பூ சிரிக்கையிலே
மனதை விட்டுச்
சிரிக்குதையா

என்று தொடங்கும் பாடல் ஏ. வி. எம். ஸ்டுடியோவில் ஒலிப்பதிவானது.

## எம். ஜி. ஆரின் நகைச்சுவை

பத்மினி பிக்சர்ஸ்சாரின் நாடோடி படத்திர்கான சில காட்சிகள் விஜயா ஸ்டுடியோவில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அக்காட்சியில், நாகேஷும் துணை நடிகையான ஒரு பெண்ணும் அன்று நடித்துக் கொண்டிருந்தார்கள். அதசமயம் மேக்கப்புடன் அங்கே வந்த மக்கள் திலகம், நாகேஷைப் பார்த்து 'என்னப்பா' இன்னும்உன் காட்சி முடியலியா?' என்றார்.

'இன்னும்இல்லே, ஆமா, நீங்க அப்பவே வந்திட்டீங்களா? என்று கேட்டார் நாகேஷ்.

'ஆமாம், அப்ப வந்தது என் தடபுத்தான்' என்று கூறிக்கொண்டே அங்கிருந்து வெளியேற முயன்ற எம். ஜி. ஆரிடப, நாகேஷின் அருகிலிருந்த துணை நடிகை 'வணக்கம் அண்ணேன்' என்றார்.

'அடடே, நீயும் நடிக்கிறாயா? அடையாளமே தெரியலியே' என்றார் எம். ஜி. ஆர். 'அடையாளம் தெரியாத அளவுக்கு அந்தப் பெண் பெருத்துப் போச்சா? என்று கேட்டார் நாகேஷ்கிண்டலாக.

'அதைஎன்வாயாலேயே சொல்லலாமா? இது என் கம்பெனி நடிகை பெயர் தான் மறந்துபோச்சு' என்ற எம். ஜி. ஆர். அந்தப்பெண்ணைப் பார்த்து, 'ஏம்மா! உன் பேர் என்ன? என்று கேட்டார்.

உடனே அருகில் இருந்த நாகேஷ், 'நான் சொல்றேன். 'இந்திராதானே உன் பேரு!' என்றார்.

'நீ தெரிஞ்சு வச்சிருக்கிறதுகூட எனக்குத் தெரியலப்பா?' என்று கூறிவிட்டு மெல்ல அங்கிருந்து நகர்ந்தார் மக்கள் திலகம்



ஏதோ சதித்திட்டம் உருவாகிறது போலும். —சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் இப்பொழுது காட்சியளிக்கும் 'தாயும் மகளும்' படத்தில் அசோகன் ஆதித்தன்.

## ஜெமினியும் சாவித்திரியும் வடக்கே போகிறார்கள்

காதல் மன்னன் ஜெமினி கணேசனும் நடிகையர் திலகம் சாவித்திரியும் இந்திப் படத்தில் நடிக்க வடநாடு செல்ல இருக்கிறார்கள்.




இது சம்பந்தமாக ஜெமினி கணேசன் பின்வருமாறு கூறியிருக்கிறார்:-

'சாவித்திரியும் நானும் வடக்கே போகிறோம். ஆளுக்கு ஒரு இந்திப்படம் 'புக்' ஆகியிருக்கிறது. நான் ஏற்கெனவே, தேவதா, நஸ்ரானா ஆகிய இந்திப் படங்களில் நடித்திருக்கிறேன். ஆனால் அவை சென்னையில் தயாரான இந்திப் படங்கள். சிலமாதங்களுக்கு முன்பு பம்பாய்க்கு சென்றபோது ஒரு இந்திப்படத்தில் நடிக்க எனக்கு அழைப்பு வந்தது. அது ஒரு அரசன் கதை. ஆனால் பல உருக்கமான பயங்கரமான சம்பவங்கள்



நிறைந்த படமாகத் தயாரிக்க இருப்பதாக சொன்னார்கள். வடக்கே வருகிறேன் என்று ஒப்புக்கொண்டிருக்கிறேன்.

'சாவித்திரிக்கும் ஒரு புதுப்படம் வடக்கே 'புக்' ஆகியிருக்கிறது. ஆனால் நான் நடிக்கப்போகிற படத்தில் சாவித்திரி இல்லை. அவள் நடிக்கும் படத்தில் நான் இல்லை. இன்னும் சில நாட்களில் நாங்கள் இருவரும் வடக்கே போகப்போவது உண்மை. பயணம் ஒன்றுதான். ஆனால்படங்கள்வெவ்வேறு.'



தமிழ்த் திரையுலகின் பொருத்தமான ஜோடிகளான மக்கள் திலகமும், சரோஜாதேவியும் கை கோர்த்தபடி இப்படித் தோன்றுகிறார்கள். "தெய்வத்தாய்" படத்தில். இப்படம் விரைவில் சினிமாஸ் திரைகளில் வெற்றிப் பவனிவர விருக்கிறது.

# உங்கள் நோய்?

பதிலளிப்பவர்:

## வைத்தியகலாநிதி என். கந்தையா

க. புவனேர்திரன்,
கொழும்பு-8

கே: எனது வயது 15. உயரம் 4, 2 நிறை 65 ருத்தல், கொழுப்பதற்கும் உயரமாக வளர்வதற்கும் யாது செய்தல் நன்று.

ப: நீங்கள் வளருவதற்கு இன்னும் அநேக வருடங்கள் உண்டு. எனவே தக்க அப்பியாசமும் உணவும்-நோயில்லாமலும் இருக்கவேண்டும். தானுகவே வளர்ச்சியும் கொழுப்பும் அடைந்து-மங்கையர் மருள புவலமீது பவனிவரலாம்.

செல்வி அகிலா,
அனுராதபுரம்.

கே: கருஊமத்தைசெடி வேறு, ஊமத்தைசெடி வேறு அல்லது இரண்டும் ஒன்று? தயவுசெய்து பதில் கூறுங்கள் டாக்டர்?

ப: இரண்டும் வெவ்வேறு பேதங்களிலுண்டு.

க. சிவராசா,
கோப்பாய்.

கே: எனக்கு வயது 20. நிறை 118 சலத்துடன் வெண்கரு போகின்றது. இது 3 வருடங்களாக இருக்கின்றது. இது ஏன் போகின்றது. தயவுசெய்து விபரமாகட்டில் தரவும்.

ப: சாதாரண காலங்களில் மூத்திரத்தில் வெண்கருகாணப்படமாட்டா. சில நோய்களில் சிறப்பாக குண்டிக்காய் (சிறுநீர் பிரித்தி) ரோகங்களில் காணப்படும்.

சாதாரணமாக உணவில்மாறுபாடு இருந்தாலும் ஏற்படலாம். எனவேபுரதச்சத்தைக்குறைத்து மரக்கறி, பழவகைகள் அருந்துதல் நன்று. சிலருக்கு இதனுல் யாதொரு தொந்தரவும் ஏற்படாது. இருந்தும் நோயின் காரணமெனில் சிகிச்சை அவசியம்.

நிறையைக் கூட்டுவது நல்லது. இருந்தும் நீங்கள் ஒரு வைத்தியரின் நேரடிச்சிகிச்சை பெறுதல் சிறந்தது.

எம். இரத்தினம்,
அக்கரபத்தனே.

கே: மணமாகாத என் வயது 20. எப்பொழுதும் முசப்பரு இருந்துகொண்டே இருக்கின்றது. இதனுல் என் முகம் பார்க்க அருவருப்பாக இருக்கின்றது. இதற்கென்ன செய்யலாம்?

ப: இதற்கு அநேகதடவைகள் சுதந்திரன் மூலமாகப் பதிலளித்துள்ளேன். பருவக்கோளாறு ஒரு காரணம். மலபந்தமிருக்க இடங்கொடுக்கலாகாது வெண்மிளகை புனுகில அரைத்துபூசி வரவும்.

கே: கிருஷ்ணபிள்ளை,
அனுராதபுரம்.

கே: என் வயது 60 நான் நித்திரை செய்யும்போது குறட்டை விடுகின்றேன் இதனுல் வீட்டில் இருப்பவர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. இது எனக்கு மரியாதைக் குறைவாய் இருக்கின்றது என்ன செய்யவேண்டும்?

ப: தொண்டையினுள் அந்நிய பொருட்களை தடுப்பதுக்கும், சாப்பிடும்போது உணவு மூச்சுக்குழாய்களில் செல்லாமல் தடுப்பதற்கும் உண்நாக்கு இருக்கிறது. சாதாரணமாக வயதுபோனவர்களும், பருத்தவர்களும்சுவாசிக்கும்போது, இது முன்னும் பின்னும் அசைவதால் இச் சத்தம் ஏற்படுகின்றது இது மல்லாந்து படுத்திருக்கும்போதே ஏற்படும்.

எனவே நீங்கள் மல்லாந்து படுத்து உங்களை அறியாமல் நித்திரையில் இருக்கும்போது தலையை பக்கவாட்டில் சரித்தால் இச் சத்தம் கேட்காது. அல்லது சரிந்து படுக்கவேண்டும். இது நடைமுறையில் சாத்தியமல்ல. எனவே வீட்டிலுள்ள ஒருவரை நீங்கள் தலையை சரித்து வைக்கும்படி கேட்பது நன்று.

'மொழிவாணன்',
பேலியகொடை.

கே: இயற்கையில் உண்டான கோழியின் முட்டையில் சத்து அதிகமா? செயற்கையில் உண்டான கோழியின் முட்டையில் சத்து அதிகமா?

ப: கேள்வியில் அர்த்தம் இல்லை. ஆனுல் நீங்கள் நினைத்தபடி, சேவலின் உதவியின்றி இட்ட முட்டையிலா-அல்லது

> **உங்கள் நோய்?**
>
> 'சுதந்திரன்'
>
> த. பெ. எண். 1183,
>
> கொழும்பு-12.

சேவல் சேர்ந்த கோழியின் முட்டையிலா சத்து அதிகம் எனப்பார்க்குமிடத்து இரண்டிலும் ஒரே அளவு சத்துதான் இருக்கலாம். ஆனுல் முன்னதில் கரு அல்லை-இது சைவமுட்டை பின்னதில் கருவுண்டு அதாவது குஞ்சு பொரிக்கும் தன்மையது.

இ. இராசையா,
பலாங்கொடை.

கே: என் வயது 38. மணமானவன். எவ்வேலையைச் செய்யத் தொடங்கினுலும், மடைப்பீதி அதிகமேற்படுகின்றது. கைவிரல்களிலும் சில வேலை விறைப்பும். நடுக்கமும் ஏற்படுகின்றது தகுந்த ஆலோசனை கூறுங்கள்?

ப: நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அல்லாமலும் நீங்கள் ஏற்கெனவே ஒரு தொழிலின்முயற்சியில்தோல்வியடைந்திருக்கலாம். எனவே முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார் என்பதற்கிணங்க- முயற்சியுடன் திடமனமும் பிரதானம்.

நரம்பு தளர்ச்சியை நீக்குவதற்கு நல்ல சத்துள்ள உணவு வகைகளுடன் உயிருட்டுச் சத்துகளும் சேர்த்தல் நன்று.

செல்வி. ஆர். சத்தியவதி,
உடுவில்.

கே: நான் விஞ்ஞானம்கற்கும் மாணவி, எனக்கு கை நடுக்கம் இருக்கிறது சில வேளைகளில் பலத்த உதறலாகவும் மாறுவதுண்டு. படங்கள் கீறும்போதுதான் இப்படி யேற்படுகின்றது. பல வைத்தியர்களிடமும் காட்டியும் தேவையான பலன் கிடைக்கவில்லை. இதற்கு யாது செய்யலாம்.

ப: இது நரம்பைப் பற்றிய வியாதியாதலின் இதற்கென உள்ள வைத்தியரின் நேரடிச் சிகிச்சை நன்று.

டி. வில்லியம்,
கொழும்பு-15.

கே: மணமாகாத என் வயது 22. சரீரத்தில் சூடு. பசியின்மை, தேகமெலிவு ஆகியன உள்ளன ஏதாவது கை மருந்து கூறுவீர்களா?

ப: சனிநீராடு-கொழுப்பு சத்துள்ள உணவுகள், பழவகைகள் முட்டை பால், மோர், இவற்றை உண்பது நன்று.

உங்களுக்கு ஏதாவது நாட்பட்ட நோய் ஏதும் இருக்காஎனப் பரீட்சித்தல் அவசியம். இல்லாவிட்டால் மனதுக்கு திருப்தியும் ஓய்வும் அவசியம், பகல் உணவின்பின் சிறிது நேரம் உறங்குவது நன்று. ஆனுல் எக்காரணம் பற்றியும் இரவு தூக்கம் தடைபடக் கூடாது.

வெள்ளாட்டு மாமிசம் நல்ல பலனளிக்கும்.

அமுக்கிராக் கிழங்கை பாலில் அவித்துக்காயவைத்து இடித்து தூள் செய்யவும். இதில் காலை மாலை ஒரு தேக்கரண்டி விதம் பசுப் பாலுடன் அருந்திவர நல்ல பலன் கிடைக்கும்.

சாய்ந்தமருது டீன்,
சாய்ந்தமருது.

கே: வயது 26. நிறை 105 ருத்தல். என் உடல்மெலிந்துகொண்டே வருகின்றது. இதற்கு ஏதாவது வழி கூறுங்கள்.

ப: நீங்கள் அன்பன் வில்லியம் என்பவருக்கு கூறிய முறைகளை பின்பற்றல் நன்று.

எம். சரோஜா,
பசறை.

கே: எனது முழங்கைக்குக் கீழ் நிறைய பருக்கள் இருக்கின்றன. பார்வைக்கு அவலட்சணமாக இருக்கிறது. இதற்கு ஏற்ற ஆலோசனை கூறுங்கள்.

ப: உங்கள் வயது குறிப்பிடப்படவில்லை. இருந்தும் மீன் எண்ணெய் தொடர்ந்து குடிப்பது நன்று. சுறுமீன் உண்பதும் நலம்.

வி. செல்லையா,
கேகாலை.

கே: ஐயா! நான் தினமும் பச்சை முட்டை அருந்துகின்றேன், இதனுல் எனக்கு தொண்டையில் சறளி வருகின்றது இதன் காரணமென்ன?

ப: பச்சை முட்டையில் அநேக வகையான கண்ணுக்குத் தெரியாத நோய்க் கிருமிகள் இருப்பதால் அருந்துவது நன்றல்ல. சறளி ஏற்படுவதற்கு பச்சை முட்டை முக்கிய இடத்தை வகிக்கின்றது. எனவே தவிர்க்கவும்.

திருமதி சாஜன்,
யாழ்ப்பாணம்.

கே: ஐந்துமாதக்கெற்பணியாக இருக்கும் எனக்கு, இரவில் படுக்கையில் திரும்பிப் படுக்கும்போது, குடல் கொளுவிக் கொள்கின்றது. இதை தடுப்பதற்கும், இப்போது நான் என்னவகையான உணவு சாப்பிடல் சிறந்ததெனக் கூறவும்.

ப: இது முதற் கெற்பமா என்பதுதெரிவிக்கவில்லை சாதாரணமாக 4.5 மாதங்களில் இப்படி ஏற்படுவது சகஜம் இருந்தும் வாயு சம்பந்தமான உணவுப் பொருட்கள் நன்றல்ல இலகுவில் செமிக்கக்கூடிய உணவுகள் சாப்பிடவேண்டும். முட்டை, ஈரல், பால், மரக்கறிவகைகள் சாப்பிடுவது சிறந்தது. கைக்குத்து அரிசி சாதமே சிறந்தது. மலசலம் ஒழுங்காக நடைபெற வேண்டும். கிட்டிய வைத்தியசாலைக்கு சென்று பரீட்சித்துக் கொள்ளல் சாலச்சிறந்தது.

எஸ் எஸ். ராஜன்,
யாழ்ப்பாணம்.

கே: எனக்கு வயது 36 சில வேளைகளில் கால்களில் பிடிப்பு ஏற்படுகின்றது முதலில் நாரியில் ஏற்பட்டு தொடை முதலிய இடங்களுக்கு வருகின்றது. மிகவும் வேதனை.

ப: இது வாத ரோகத்துடன் சம்பந்தப்பட்டது. 'சாற்றிக் நரம்பின் தாபிதமாகவும் இருக்கலாம். படுக்கையில் இருப்பது சிறந்தது. இலகுவான ஆகார வகைகள் உண்ணல் வேண்டும். ஒரு வைத்தியரின்சிகிச்சைவேண்டற் பாலது.

# த. ம. கழகத்தின் முயற்சி வெற்றி

## உலகத் தமிழர்களுக்கு கா. பொ. இ. வேண்டுகோள்

தமிழ் மறைக் கழகத்தின் முயற்சி பெரு வெற்றியைக் கொடுத்துள்ளது வைகாசி அனுடத்தை திருவள்ளுவர் திருநாளாக தமிழ் நாட்டு அரசாங்கமும் ஏற்றுக் கொண்டு விட்டது இந்த ஆண்டு முதல் இப்பெருநாளை பொது விடுமுறைத் தினமாகவும் தமிழ் நாட்டு அரசு பிரகடனப்படுத்தியுள்ளது.

'முன்னைய ஆண்டுகளைப் போன்று இவ்வாண்டும் யூன் மாதம் 2ம் திகதி வியாழக்கிழமையன்று திருவள்ளுவர் திருநாளை தமிழ் பேசும் மக்கள் தம் வீடுகள் தோறும் கொண்டாட வேண்டுமென்றும் அன்று திருவள்ளுவருக்கு ஊர் தோறும் விழா எடுக்க வேண்டுமென்றும் உலகமெங்கும் உள்ள தமிழ் மொழி பேசும் மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்' என்று உலகத் தமிழ் மன்றத் தலைவரும், தமிழ் மறைக் கழகத் தலைவருமான பண்டிதர் கா. பொ. இரத்தினம் பா. உ அவர்கள் வள்ளுவர் திருநாளை யொட்டி உலகம் வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு விடுத்துள்ள அறிக்கை யொன்றில் தெரிவித்துள்ளார்.



மேலும் அந்த அறிக்கையில் அவர் தெரிவித்திருப்பதாவது: எமது தமிழ் மறைக் கழகம் சாதி, சமய, ரசியல் வேறுபாடின்றி வைகாசி அனுடத்தை வள்ளுவர் திருநாளாக உலகமெங்கும் கொண்டாடச் செய்து வந்துள்ளது. சென்ற பதினைந்து ஆண்டுகளாக வள்ளுவர் திருநாளுக்கு அரசாங்க விடுமுறை கொடுக்குமாறு தமிழ் நாட்டு அரசை தொடர்ந்து கேட்டு வந்தது. தமிழ் நாட்டு அரசு இந்த ஆண்டில் வைகாசி அனுடத்தை வள்ளுவர் திருநாளாக ஏற்று யூன் 2ம் திகதியை அரசாங்க விடுமுறை நாளாகப் பிரகடனம் செய்து வள்ளுவரைப் போற்றியுள்ளது.

இலங்கையிலும் யூன் 2 அரசாங்கப் பொது விடுமுறை நாளாக இம்முறை அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே இந்நன்னுளை யூன் 2ல் தமிழினத்தின் பெருநாளாகக் கொண்டாடி வள்ளுவனைப் போற்றுதல் தமிழ் மக்களினது தலையாய கடனாகும்.

## நமது...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றைப் பறைசாற்றும் வாசகனைத் தைத்தல் தவிர்க்க முடியாததாகும். அவ்வாறு தம்முடைய மனம் புண்பட்டு விட்டதெனக் கருதக் கூடியவர்களுக்கு மாப்பஸான் எழுதிய 'வைர அட்டிகை' என்ற சர்வதேசப் புகழ்பெற்ற சிறுகதையைப்பற்றி ஞாபகமூட்ட விரும்புகின்றோம். அக்கதையும் நடுத்தர வகுப்பின் கீழ்க்கட்டிலுள்ள ஓர் எழுதுவினைஞனுடைய பலவீனங்கள், சிக்கல்கள், வாழ்க்கையைப்பற்றிக் கொண்டுள்ள போலியான மதிப்பீடுகள். ஆகியனவற்றைக் குத்திக்காட்டுகின்றது. 'அந்தச் சிறுமைகளுஞ் சேர்ந்தே அவர்களைப் பூரண மனிதர்களாக்குகின்றன' எனக் கதாசிரியர் கருதுகின்றார்.

எஸ். பொன்னுத்துரை அவர்களுடைய நீண்ட ஒரு தொடர் கதையை முதலிற் பிரசுரித்த பெருமை நம்மையே சாருகின்றது. ஈழத்து இலக்கிய உலகில் 'பிரச்சினைக்குரிய எழுத்தாளர்' எனக் கருதப்படும் எஸ் பொன்னுத்துரை அவர்களைப்பற்றிய அறிமுகம் தமிழ் வாசகர்ளுக்குத் தேவையில்லை சடங்கிலே தொனிப்பொருளையே கதைக்குக் கருவாகவும் உயர்த்தும் வேறொரு முறையை அவர் அறிமுகப்படுத்தியுள்ளார். தர்க்கத்திற்கு இடமளிக்கும் இயல்பிற்கு ஏற்றதாகவே பல சாமர்த்தியங்களுள்ள அவருடைய ஆற்றல்கள் அமைந்துள்ளன.

சடங்கு பற்றி நமது வாசகர்களுடைய அபிப்பிராயம் என்ன? உங்களுடைய சுருக்கமான விமர்சன அபிப்பிராயங்களை அறிய விரும்புகின்றோம்.

"சடங்கு விமர்சனம், மே/பா சுதந்திரன், த பெ. இல. 1183, கொழும்பு" என்ற முகவரிக்கு உங்கள் விமர்சனங்களை அனுப்பி வைக்கவும். தகுதியானவை பிரசுரமாகும்.

— ஆசிரியர்.

## உலக மகாநாடு...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யிறந்தார். உலகத்துப் பேரறிஞர்களெல்லாம் போற்றும் இந்த மகாத்மாவின் போதனைகளை வளர்ந்து வரும் வாலிப சமுதாயம் ஏற்றுப் புரட்சிகரமான புதியதோர் புதிய சமுதாயத்தை ஆக்குவதிலும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பெருமையை உணருவதிலும் தம் வாணுளைப் பலனுடையதாகச் செய்து உண்மை அறிவையும், உண்மைச் சுதந்திரத்தையும் அடைந்து இன்புறுக.




முழு நீள அறிவியல் விசித்திரக் கதை

# மண்ணிற்கு மேலே...

அரியாலையூர் த. இந்திரலிங்கம்

'ஹோட்டல் ஒலிம்பிக்'இன் பின் பக்கமிருந்த மைதானத்தில் அவுஸ்திரேலியக் கோஷ்டிக்கும் ஜப்பான் கோஷ்டிக்குமிடையே உதை பந்தாட்டப்போட்டி மிக ஜரூராக நடந்து கொண்டிருந்தது. மைதானத்தைச் சுற்றி ஒரே ஜனத்திரள். நகரே திரண்டுவந்து அந்தப் போட்டியைப் பார்த்துக் கொண்டிருந்தது. மைதானத்தின் தரை மண் தரையாக இருக்கவில்லை, சிமென்ட் போட்டுத் தளமாக்கப்பட்டிருந்தது ஒரே சமதளமாக இருந்தால் ஓடுபவர்களை வழுக்கி விழச் செய்துவிடுமாதலால், நிலத்திலே இடையிடையே பள்ளம் பள்ளமாகச் சதுரக் கோடுகள் போடப்பட்டிருந்தன அக்கோடுகளைப் பார்க்கும்போது, அத்தளத்தை அப்படியே சதுரம், சதுரமாகப் பெயர்த்து எடுதது விடலாம் போலிருந்தது. அவ்வளவு அழகாகவும், அமைப்பாகவும் இருந்தது, அம்மைதானத்தின் தளம்! இவ்வளவு பணம் செலவு செய்ய அவர்களுக்கு எப்படித்தான் முடிந்தது.

மக்களின் கண்கள், இமைக்கக் கூட மறந்து உதைபந்தாட்டத்தையே நோக்கிக் கொண்டிருந்தன. இரண்டு கோஷ்டிகளும் திறமையாக விளையாடிய காரணத்தினால் ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக அமைந்திருந்தது.

திடீரென்று எவரும் எதிர்பாராத வண்ணம் பந்து, மிக வேகமாக அவுஸ். கோஷ்டியின் பந்து காப்பாளரை நோக்கி உதைக்கப்பட்டது. அவர்களின் கோஷ்டியிலிருந்த ஒருவர் அதனைத் தடுத்து நிறுத்தி ஜப்பான் பந்து காப்பாளரை நோக்கி உதைக்க முயன்றார். பந்தின் பின்னால் ஓடிவந்த ஜப்பான் கோஷ்டி. வீரர் அதனைத் தடுத்தார். இருவரது கால்களிடையேயும் பந்து நின்று தத்தளித்தது. போட்டி முடிவடையும் நேரம் நெருங்கிவிட்டதாலும், இதுவரை இரண்டு பகுதியாரும் சம 'கோல்'களைப் பெற்றிருந்ததாலும், இம்முறை யார் பக்கம் ஜெயிக்கிறதோ அப்பக்கமே வெற்றியடையக் கூடியதாக இருந்ததாலும் இருவரிடையேயும் போட்டி மிக்கக் கடுமையாக இருந்தது. பார்வையாளர்களின் கால்களும் வெறுந்தரையை, உணர்ச்சிவசத்தால் உதைத்துக் கொண்டன. மத்தியஸ்தரும்புகுந்து, புகுந்து, பந்து விடுபட்டுவிட்டதா என்று பார்த்தார். அதே சமயம்......... அந்த இரண்டு வீரர்களும், பந்துடன் 'மோததற்' போராட்டம் நடத்திக் கொண்டிருந்த இடம்-தளம்-ஒரு சிறு சதுரமாக மேல் நோக்கித் திறந்து கொண்டது. வேகமாக அது மேல் நோக்கித் திறந்தால் அதன் மேல் நின்று 'இழுபறிப்' பட்டுக்கொண்டிருந்த இருவரும் எற்றப்பட்டு அப்பால் விழ்ந்தனர். பந்து இன்னொரு பக்கம் சென்று விழுந்தது. பேயைக்கண்டது போல மத்தியஸ்தர் பதறியடித்துக் கொண்டு ஒன்பது அடிதூரம் சென்று பின் எட்டிப்பார்த்தார். பார்வையாளர்களெல்லாரும் அதிசயித்துத்திகைத்தனர். விறுவிறுப்பான உதைபந்தாட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த சிலரது உடலிலும் அந்த 'விறுவிறுப்பு' உண்டாகியதால் அவர்களது உடல் 'டைப்' அடிக்க ஆரம்பித்தது.

'ஙொய்... ங்... ங்... ங்' என்ற ஒலியைக் கிளப்பிய வண்ணம் பறக்கும் தட்டு அந்தப் பாதை வழியாக மேல் நோக்கி எழுந்தது. அதைக்கண்டதும் பார்வையாளர்கள் 'ஆ' என்று அலறினர். மைதானத்தினுள்ளே நின்று கொண்டிருந்த விளையாட்டு வீரர்களிற் சிலர் 'தடால்...தடால்' என்று மயக்கம் போட்டு விழுந்தனர்.

பறக்கும் தட்டு மெதுவாக மேல் நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அதேசமயம் நான்கு 'ட்ரக்குகள்' நிறைய ஆயுதந்தாங்கிய பொலீசார் வந்து இறங்கி ஹோட்டல் ஒலிம்பிக்கைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். ஹோட்டல் ஒலிம்பிக்கினுள்ளிருந்தோ அதன் பின்னிருந்த விளையாட்டுமைதானத்திலிருந்தோ ஒரு அணுவைக் கூட வெளியே விடக்கூடாது என்று கட்டளையிட்டார், அத்துப்பறியும் நிபுணர். அவரது காதுகளிலே வயர்லெஸ் ரேடியோக்கருவி பொருத்தப் பட்டிருந்தது.

(வளரும்)

## வினாக்கள் இங்கே

1. இலங்கையின் முதலாவது தபால் முத்திரை எந்த ஆண்டு வெளிவந்தது?
2. யூகோஸ்லாவியாவின் ஜனதிபதி யார்?...
3. மலை ஆடு அதிகமாக எங்கே காணப்படுகின்றது?...
4. திருக்குறள் முழுவதையும் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்தவர் யார்? ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்தவர் யார்?... லத்தின் மொழியில் மொழிபெயர்த்தவர் யார்?...
5. உலகத்தில் பிரசித்தி பெற்ற கடிகாரம் எங்குண்டு?... அதன் பெயர் என்ன?...
6. உலகில் மிகப் பழைமையான கட்டிடம் எது?... அது எங்குண்டு?...
7. உலகில் உயரமான கோபுரம் எது?
8. இலங்கையில் உயரமான மலை எது? அதன் உயரமென்ன?...
9. ரேடியோவைக் கண்டு பிடித்தவர் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
10. நாலடியாரையும், திருவாசகத்தையும் ஆங்கிலத்தில்மொழிபெயர்த்தவர் யார்?...

## தப்பிவிட்ட கப்பல்!

—சே. குணரத்தினம்.—

தம்பி விட்ட கப்பலொன்று
தாவி வருகுது—நதியில்
ஏறி வருகுது.

'தும்பி' மேலே ஏறி நின்று
தூங்கி வருகுது—கப்பல்
தாங்கி வருகுது.

காற்று மெல்ல வீச, வீச
கரைக்கு வருகுது—கப்பல்
விரைந்து வருகுது.

பார்த்து நின்ற தம்பி கையைக்
கொட்டிச் சிரிக்கிறன்—தும்பி
எட்டிப் பறக்குது.

நீண்டநேரம் நீரில் கிடந்து
ஊறிப் போகுது—கப்பல்
மாறிப் போகுது.

தாண்டு கப்பல் போகு முன்பே
துள்ளி ஓடினன் தம்பி
பள்ளி(க்) ஓடினன்.

# காந்தியார் புரிந்த 'குறள்' திருட்டு

—எம். அரும்பொருள்—

பாரதத்திலே தோன்றி மலர்ந்து மணம் பரப்பி அதிலே மடிந்த மலர்களில் ஒன்றுதான் 'குறள்' திருடியவர் என்று இங்கு கூறப்படும் காந்திஜி. சத்தியம் தவறுது வாழ்ந்து காட்டிய உத்தமன் காந்திஜியின் வாழ்விலே நடந்த ஒரு சுவையான சிறு அம்சம் தான் இந்த 'குறள்' திருட்டு.

தாயகமாம் பாரதத்தில் காந்திஜி தோன்றி பதிஞுராண்டுகள் நகர்ந்த பின்னர் அவரும் அவரது உறவினர் ஒருவரும் புகைபிடிக்கவேண்டும் என்று ஆவல் கொண்டனர். புகை எதற்காகப்பிடிப்பது என்பதோ ஒருவருக்கும் புரியாது. காந்திஜிக்கு புகை பிடிப்பதில் உள்ள நன்மையோ வாசனையோ அவரைத் தூண்டவில்லை. ஒரேயொரு காரணம் தான் அவரை அந்த நிலைக்கு கொண்டு வந்தது. வாயிலிருந்து அதிகமான புகையை விடுவதே அவருக்கு இன்பமாக தோன்றியது. இந்த அபிலாசையைப் பூர்த்தி செய்யப் பணம் இல்லையே.

காந்திஜியின் சிற்றப்பா சிகரெட்பிடிப்பவர் அவர் பிடித்துவிட்டு வீசியெறியும் சிகரட் 'குறள்'களை மறைமுகமாகத் திருடியே இந்த ஆசையைப் பூர்த்தியாக்க முனைந்து சிகரெட் குறள் திருடும் முயற்சியில் அவரும் அவரது நண்பனும் குதித்தனர். இம் முயற்சியினால் போதிய பயன் அடைய முடியவில்லை. காரணம், காந்திஜியின் சிற்றப்பா வீசியெறியும் சிகரெட் குறள்கள் மிகவும் சிறியனவாகையால் அதிலிருந்துவரும் புகை அதிகமில்லை. இதனால் மனமுடைந்த இருவரும் பீடியாவது வாங்கிப்புகைக்க துணிந்தனர். இதற்கு பணம் தடைவிதித்தது. ஆகவே வேலைக்காரருடைய பணத்தை திருடி பீடிவாங்கிப் புகைத்தனர். பீடியை வைப்பதற்கு இடமின்றி சுமார் ஒரு வாரம் தவியாய்த்தவித்தனர். இப்படியானபிரச்சினையினால்வேறு ஒரு ஆராச்சியில் முனைந்தனர். ஏதோ ஒரு விதமான மரத்தின் தண்டுகளில் துவாரம் இருப்பதாகவும் அதைப் புகைத்தால் புகைவரும் என்பதை அறிந்து அதை உபயோகித்தனர். எவ்வாறயினும் இவைகளால் போதிய திருப்தியை அடைய முடியவில்லை.

சுதந்திரமாக வாழ முடியவில்லையே என்ற கவலையினால் தற்கொலை செய்வதென்ற முடிவுக்கு வந்தனர் இருவரும். தற்கொலைக்கு விஷம் தேடினர். இன்று போல் அன்று நச்சுத்திராவங்கள் அதிகமாக தலையெடுக்கவில்லையே. அவ்வாறிருந்தாலும் பணம் வேண்டுமே, விஷம் தேடியலைந்த உள்ளங்களுக்கு ஊமத்தம் விதைகளே கிடைத்தன. மரத்தை எண்ணி ஏங்கிய உள்ளங்கள் கடமைக்காக இரண்டு மூன்று விதைகளையுண்டன. கடவுளும் கருணைகாட்டினர். தப்பிவிட்டனர்.

அன்றும் சுதந்திரமாக வாழ முடியவில்லையே என்று தற்கொலைக்கு முற்பட்ட காந்திஜி பின்னர் ஒரு நாட்டின் விடுதலைக்காகப் போராடினர். என்றும் சுதந்திரத்தையே எண்ணிக்கலங்கிய உள்ளம் அவரது என்பது தெளிவாகின்றது.

குட்டிக்கதை

## உதவி

ராணி சிறுமியாக இருந்தாலும், இயல்பாகவே பிராணிகளிடத்தில் இரக்கமுடையவள். வண்ணாத்திப்பூச்சி, கிளி, பொன்வண்டு, தும்பி, நாய், பூனை முதலிய சிறிய பிராணிகளை அன்புடன் வளர்ப்பாள். அவைகளுக்கு ஒருபோதும் துன்பம் விளைவிக்கமாட்டாள். சிறிய பிராணிகளைத் துன்புறுத்தும் துட்ட குணமுடைய சிறுவர்களைக் கண்டிப்பாள்.

ஒருநாள் கல்லூரி விட்டதும் ராணி வீட்டுக்கு விரைவாக வந்துகொண்டிருந்தாள். வரும்வழியில் வானங்கறுத்து மழை லேசாகத் தூறத் தொடங்கியது. தூற்றல் படாமலிருக்க ராணி ஒரு புளியமரத்தின் கீழ் ஒதுங்கிநின்றுள்.

மழையும் "சோ"வெனப் பேரிரைச்சலோடு பெய்ததால் புளியமரத்தின் கீழ் வெள்ளம் பெருகியது.

திடீரென ஒரு கிளி மரத்திலிருந்து "தொப்"பென்று வெள்ளத்துள் விழுந்தது. ராணி வெள்ளத்துள் தத்தளித்துக் கொண்டிருந்த கிளியை எடுத்து, தனது சட்டையால் கிளியின் ஈரத்தை உலர்த்திவிட்டு அக்கிளியையும் வீட்டுக்கு கொண்டு சென்றுள்.

ராணியின் தாயார், ராணி செய்த சீவகாருண்யத்தை மெச்சினுள். சிறிது நேரம் செல்ல கிளியும் பறந்தோடி விட்டது.

இது நடந்து பல நாட்களுக்குப் பின்பு.........

ஒருநாள் ராணி ஆற்றில் நீராடிக் கொண்டிருந்தாள். திடீரென்றுபெரிய மழையும் பெய்யத் தொடங்கியது ஒரு சுழியில் அகப்பட்டு ராணி தத்தளித்துக் கொண்டிருந்தாள்.

"ஐயோ! கடவுளே! என்னைக் காப்பாற்ற ஒருவருமில்லையா? இன்று நான் இறக்க வேண்டியதுதானு?" என்று நினைத்து மனம் வருந்திஞள்.

அப்போது ஆற்றில் குளிக்க வந்த ஒரு பெரிய மனிதர் சுழியில் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த ராணியைக் காப்பாற்றிக் கரைக்குக் கொண்டுவந்தார்.

"நான் முன்பு ஒரு முறை வெள்ளத்தில் தத்தளித்த கிளியைக் காப்பாற்றியதால் தான், என்னையும் அந்தப் பெரியவர் ஆபத்துவேளையில் காப்பாற்றினுர்" என்று நினைத்து மனச்சந்தோஷமடைந்தாள் ராணி.

## விடைகள் இங்கே

1. 1-4-1857-ம் ஆண்டு.
2. மார்ஷல் டிட்டோ.
3. திபேத்து.
4. பிரெஞ்சு மொழியில் மெமிரேடர், ஜெர்மன் மொழியில் கிரால், லத்தின் மொழியில் வீரமாமுனிவர்.
5. வண்டன்-'பிக்பென்'.
6. சியோப்ஸ் பிரமிட்கட்டிடம் எகிப்தில் உண்டு.
7. ஈபெல் கோபுரம்.
8. பேதுறு தாலகாலை மலை 8292 அடி உயரம்.
9. மார்க்கோனி, இத்தாலி.
10. ஜி யூ. போல்.

மூர்த்தி,
மட்டுகர்.

என்று வரும் என ஆவலோடு பல மாதங்களாக காத்திருந்த படம்!


மே 24 முதல்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனி தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) மொடேன் (பண்டாரவளை) மொடேன் (பதுளை)
விஜிதா (அட்டன்) தீவொளி (நுவரெலியா)

★ தமிழகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றி யீட்டிய உன்னத திரையோவியம்.
★ மக்கள் திலகம், சரோஜாதேவி ஆகியோரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உயர்ந்த நடிப்பு
★ விஸ்வநாதன்—ராமமூர்த்தியின் அருமையான இசையமைப்பு
★ பயங்கர சண்டைக் காட்சிகள், கண்குளிரும் காதற் கட்டங்கள்

எம். ஜி. ஆர்., சரோஜாதேவி, பண்டரிபாய், அசோகன், நம்பியார் நாகேஷ் நடித்த

# தெய்வத்தாய்



கடைசி வாரம்
கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
நவராத்திரி

# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

செல்லமகால் (கொழும்பு) நெல்சன் (திருமலை) இம்பீரியல் (மட்டக்களப்பு) றீகல் (கண்டி)
றீகல் (கம்பளை) வின்சர் (யாழ்ப்பாணம்)

அசோகன், ஆநந்தன், நாகேஷ், கே. ஆர். விஜயா, ராமதாஸ், வி. கே. ராமசாமி, மனோரமா, எம். வி. ராஜம்மா, ஆகியோர் தோன்றும்

# தாயும் மகளும்



கொழும்பில்—8வது வாரம் கெயிட்டி திரையில் கலங்கரை விளக்கம்
எம். ஜி. ஆர்., சரோஜாதேவி—நம்பியார், நாகேஷ்

# இப்பொழுது அமோக வெற்றியுடன் காண்பிக்கப்படுகின்றது

சென்ட்ரல்—மருதானை ஈ·ரோஸ்—பாமன்கடை
ராணி—யாழ்ப்பாணம் லிபர்ட்டி—ஹட்டன் ஜோதி—திருகோணமலை ராஜேஸ்வரா—மட்டக்களப்பு
(3வது வாரமாக)

அடுத்த திரைகளில்

கதையமைப்பிலே ஒரு புதுமை
கருத்திலே ஒரு இனிமை

இன்றைய ஈழத்தின் இதயக் குரல் வீட்டுக்கும் நாட்டுக்கும் தேவை ஒற்றுமை! ஒற்றுமை!! இதை வலியுறுத்தும் படம்.

'எங்க வீட்டுப் பிள்ளை' புகழ் விஜயா கொம்பைன்சாரின் தயாரிப்பு
'இரவும் பகலும்' புகழ் ஜெய்சங்கர்-வசந்தா
ஏ. வி. எம். ராஜன்—விஜயநிர்மலா
எம். ஆர். ராதா, எஸ். வி. சுப்பையா, வி. நாகையா, ஓ ஏ.கே. தேவர், தங்கவேலு, நாகேஷ் மனோரமா



காலமெல்லாம் கருத்தில் நிலைத்து நிற்கும் இனியதொரு குடும்பச் சித்திரம்
இது வெறும் கதையல்ல, வாழ்க்கைப் பிரச்சினையின் பிரதிபலிப்பு!

கதை:— சக்ரபாணி
டைரெக்ஷன்:— சாணக்கியா
இசை:— கே. வி. மகாதேவன்
பாடல்!— கவிஞர் கண்ணதாசன், ஆலங்குடிச்சோமு

# எங்க வீட்டுப் பெண்


இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1966-ம் வருடம் மே மாதம் 18-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.